

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
# புரட்சித்தலைவி அம்மாவின்
# உரைகளில் மலர்ந்த
# முத்தான கதைகள்

சிறப்பு வெளியீடு எண். 49

# தமிழரசு

இலவச வெளியீடு

மே 2015

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
110, அண்ணா சாலை
சென்னை – 600 002.

# அறிமுகவுரை

தமிழக மக்களின் நலனே தன் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கடந்த 2011ஆம் ஆண்டு மூன்றாம் முறையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்று, அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்று ஆற்றிய உரைகளில் மலர்ந்த முத்தான கதைகள், மனித வாழ்க்கைக்குத் தேவையான அறநெறிக் கருத்துகளையும் வரலாற்றுச் செய்திகளையும் மக்கள் மனதில் நீங்கா இடம் பெறச் செய்தன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உரைகளில் இடம்பெற்ற இக்கதைகளைத் தொகுத்து **"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் உரைகளில் மலர்ந்த முத்தான கதைகள்"** எனும் பெயரில் நூலாக செய்தி–மக்கள் தொடர்புத்துறை வெளியிட்டுள்ளது.

இப்பணியைச் சிறப்புற செய்த செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் திரு. ஜெ. குமரகுருபரன் இஆப அவர்களையும், உறுதுணை புரிந்த செய்தித்துறை அலுவலர்களையும் பாராட்டுகிறேன்.

மூ. இராசாராம் இஆப
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

# புரட்சித்தலைவி அம்மா உரைகளில் மலர்ந்த முத்தான கதைகள்

## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | நாள் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு (சேலம் – மாவட்ட அரசு விழா) | 22.07.2002 | 1 |
| 2. | தர்மம் தலை காக்கும் (மதுரை – அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா) | 23.07.2002 | 4 |
| 3. | ஒற்றுமையே வலிமை (வேலூர் – அரசு விழா) | 04.02.2003 | 8 |
| 4. | அதீத கற்பனை (ஈரோடு – அரசு விழா) | 12.02.2003 | 10 |
| 5. | நிறைவு தருவது (விழுப்புரம் – அரசு விழா) | 27.02.2003 | 11 |
| 6. | ஒப்பற்ற நீதி (பெரம்பலூர் – அரசு விழா) | 06.03.2003 | 13 |
| 7. | மகன் தந்தைக்கு ஆற்றிய நன்றி (பெரம்பலூர் – அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா) | 06.03.2003 | 15 |
| 8. | நொடியில் மாறிடும் மனம் (பெரம்பலூர் – அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா) | 06.03.2003 | 17 |
| 9. | ஒரே ஒரு கோடி (கரூர் – அரசு விழா) | 07.03.2003 | 19 |
| 10. | குதிரை முட்டை (திண்டுக்கல் –அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா) | 07.03.2003 | 20 |

| வ. எண் | தலைப்பு | நாள் | பக்கம் |
|---|---|---|---|
| 11. | உறுதியும் உழைப்பும் (திருவாரூர் – அரசு விழா) | 08.03.2003 | 22 |
| 12. | மனிதப் போலிகள் (திருவாரூர் – அரசு விழா) | 08.03.2003 | 25 |
| 13. | மரங்களைக் காப்போம் (தருமபுரி – அரசு விழா) | 09.03.2003 | 27 |
| 14. | உண்மையே உயர்ந்தது (தருமபுரி – அரசு விழா) | 09.03.2003 | 30 |
| 15. | யார் அறிவாளி ? (திருச்சி – அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா) | 10.03.2003 | 33 |
| 16. | பெண்ணின் மதி நுட்பம் (திருநெல்வேலி – அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா) | 13.03.2003 | 36 |
| 17. | சேமிப்பின் அவசியம் (திருநெல்வேலி – அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா) | 13.03.2003 | 40 |
| 18. | வள்ளல் மனம் வேண்டும் (திருநெல்வேலி – அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா) | 13.03.2003 | 43 |
| 19. | அவதாரம் (தூத்துக்குடி – அரசு விழா) | 14.03.2003 | 47 |
| 20. | தயையும் கொடையும் பிறவிக் குணம் (தூத்துக்குடி– அரசு விழா) | 14.03.2003 | 51 |
| 21. | அதே முகம் (தூத்துக்குடி – அரசு விழா) | 14.03.2003 | 54 |

| வ. எண் | தலைப்பு | நாள் | பக்கம் |
|---|---|---|---|
| 22. | அறம் செய்; அன்றே செய் (கன்னியாகுமரி – அரசு விழா) | 15.03.2003 | 57 |
| 23. | உழைப்பின் அருமை (கன்னியாகுமரி – அரசு விழா) | 15.03.2003 | 59 |
| 24. | தானமே உயர் பண்பு (கன்னியாகுமரி – அரசு விழா) | 15.03.2003 | 62 |
| 25. | கொடுப்பதே கிடைக்கும் (திருவள்ளூர் – அரசு விழா) | 04.07.2003 | 65 |
| 26. | தெரியாமல் செய்த தவறு (திருவள்ளூர் – அரசு விழா) | 04.07.2003 | 67 |
| 27. | எதுவும் நல்லதே (நாமக்கல் – அரசு விழா) | 16.07.2003 | 68 |
| 28. | இரண்டு பொய்யர்கள் (நாமக்கல் – அரசு விழா) | 16.07.2003 | 72 |
| 29. | அன்புத் தாய் (சேலம் – அரசு விழா) | 27.08.2003 | 74 |
| 30. | போலிச் சாமியார் (புதுக்கோட்டை – அரசு விழா) | 01.09.2003 | 77 |
| 31. | பேராசை (புதுக்கோட்டை – அரசு விழா) | 01.09.2003 | 80 |
| 32. | ஆணவம் அழிவைத் தரும் (நீலகிரி – அரசு விழா) | 13.09.2003 | 83 |
| 33. | கஞ்சன் (நீலகிரி – அரசு விழா) | 13.09.2003 | 86 |
| 34. | தானே கடவுள் (நீலகிரி – அரசு விழா) | 13.09.2003 | 89 |

| வ. எண் | தலைப்பு | நாள் | பக்கம் |
|---|---|---|---|
| 35. | பெருமக்கள் வாழ்ந்த பூமி (சிவகங்கை – அரசு விழா) | 23.09.2003 | 91 |
| 36. | தப்பாமல் பிறந்த பிள்ளை (சிவகங்கை – அரசு விழா) | 23.09.2003 | 94 |
| 37. | காட்டு நாயின் தந்திரம் (திருவண்ணாமலை – அரசு விழா) | 07.10.2003 | 96 |
| 38. | உள்ளாற்றல் (திருவண்ணாமலை – அரசு விழா) | 07.10.2003 | 99 |
| 39. | காலம் கடந்த ஞானோதயம் (திருவண்ணாமலை – அரசு விழா) | 07.10.2003 | 101 |
| 40. | புதியவை (நாகப்பட்டினம் – அரசு விழா) | 13.10.2003 | 103 |
| 41. | பாவ மன்னிப்பு (நாகப்பட்டினம் – அரசு விழா) | 13.10.2003 | 105 |
| 42. | குடிகாரனின் தத்துவம் (விருதுநகர் – அரசு விழா) | 22.10.2003 | 107 |
| 43. | குலம் ஒன்று; குணம் வேறு (விருதுநகர் – அரசு விழா) | 22.10.2003 | 109 |
| 44. | மதிநலம் மிக்க மன்னர் (தஞ்சாவூர் – அரசு விழா) | 27.10.2003 | 111 |
| 45. | பணத்தாசை (தஞ்சாவூர் – அரசுவிழா) | 27.10.2003 | 114 |
| 46. | சோம்பேறித்தனம் (தஞ்சாவூர் – அரசு விழா) | 27.10.2003 | 116 |
| 47. | மனம் (சென்னை – தமிழ்நாடு காவல் துறையின் முதல் மகளிர் சிறப்புக் காவல் அணித் தொடக்கவிழா) | 30.01.2004 | 118 |

| வ. எண் | தலைப்பு | நாள் | பக்கம் |
|---|---|---|---|
| 48. | நம்பிக்கை (தேனி–ஆண்டிப்பட்டி–அரசு விழா) | 05.02.2004 | 119 |
| 49. | சுயநலம் (தேனி–ஆண்டிப்பட்டி–அரசு விழா) | 05.02.2004 | 122 |
| 50. | வாய் ஜாலம் (தேனி – ஆண்டிப்பட்டி – அரசு விழா) | 05.02.2004 | 125 |
| 51. | பணம் உண்டு; மனம் இல்லை (கிருஷ்ணகிரி மாவட்ட துவக்க விழா) | 09.02.2004 | 128 |
| 52. | உழைப்பால் உயர வேண்டும் (கிருஷ்ணகிரி மாவட்ட துவக்க விழா) | 09.02.2004 | 131 |
| 53. | அறிவு (கிருஷ்ணகிரி மாவட்ட துவக்க விழா) | 09.02.2004 | 134 |
| 54. | சிரிப்பின் மறுபக்கம் (சென்னை – திரைப்பட விருதுகள் வழங்கும் விழா) | 03.12.2004 | 136 |
| 55. | பொறாமை (கிருஷ்ணகிரி – அரசு விழா) | 15.12.2004 | 138 |
| 56. | அன்பிற் சிறந்தவர் (சென்னை – தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழா) | 18.02.2005 | 140 |
| 57. | கடவுள் இருக்கும் இடம் (திருவள்ளூர் – அரசு விழா) | 19.07.2005 | 144 |
| 58. | துரியோதனன் வஞ்சகம் (நீலகிரி – பைக்காரா புனல்மின் நிலைய திறப்பு விழா) | 06.09.2005 | 147 |

| வ. எண் | தலைப்பு | நாள் | பக்கம் |
|---|---|---|---|
| 59. | ஆக்கும் சக்தி<br>(தஞ்சாவூர் – அரசு விழா) | 09.09.2005 | 151 |
| 60. | மூங்கிலின் வளர்ச்சி<br>(சென்னை – மாநில உழவர் மாநாடு) | 05.10.2005 | 154 |
| 61. | கெட்டிக்காரன்<br>(சென்னை – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் பவளவிழா) | 13.10.2005 | 156 |
| 62. | மனிதனின் மதிப்பு<br>(திருச்சி – ஸ்ரீரங்கம் – அரசு விழா) | 19.06.2011 | 158 |
| 63. | பரிசு படுத்திய பாடு<br>(திருவள்ளூர் – அரசுவிழா) | 15.09.2011 | 160 |
| 64. | ஊர் வாய்<br>(திருச்சி – ஸ்ரீரங்கம் – அரசு விழா) | 13.02.2012 | 162 |
| 65. | தன்வினை தன்னைச் சுடும்<br>(திருச்சி – அரசு விழா) | 13.02.2012 | 164 |
| 66. | கடமை உணர்வு<br>(சென்னை – தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் அரசு விழா) | 15.02.2012 | 167 |
| 67. | கருணையும் தகுதியும்<br>(சென்னை – தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் அரசு விழா) | 15.02.2012 | 170 |
| 68. | வியாபாரத் தந்திரம்<br>(சென்னை – தமிழ் புத்தாண்டு விழா) | 13.04.2012 | 172 |
| 69. | நாக்கு<br>(சென்னை – சட்டமன்றப் பேரவை உரை) | 24.04.2012 | 175 |

| வ. எண் | தலைப்பு | நாள் | பக்கம் |
|---|---|---|---|
| 70. | புத்தி வந்தது (சென்னை–திருவேற்காடு – 1006 ஜோடி மணமக்கள் திருமண விழா) | 18.06.2012 | 177 |
| 71. | உண்மையான மகிழ்ச்சி (நீலகிரி – கோடநாடு – பாங்க் ஆப் இந்தியாவின் கோடநாடு காட்சிமுனை ஏ.டி.எம் திறப்பு விழா) | 25.07.2012 | 181 |
| 72. | வியாபாரி (நீலகிரி – கோடநாடு – பாங்க் ஆப் இந்தியாவின் கோடநாடு காட்சிமுனை ஏ.டி.எம் திறப்பு விழா) | 25.07.2012 | 184 |
| 73. | தமிழனின் தன்மானம் (திருச்சி – அரசு விழா) | 13.09.2012 | 186 |
| 74. | இருண்ட உள்ளம் (திருச்சி – அரசு விழா) | 13.09.2012 | 189 |
| 75. | குறிக்கோள் (காஞ்சிபுரம் – "உங்கள் சொந்த இல்லம்" திட்டம் – அடிக்கல் நாட்டு விழா) | 26.10.2012 | 192 |
| 76. | கடன் (காஞ்சிபுரம் – "உங்கள் சொந்த இல்லம்" திட்டம் – அடிக்கல் நாட்டு விழா) | 26.10.2012 | 195 |
| 77. | தன்னம்பிக்கை (சென்னை – ஆசிரியர்களுக்கான பணிநியமன ஆணைகள் வழங்கும் விழா) | 13.12.2012 | 197 |

| வ. எண் | தலைப்பு | நாள் | பக்கம் |
|---|---|---|---|
| 78. | வெப்ப விதி<br>(சென்னை – ஆசிரியர்களுக்கான பணிநியமன ஆணைகள் வழங்கும் விழா) | 13.12.2012 | 200 |
| 79. | உழைப்பின் பெருமை<br>(நீலகிரி மாவட்டம் – குந்தா வட்டம் தேயிலைத் தொழிற்சாலையின் பொன் விழா) | 04.01.2013 | 202 |
| 80. | அறிவும் திறமையும்<br>(நீலகிரி மாவட்டம் – குந்தா வட்டம்– தேயிலைத் தொழிற்சாலையின் பொன்விழா) | 04.01.2013 | 205 |
| 81. | தாயின் மதி நுட்பம்<br>தேனி – கர்னல் ஜான் பென்னி குயிக் நினைவு மண்டபம் திறப்பு விழா) | 15.01.2013 | 208 |
| 82. | துறவறம்<br>(சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த ஆண்டு விழா) | 27.02.2013 | 211 |
| 83. | கொடை வள்ளல்<br>(தஞ்சாவூரில் காவேரிப் பாசன விவசாயிகள் சார்பில் நன்றி தெரிவிக்கும் விழா) | 09.03.2013 | 214 |
| 84. | பூனையின் பல்<br>(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஈராண்டு சாதனைகளைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தமைக்கு நன்றி) | 16.05.2013 | 218 |
| 85. | மகானின் சமாதி<br>(திருச்சி – ஸ்ரீரங்கம் அரசு விழா) | 03.06.2013 | 220 |

| வ. எண் | தலைப்பு | நாள் | பக்கம் |
|---|---|---|---|
| 86. | துணிச்சல் (இந்திய குடியரசுத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழா) | 23.08.2013 | 223 |
| 87. | முழு ஈடுபாடு (இந்திய குடியரசுத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழா) | 23.08.2013 | 226 |
| 88. | வீழ்வது எதனால்? (சென்னை – திரைப்பட நூற்றாண்டு விழா) | 21.09.2013 | 228 |
| 89. | உள்ளத்தில் கடவுள் (திருச்சி – ஸ்ரீரங்கம் அரசு விழா) | 30.06.2014 | 231 |
| 90. | சிறந்த மனிதர் (திருச்சி – ஸ்ரீரங்கம் அரசு விழா) | 30.06.2014 | 233 |
| 91. | சில நேரம் அலை! சில நேரம் கரை! (மதுரை முல்லை பெரியாறு பாசன விவசாயிகள் – நன்றி தெரிவிக்கும் விழா) | 22.08.2014 | 235 |
| 92. | மனவலிமை (மதுரை முல்லை பெரியாறு பாசன விவசாயிகள் – நன்றி தெரிவிக்கும் விழா) | 22.08.2014 | 237 |
| 93. | ஏழை கேட்ட வரம் (மதுரை முல்லை பெரியாறு பாசன விவசாயிகள் – நன்றி தெரிவிக்கும் விழா) | 22.08.2014 | 240 |


❖ ❖ ❖

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

**ஒ**ன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே என்பதை நீங்கள் பலமுறை கேட்டு இருக்கிறீர்கள். இது சம்பந்தமாக ஒரு கதை என் நினைவிற்கு



வருகிறது. இப்போது நண்டு ஏற்றுமதி மிகவும் இலாபகரமான தொழிலாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அதிலும் தொட்டிகளில் கடல் நீரைத் தேக்கி வைத்து அதில் நண்டுகளை வைத்து உயிரோடு ஏற்றுமதி செய்தால் கொள்ளை இலாபம் கிடைக்கிறது. இப்படி நண்டுகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து ஒரு வியாபாரி கடையில் வைத்து இருந்தார்.

தாய்லாந்து நாட்டில் ஒரு கடையில் மூன்று தொட்டிகளில் நண்டுகளை வைத்து இருந்தார். அந்த நண்டுகளை வாங்க ஒருவர் அங்கே வந்தார். முதல் தொட்டியைப் பார்த்தார். அந்தத் தொட்டி மேல் ஒரு மூடி போடப்பட்டிருந்தது. ஒரு பலகை வைத்து மூடியிருந்தார்கள். அந்த வாடிக்கையாளர் கடைக்காரரைப் பார்த்து,இந்தத் தொட்டிக்கு ஏன் மூடி போட்டு வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டார். அந்த வியாபாரி சொன்னார். இது ஜப்பான் நாட்டிலிருந்து வந்த நண்டுகள். தொட்டியைத் திறந்து வைத்தால், வேகமாக ஏறி வெளியே சென்று தப்பித்து ஓடிவிடும். வியாபாரத்திற்கு எதுவுமே மிஞ்சாது என்றார். வாடிக்கையாளர் அடுத்த தொட்டிக்கு வந்தார். அந்த இரண்டாவது தொட்டியும் மூடி போடப்பட்டிருந்தது. இதையும் ஏன் மூடியிருக்கிறீர்கள் என்று கேட்டார்.

அப்போது வியாபாரி சொன்னார். இது சைனா நாட்டிலிருந்து வந்த சீன நாட்டு நண்டுகள். இவைகளும் தொட்டியைத் திறந்து வைத்தால் ஜப்பான் நாட்டு நண்டுகள் அளவுக்கு வேகமாக இல்லாவிட்டாலும் இவைகளும் ஓடிச்சென்று விடும். வியாபாரத்திற்கு எதுவுமே மிஞ்சாது. அதனால் தான் மூடி வைத்திருக்கிறேன் என்றார். பின்னர், வாடிக்கையாளர்

மூன்றாவது தொட்டிக்கு வந்தார். அந்த மூன்றாவது தொட்டி திறந்தே கிடந்தது. அதிலிருந்த நண்டுகள் எல்லாம் அப்படியே இருந்தன. அவர் வியாபாரியிடம் கேட்டார். இந்தத் தொட்டிக்கு மட்டும் நீங்கள் ஏன் மூடி போடவில்லை என்று கேட்டார். அதற்கு வியாபாரி சொன்னார். இவை இந்தியாவிலிருந்து வந்த இந்திய நாட்டு நண்டுகள். இவை எங்கேயும் போகாது. ஏனென்றால், ஒரு நண்டு ஏற முயற்சி செய்து வெளியேற முயன்றால், உடனே மற்ற நண்டுகள் எல்லாம் பிடித்து இழுத்து கீழே இழுத்து விடும். வெளியே போகவிடாது. ஆகவே இந்த நண்டுகள் எங்கேயும் போகாது. மூட வேண்டிய அவசியமே இல்லை என்றார்.

---

**22–07–2002** அன்று சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# தர்மம் தலைகாக்கும்

**ப**ழைய ரோம் நாட்டில், ரோம் நாட்டு சாம்ராஜ்யத்தில் ஆன்ட்ரோகிளிஸ் என்ற ஒரு சாதாரண மனிதன் இருந்தான். ஒரு நாள் அவன் காட்டு வழியாகப் போய்க் கொண்டு இருந்தான். அப்போது ஒரு சிங்கத்தின் குரல் ஒலிப்பது கேட்டது. முதலில் பயந்தான். சுற்றிப் பார்த்தான்.

எங்கே சிங்கம் தன் மீது பாய்ந்து விடுமோ என்று பயந்தான். ஆனால், எங்கேயும் சிங்கம் தென்படவில்லை, சற்று உற்றுக் கவனித்துக் கேட்டான். சிங்கம் கம்பீரமாகக் கர்ஜிக்கவில்லை.



அது ஏதோ வலியின் வேதனையில் ஓலமிடுவது போல் சத்தம் கேட்டது. பார்த்தான். அருகில் ஒரு குகை இருந்தது. அதற்குள் எட்டிப் பார்த்தான். அங்கே ஒரு சிங்கம் படுத்து இருந்தது.

அது வலியால் தவித்துப் போய் துடிதுடித்துப் போய் தாங்க முடியாத வலியில் ஓலமிட்டுக் கொண்டிருந்தது. அங்கே செல்லலாமா வேண்டாமா என்று ஆன்ட்ரோகிளிஸ்ஸிக்கு சற்று தயக்கம். என்ன இருந்தாலும் சிங்கம் அல்லவா, பயமாக இருக்குமல்லவா ? அதே நேரத்தில் வேதனையில் இருக்கின்ற ஒரு ஜீவனுக்கு நம்மால் ஆன உதவியைச் செய்ய வேண்டும் என்று கருதி, தைரியமாக அருகில் சென்றான். சென்று பார்த்தால் அந்தச் சிங்கத்தின் காலில் ஒரு முள் ஏறி இருந்ததைப் பார்த்தான். அந்த பெரிய முள் குத்தியதால் வலி தாங்காமல் சிங்கம் ஓலமிட்டுக் கொண்டிருந்தது. ஆன்ட்ரோகிளிஸ் அந்த முள்ளை எடுத்துவிட்டான்.

உடனே அந்த சிங்கத்திற்கு நிவாரணம் கிடைத்தது. அவனுடைய முகத்தை நன்றியோடு உற்றுப் பார்த்தது. பின்னர் களைப்பில் படுத்துக் கொண்டு உறங்கிவிட்டது. அதன்பிறகு ஆன்ட்ரோகிளிஸ் அங்கிருந்து சென்று விட்டான்.

அதன் பிறகு பல ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆன்ட்ரோகிளிஸ் அந்தச் சம்பவத்தை மறந்து விட்டான். ஆன்ட்ரோகிளிஸ் வசித்து வந்த ஊரில் அவனுடைய எதிரிகள் சிலர் அவன் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு அவன் மீது பொய் குற்றச்சாட்டுகளைக் கூறி அவன் மீது இல்லாத பொல்லாத பழி எல்லாம் போட்டு அவன் திருடிவிட்டான், கொலை செய்து விட்டான் என்றெல்லாம் குற்றம் சாட்டி அவனைக் கொண்டு போய் மன்னருக்கு முன்னால் நிறுத்தினார்கள்.

அப்போதெல்லாம் மன்னர்தான் விசாரனை நடத்துவார். தீர்ப்பும் கூறுவார். ஆன்ட்ரோகிளிஸ் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் எல்லாம் உண்மை என்று நம்பி மன்னர் அவனுக்கு மரண தண்டனை விதித்துவிட்டார். அந்தக் காலத்தில் ரோம் நாட்டு சாம்ராஜ்யத்தில் மரண தண்டனையை மிகவும் கொடூரமான வழிகளில் நிறைவேற்றுவார்கள். அதில் ஒரு வகை ஒரு பெரிய விளையாட்டரங்கம் இருக்கும். சுற்றி பல படிக்கட்டுகள் இருக்கும். நாட்டு மக்கள் எல்லாம் அங்கே அமர்ந்திருப்பார்கள். உயரே ஒரு இடத்தில் மன்னரும் அமர்ந்திருப்பார்.

எல்லோரும் வேடிக்கை பார்ப்பார்கள். அப்போது அந்த விளையாட்டரங்கத்திற்குள் பசியோடு இருக்கக்கூடிய ஒரு சிங்கத்தைக் கட்டவிழ்த்து விடுவார்கள். யார் மரண தண்டனை பெற்றிருக்கிறாரோ அவரை அந்த சிங்கத்திடம் தள்ளி விட்டு விடுவார்கள். நிராயுதபாணியாக அந்த மனிதன் அந்த சிங்கத்தோடு போராட வேண்டும். வெறும் கையால் அந்தச் சிங்கத்தைக் கொன்றுவிட்டால் அதனை வென்றுவிட்டால் அவனுக்கு விடுதலை. ஆனால் வெறும் கையால் நிராயுத பாணியாக யாரால் சிங்கத்தை வெல்ல முடியும்? ஆனால், அத்தகைய மரண தண்டனை பெற்றவர்களை எல்லாம் அந்த சிங்கத்திடம் தள்ளி விட்டால் அவர்கள் சிங்கத்திற்கு இரையாகிவிடுவார்கள், பலியாகிவிடுவார்கள். இதுதான் வாடிக்கை. அப்படி மரண தண்டனை பெற்ற இந்த ஆன்ட்ரோகிளிஸை அழைத்துச் சென்று அந்த விளையாட்டரங்கத்திற்குள் தள்ளி விட்டார்கள். மறுமுனையில் பசியோடு இருக்கின்ற ஒரு சிங்கத்தை அவிழ்த்து விட்டார்கள். அந்தச் சிங்கம் ஆன்ட்ரோகிளிஸைப் பார்த்து வேகமாக ஓடி வந்தது. ஆன்ட்ரோகிளிஸ் கண்ணை மூடிக் கொண்டான். சரி இவ்வளவு தான் நம் கதை முடிந்துவிட்டது என்று கருதி,

இறைவனை வேண்டிக் கொண்டு இறைவா என் ஆயுள் இதோடு முடியப் போகிறது. என்னை உன் திருவடியில் சேர்த்துக் கொள் என்று வேண்டிக் கொண்டான். சில வினாடிகள் கழிந்தன. எதுவுமே நடக்கவில்லை. கண்ணைத் திறந்து பார்த்தான்.

அந்தச் சிங்கம் அப்படியே அவன் அருகில் நின்று அவனை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. ஆன்ட்ரோகிளிஸ்ஸிக்கு ஒன்றும் புரியவில்லை. பின்னர், சிங்கம் அவன் அருகில் வந்து, அவன் முன்னால் மண்டியிட்டு உட்கார்ந்தது. அப்போதும் ஆன்ட்ரோகிளிஸ்க்கு ஒன்றும் புரியவில்லை. அந்தச் சிங்கம் ஒரு காலை நீட்டி என்னைத் தெரியவில்லையா என்பது போல் அந்த காலை அவனிடம் காட்டியது.

அப்போதுதான் ஆன்ட்ரோகிளிஸ்க்குப் புரிந்தது. ஓஹோ முன்பு ஒரு நாள் முள் குத்தி அவதிப்பட்டு நான் உதவி செய்தேனே அந்தச் சிங்கம்தான் இது என்பதைப் புரிந்து கொண்டு, அதன் தலையைத் தடவிக் கொடுத்து நீ நன்றாக இருக்கிறாயா ? என்று கேட்டான். அந்தச் சிங்கம் அப்படியே அவன் கால் மீது தலையை வைத்து, செல்லப் பிராணியைப் போல் படுத்துக் கொண்டது. இந்தக் காட்சியைப் பார்த்ததும் ரோம் நாட்டுப் பொதுமக்கள் எல்லாம் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். ஆன்ட்ரோகிளிஸ்ஸை மன்னித்து விடுதலை செய்ய வேண்டும் என்று மன்னனிடம் கோரிக்கை வைத்தார்கள். மன்னரும் அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு ஆன்ட்ரோகிளிஸ்ஸை விடுதலை செய்து விட்டார்.

---

**23–07–2002** அன்று மதுரை மாவட்டம்
மேலூரில் நடைபெற்ற
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# ஒற்றுமையே வலிமை

இந்தியா அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்ததற்கே இந்த ஒற்றுமை இல்லாத தன்மை தான் காரணம். இந்த நேரத்தில், இந்திய சரித்திரத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிதான் எனக்கு நினைவுக்கு வருகிறது.

பாபர் இந்தியா மீது படையெடுத்து வந்தார். சிந்து நதியின் அந்தக் கரையில் பாபருடைய படைகளும், இந்தக் கரையில் இந்தியப் படைகளும், முகாமிட்டு இருந்தன. ராத்திரி நேரம் இந்தியாவை எப்படி வெற்றி கொள்வது என்பதைப் பற்றி சிந்தித்துக் கொண்டே, பாபர் உலவிக் கொண்டிருந்தார். எதிர்க்



கரையைப் பார்த்துக் கொண்டே, உலாவிக் கொண்டிருந்த பாபர், திடீர் என்று நடப்பதை நிறுத்தி விட்டு, அங்கே நடப்பதைப் பார்த்தார்.

கொஞ்ச நேரம் கழித்து பக்கத்தில் இருந்த ஒரு படைத் தளபதியை அழைத்து, "எதிர்க் கரையில் ஆங்காங்கே, தனித்தனியாக விளக்குகள் எரிகிறதே? என்ன காரணம்?" என்று பாபர் கேட்டார். அதற்கு அந்த படைத் தளபதி, "இந்தியப் படைகளுக்கு இப்போது, இரவு சாப்பாட்டு வேளை. இந்தியாவில், ஒரு ஜாதியினர் சமைத்த சாப்பாட்டை, இன்னொரு ஜாதியினர் சாப்பிட மாட்டார்கள். அதனால், தனித்தனியாக ஜாதிவாரியாக, படை வீரர்கள் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறார்கள்," என்று பதில் சொன்னாராம்.

இந்தப் பதிலைக் கேட்ட உடன் பாபர் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தார். "இந்தியாவைப் பிடித்து விட்டோம்!" என்று முழக்கம் இட்டார்.

"இன்னும் சிந்து நதியைக் கடக்கவே இல்லையே? அதற்குள் இந்தியாவைப் பிடித்து விட்டோம் என்று எப்படிச் சொல்லலாம்?" என்ற சந்தேகத்தைத் தயங்கித் தயங்கி படைத் தளபதி கேட்டார். அதற்கு பாபர் பதில் சொன்னார். "படை வீரர்கள் கூட ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட மாட்டார்கள். அவர்களுக்குள் உணவு உண்பதில் கூட வேறுபாடு இருக்கிறது என்று சொன்னால், அந்த தேசத்தைச் சுலபமாக வென்று விடலாம்" என்று பாபர் சொன்னாராம்.

---

**04–02–2003** அன்று வேலூரில் நடைபெற்ற அரசு விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

# அதீத கற்பனை

**ஒ**ரு பள்ளிக்கூட மாணவன் தேர்வு எழுதிக் கொண்டு இருந்தான். கையிலே கேள்வித்தாள். அதில் “தென்னை மரத்தைப் பற்றி 30 வரிகளில் கட்டுரை ஒன்று எழுதுக” என்று கொடுக்கப்பட்டு இருந்தது. அந்தப் பையனோ அரை குறைப் பேர் வழி! ஒழுங்காகப் பள்ளிக் கூடத்திற்கு வருவதும் இல்லை. நன்றாகப் படிப்பதும் இல்லை. தென்னை மரத்தைப் பற்றி, அவனுக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், பசுவைப் பற்றி அரை குறையாகப் படித்து வைத்திருந்தான். ஆகவே அவன் எழுதினானாம் – “பசு இருக்கிறதே பசு, அதற்கு 4 கால்கள் உண்டு, இரண்டு கொம்புகள் உண்டு. ஒரு வால் உண்டு. அது புல்லைத் தின்னும்” – இப்படியே 29 வரிகள் பசுவைப் பற்றி எழுதிவிட்டு கடைசியாக எழுதினானாம் “இந்தப் பசுவை, தென்னை மரத்தில் கட்டுவார்கள்” என்று! தலைப்பு – தென்னை மரம்! எழுதியது பசுவைப் பற்றி! எப்படியிருக்கிறது கதை ?



---

12–02–2003 அன்று ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# நிறைவு தருவது

ஒரு முறை பாண்டவர்களுக்கும், கவுரவர்களுக்கும் ஆசிரியராக இருந்த துரோணாச்சாரியார், தன்னுடைய மாணவர்களுக்கு ஒரு சோதனை வைத்தார். பாண்டவர்கள் சார்பில் தருமனையும், கவுரவர்கள் சார்பில் துரியோதனனையும் அழைத்தார் துரோணாச்சாரியார். – உங்கள் இருவருக்கும் ஒரு சோதனை வைக்கிறேன். அதோ ஒரு வீடு இருக்கிறது. வீட்டில் பொருள் ஒன்றும் இல்லை. காலியாக இருக்கிறது. நீங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக அந்த வீட்டை நிரப்ப வேண்டும். அவ்வாறு வீட்டை நிரப்ப என்ன செய்யப் போகிறீர்கள் என்பதுதான், நான் வைக்கும் சோதனை. இந்தச் சோதனை உங்கள் அறிவை எடைபோட எல்லோருக்கும் ஒரு சந்தர்ப்பமாக அமையும்'' என்று துரோணாச்சாரியார், தருமனிடமும், துரியோதனனிடமும் சொன்னார்.



முதல் வாய்ப்பு துரியோதனனுக்கு வழங்கப்பட்டது. துரியோதனன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான். எங்கெங்கோ சென்று, முயற்சி செய்து கொண்டு வந்த பொருளால் அந்த வீட்டை நிரப்பினான். அதைப் பார்த்தவர்கள் பரிகாசம் செய்தார்கள். அந்தப் பொருள் என்ன தெரியுமா? வைக்கோல். வீடு முழுவதையும், கொஞ்சம் கூட காலியிடம் இல்லாமல் வைக்கோலாலேயே துரியோதனன் வீட்டை நிரப்பிவிட்டான்.

அடுத்தது தருமனின் முறை. அந்த வீட்டில் துரியோதனனால் அடைக்கப்பட்டிருந்த வைக்கோல் முற்றிலும் நீக்கப்பட்டது. தருமன் உடனே அந்த வீட்டிற்குள் சென்று அங்கே ஒரு விளக்கை ஏற்றி வைத்தான். இப்போது வீடு வெளிச்சத்தால் நிரப்பப்பட்டு இருந்தது.

துரியோதனனும் வீட்டை நிரப்பினான். தருமனும் வீட்டை நிரப்பினான். அந்த வகையில் இரண்டும் ஒன்று தான். ஆனால், எதைக் கொண்டு நிரப்பினார்கள்; என்ன பலன் கிடைத்தது என்பது தான் கேள்வி.

வீடு நிறைந்தபொருள் என்பதற்கு வைக்கோல் என்று அர்த்தப்படுத்திக் கொண்டு வீட்டை வைக்கோலால் நிரப்பினான் துரியோதனன். வீடு நிறைந்த பொருள் என்பதற்கு வெளிச்சம் என்று பொருள் கொண்டு தீப ஒளியால் வீட்டை நிரப்பினான் தருமன்.

இது தான் துரியோதனனுக்கும், தருமனுக்கும் இடையே இருந்த வேறுபாடு!

இது தான் கவுரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் இடையே இருந்த வேறுபாடு!

---

**27–02–2003** அன்று விழுப்புரத்தில் நடைபெற்ற அரசு விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து,

# ஒப்பற்ற நீதி

**தே**வர்களுக்கும், அசுரர்களுக்கும் அடிக்கடி போர் வரும் என்று நாம் புராணங்களில் கேள்விப்பட்டிருக்கிறோம். அந்தப் போர்களில் வெற்றி தோல்வி மாறி மாறி வந்து கொண்டிருந்தது. தங்களுக்கு நிரந்தர வெற்றி வேண்டும் என்றும், மரணத்தைத் தவிர்க்கின்ற அமிர்தத்தைத் தராமல் படைப்புக் கடவுளாகிய பிரம்மா ஓரவஞ்சனையாக நடந்து கொள்கிறார் என்றும், அசுரர்கள் பிரம்மாவிடம் அங்கலாய்த்துக் கொண்டார்கள்.

பிரம்மா சொன்னார், "அவ்வளவு தானே பிரச்சினை? வாருங்கள், உட்காருங்கள். உங்களுக்கு அமிர்தம் தருகிறேன். வரிசையாக உட்காருங்கள்" என்றார். அப்படியே உட்கார வைத்து அவர்களுக்கு நடுவில் அமிர்தக் கிண்ணங்களை வரிசையாக



வைத்தார். அசுரர்கள் மிகவும் சந்தோஷத்தோடு அமிர்தத்தைச் சாப்பிடத் தயாரானார்கள்.

அப்போது பிரம்மா, ‘‘நிறுத்துங்கள்! நீங்கள் அமிர்தத்தைத் தாராளமாகச் சாப்பிடலாம். ஆனால், ஒரு நிபந்தனை! நீங்கள் முழங்கையை மடக்காமல் சாப்பிட வேண்டும்’’ என்றார் பிரம்மா.

அசுரர்கள் முயன்று பார்த்தார்கள். முழங்கையை மடக்காமல் அவர்களால் அமிர்தத்தை உண்ண முடியவில்லை. அவர்களுக்கு கோபம் வந்தது. கூச்சலிட்டார்கள். ‘‘பிரம்மா, நீங்கள் சூழ்ச்சி செய்கிறீர்கள். உங்களைச் சும்மா விட மாட்டோம்,’’ என்று ஆக்ரோஷமாகக் கத்தினார்கள்.

அப்போது பிரம்மா, ‘‘பதற்றப்படாதீர்கள். இப்போது பாருங்கள்’’ என்று கூறிக் கொண்டே தேவர்களை அழைத்தார். தேவர்கள் வந்தார்கள். அவர்களுக்கும் அதே நிபந்தனை! முழங்கையை மடக்காமல் சாப்பிட வேண்டும் என்றார் பிரம்மா. தேவர்கள் அமிர்தம் சாப்பிட உட்கார்ந்தார்கள். அவர்கள் கோபப்படவில்லை. கூச்சலிடவில்லை. எதிர் எதிரே உட்கார்ந்து கொண்டார்கள். அமிர்தத்தைக் கையில் எடுத்தார்கள். கையை மடக்காமல், எதிரே இருப்பவரின் வாயில் ஊற்றினார்கள். ஒருவருக்கு ஒருவர் கையை மடக்காமல் ஊட்டிக் கொண்டே இருந்தார்கள். இப்படியாக, எல்லோரும் அமிர்தம் உண்டார்கள். உங்களுக்குப் புரிகிறதல்லவா ? நாமே சாப்பிட வேண்டும் என்றால் கிண்ணத்தை ஏந்தி கையை மடக்கித்தான் சாப்பிட முடியும். ஆனால், முழங்கையை மடக்காமல் உண்ண வேண்டும் என்றால் கையை இப்படியே நீட்டிக் கொண்டு கிண்ணத்தை ஏந்தி எதிரே உள்ளவர் வாயில் ஊட்டினால் அவரும் சாப்பிடுகிறார். அதைப் போலவே உண்பவரும் நம் வாயில் ஊட்டினால், நாமும் சாப்பிடுகிறோம் அல்லவா ?

---

**06–03–2003** அன்று பெரம்பலூர் மாவட்டத்தில்
நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# மகன் தந்தைக்கு ஆற்றிய நன்றி

**சோ**ழச் சக்கரவர்த்தியாகிய ராஜ ராஜ சோழனின் மைந்தன் முதலாம் ராஜேந்திரன் தனது தந்தையைப் போலவே மாபெரும் வீரனாக இருந்தான். அது மட்டுமல்ல, தந்தையைப் போலவே சிறந்த கலை நெஞ்சம் அவனுக்கு இருந்தது. ஆனாலும், இன்று நினைத்துப் பார்த்தாலும், நெஞ்சில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தும் செய்தி ஒன்றைச் சொல்வார்கள்.



கங்கை கொண்ட சோழபுரத்தில் முதலாம் ராஜேந்திரன் ஆலயம் கட்டினான். தஞ்சையில் தந்தையார் ராஜ ராஜன் கட்டிய கோயிலைப் போலவே கட்டினான். ஆனாலும், ஒரு எச்சரிக்கை! அப்பா கட்டிய கோயிலை விடப் பெரியதாக, தான் கட்டிய கோயில் இருந்து விடக்கூடாது என்று தீர்மானித்துக் கட்டினான். தந்தையின் சாதனையைவிட தனது சாதனை பெரியது என்று சரித்திரம் சொல்லக்கூடாது என்பதற்காக அப்படி சிறியதாக ஆலயத்தை அமைத்தான் என்பார்கள். தந்தையின் கீர்த்தியைவிட தனது கீர்த்தி பெரியதாக இருக்கக் கூடாது என்று நினைத்தான் ராஜேந்திர சோழன் அன்று.

---

**06–03–2003** அன்று பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்ற
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# நொடியில் மாறிடும் மனம்

**ம**காபாரதத்தில் ஒரு நிகழ்ச்சி. தானத்தில் சிறந்த கர்ணன் ஒரு தடவை எண்ணெய் தேய்த்து தலைக்குக் குளிப்பதற்கு உட்கார்ந்து இருந்தான். அவனது இடது கையிலே தங்கக் கிண்ணத்தில் எண்ணெய் இருந்தது. வலது கையிலே எண்ணெய்யை ஊற்றி உச்சித் தலையிலே தேய்க்கத் தொடங்கினான். அப்போது ஒரு அந்தணர் அங்கே வந்தார். “கர்ணா, எனக்கு ஏதாவது தர்மம் கொடு” என்று கேட்டார்.

உடனே, கர்ணன் தனது இடது கையிலிருந்த தங்கக் கிண்ணத்தை அப்படியே நீட்டினான். அதைக் கையில் வாங்காமல்



மறுத்த அந்த அந்தணர் பதறிக்கொண்டே சொன்னாராம். ‘‘கர்ணா இடது கையால் தர்மம் செய்தால் அப்படி செய்கிறவர்களுக்கு தரித்திரம் வரும் என்று சாஸ்திரம் சொல்கிறது. எனவே, வலது கையைக் கழுவி விட்டு அந்தக் கையாலே தங்கக் கிண்ணத்தைக் கொடு’’ என்றாராம். இப்படி தர்மம் வாங்க வந்த அந்த அந்தணர் சொன்னதும், கர்ணன் சொன்னானாம், ‘‘அந்தணரே, அந்தச் சாஸ்திரம் எனக்கும் தெரியும்.

ஆனால், கிண்ணத்தை இடது கையில் இருந்து வலது கைக்கு மாற்றுவதற்குள், என் மனம் மாறி விடலாம் அல்லவா ? ஆகவே, அப்படி மனம் மாறுவதற்குள், என் மனம் மாறினால், அப்படி இந்தக் கையில் இருந்து இந்த கைக்கு மாற்றுவதற்குள் என் மனம் மாறினாலும் மாறி விடலாம். அதனால்தான், எனக்குக் கஷ்டம் வந்தாலும் பரவாயில்லை, எனக்குத் தரித்திரம் வந்தாலும் பரவாயில்லை, தர்மத்தைத் தாமதிக்காமல் செய்ய வேண்டும் என்று இடது கையாலேயே தர்மம் செய்கிறேன்’’ என்று சொன்னானாம் கர்ணன்.

---

**06–03–2003** அன்று பெரம்பலூர் மாவட்டத்தில்
நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# ஒரே ஒரு கோடி

இந்தியாவில் இருந்த சமஸ்தான மன்னர்களெல்லாம் டெல்லியில் ஒரு மாநாட்டில் கலந்து கொண்டார்களாம். அந்த மாநாட்டில் ஒவ்வொரு சமஸ்தான மன்னரும், “என்னிடம் இத்தனை கோடி பணம் இருக்கிறது” என்று பெருமையடித்துக்



கொண்டிருந்தார்களாம். அந்த இடத்தில் இராமநாதபுரம் சமஸ்தான மன்னரான பாஸ்கர சேதுபதியும் இருந்தாராம். எல்லோரும் இத்தனை கோடி பணம் வைத்திருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்த போது, ராமநாதபுரம் அரசர் சொன்னாராம் “என்னுடைய சமஸ்தானத்தில் ஒரே ஒரு கோடி மட்டும் தான் உள்ளது. அது தான் தனுஷ்கோடி!” என்றாராம்.

---

**07–03–2003** அன்று கரூரில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# குதிரை முட்டை

**மு**ன்னொரு காலத்தில், பரமார்த்த குரு என்று ஒருவர் இருந்தார். அவருக்கு 16 சீடர்கள் இருந்தார்கள். அந்தச் சீடர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, தங்கள் குருவுக்காக ஒரு குதிரை வாங்க முடிவு செய்தார்கள். ஒரு குதிரையை வாங்குவதை விட, குதிரை முட்டையை வாங்கி அடை காத்தால், தரமான குதிரைக் குட்டி கிடைக்கும் என்று, புத்திசாலித்தனமாக முடிவு எடுத்தார்கள். குதிரை முட்டை வாங்க வேண்டும் அல்லவா ? அதற்காக இரண்டு சீடர்களைத் தேர்வு செய்து அனுப்பினார்கள்.

இந்த இரண்டு சீடர்களும் குதிரை முட்டை வாங்க, வெளியூர் சென்றபோது, ஓர் ஊரில், பெரிய அளவில் வெள்ளை நிறத்தில், குவித்து வைக்கப்பட்டிருந்த வெள்ளையான பொருள் ஒன்றைக்



கண்டார்கள். இதுவும் ஒரு வகை முட்டை தான் என்று நினைத்து, இந்த முட்டை என்ன விலை என்று, அங்குள்ள வியாபாரியிடம் கேட்டார்கள். சொன்ன விலையைக் கொடுத்து, முட்டையை வாங்கிய அவர்களுக்கு அதில் பரம திருப்தி, அதை எடுத்துக் கொண்டு வரும் வழியில், இரவு நேரம் ஆகிவிட்டதால், காட்டில் ஒரு மரத்தின் மேல் உட்கார்ந்து கொண்டார்கள். அரைகுறை தூக்கத்தில், அவர்கள் கையில் இருந்த அந்தப் பொருள், கீழே விழுந்தது. கண் விழித்துப் பார்த்தார்கள். அது விழுந்த இடத்தில் இருந்து, வெள்ளை நிறத்தில் ஒரு சிறிய முயல் குட்டி ஒன்று பாய்ந்து ஓடியது. ஆனால், அது முயல் தான் என்பதைத் தெரிந்து கொள்ளாத அவர்கள், அது குதிரைக்குட்டி என்று முடிவு செய்து, அதனை விடாது துரத்திச் சென்றார்கள். ஆனால் அது அவர்கள் கைகளுக்கு அகப்படவில்லை.

ஊருக்குத் திரும்பி வந்து, நடந்த நிகழ்ச்சிகளை ஒன்று விடாமல், குருவிடம் சொன்னார்கள். எல்லாவற்றையும் கேட்ட குரு, ‘‘நல்லவேளை அந்தக் குதிரைக்குட்டி மீது நான் சவாரி செய்து இருந்தால், என் கதி என்னவாகி இருக்கும் என்று சொன்னாராம்.

அந்தச் சீடர்கள் குதிரை முட்டை என்று நினைத்து வாங்கியது, வெள்ளைப் பூசணிக்காய். அந்த வெள்ளைப் பூசணிக்காய் விழுந்த வேகத்தில் கீழே புதரில் இருந்து ஓடியது வெள்ளை முயல். அந்த வெள்ளை முயலைத்தான், அந்தப் புத்திசாலிகள், குதிரைக்குட்டி என்று நினைத்தார்கள்.

---

**07–03–2003** அன்று திண்டுக்கல்லில் நடைபெற்ற
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# உறுதியும் உழைப்பும்

**ர**ஷ்ய நாட்டு அறிஞர் டால்ஸ்டாய், உலகப் புகழ் பெற்ற நாவல்கள் எழுதியவர். ஒரு நாள், ஒரு இளைஞன் அவரைத் தேடி வந்தான். வந்தவன் டால்ஸ்டாயிடம், “எனக்கு உழைத்துப் பிழைக்க ஆசை இருக்கிறது. ஆனால், என்னிடம் மூலதனம் எதுவுமில்லை. எனக்குப் பணம் கொடுங்கள்” என்று கேட்டான்.



“நூறு ரூபிள் (ரூபிள் என்பது ரஷ்ய நாட்டு நாணயம்) தருகிறேன். ஆனால், நீ உன் சுண்டு விரலைத் தரவேண்டும்” என்றார் டால்ஸ்டாய்.

“சுண்டுவிரலா!” என்றான் இளைஞன்.

“1000 ரூபிள் தருகிறேன் உன்னுடைய ஒரு கால் வேண்டும்” என்றார் டால்ஸ்டாய்.

“ஐயோ காலா” என்றான் இளைஞன்.

“10,000 ரூபிள் தருகிறேன் உன்னுடைய ஒரு கண் வேண்டும்” என்றார் டால்ஸ்டாய்.

“ஐயோ கண்ணா” என்றான் இளைஞன்.

டால்ஸ்டாய் அதற்கு மேலும் ஏதும் கேட்டு விடுவாரோ என்று பயந்து, அந்த இளைஞன் அங்கிருந்து தப்பி ஓடுவதற்குத் தயாரானான். அப்போது அவனை அழைத்து, டால்ஸ்டாய் சொன்னாராம். தம்பி உன்னிடம் விலை மதிப்பில்லாத பொருட்கள் இருக்கின்றன.

ஒரு சுண்டு விரலுக்கு, நூறு ரூபிள் தருகிறேன் என்றேன். உன்னிடமோ கையிலும், காலிலும் மொத்தம் 20 விரல்கள் இருக்கின்றன.

ஒரு காலுக்கு ஆயிரம் ரூபிள் தருகிறேன் என்றேன். உன்னிடமோ இரண்டு கால்கள் இருக்கின்றன.

ஒரு கண்ணுக்கு 10,000 ரூபிள் தருகிறேன் என்றேன். உன்னிடமோ இரண்டு கண்கள் இருக்கின்றன.

இன்னும் எத்தனையோ விலை மதிப்பில்லாத உடல் உறுப்புகள் உன்னிடம் உள்ளன. நீயே கணக்குப் போட்டுப் பார்.

இவ்வளவு பெரும் பொருளை, வைத்துக் கொண்டு இருக்கின்ற நீ என்னிடம் மூலதனம் இல்லை என்று எப்படிச் சொல்லலாம்.

இறைவன் உனக்குத் தந்துள்ள இந்த அற்புதமான செல்வத்தை வைத்துக் கொண்டு, உழைக்கத் தொடங்கு, வாழ்வில் உயர்வை அடைவாய் என்று டால்ஸ்டாய் அவனுடைய மதிப்பை அவனுக்கே எடுத்துச் சொன்னார்.

இறைவன் நமக்கு எவ்வளவோ வலிமையும், ஆற்றலையும் அளித்து இருக்கிறான். உள்ளத்தில் உறுதியும், உழைப்பதற்கு விருப்பமும் மட்டும் இருந்து விட்டால் இந்த உலகத்தையே வெல்லலாம். உழைக்கலாம் என்றால் நிச்சயம் பிழைக்கலாம்.

---

08–03–2003 அன்று திருவாரூரில் நடைபெற்ற
அரசு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து.

# மனிதப் போலிகள்

**கி**ராமங்களில் உள்ள விவசாயிகள் தங்களது பயிர்களைக் காப்பதற்காக ஒரு சோளக் கொல்லைப் பொம்மையை உருவாக்குவார்கள். இரண்டு குச்சிகளை ஒரு சிலுவையைப் போல அமைத்து அதன் மீது மண்பானையை மாட்டுவார்கள். தலைக்கு ஒரு மண்பானையை மாட்டுவார்கள். தலைக்கு ஒரு மண்பானையை வைப்பார்கள். விலங்குகளும், பறவைகளும் அதைப் பார்த்து ஒரு மனிதன் அங்கே நிற்பதாக எண்ணி



பயந்துபோகும். இரவில் அந்த வெள்ளைச் சட்டையும், இரண்டு கைகளும், யாரோ காவலிருப்பதைப் போலத் தோன்றும். விலங்குகளை விரட்ட அது போதுமானது. விலங்குகள், பயத்தால் பண்ணைக்கு வராது.

ஒரு கவிஞர், அந்தச் சோளக் கொல்லைக் பொம்மையைப் பார்த்துச் சொன்னார். “உன்னைச் செய்த விவசாயிக்கு நீ தேவை! உன்னைக் கண்டு அதிக அறிவில்லாத விலங்குகள் உண்மை என்று நம்பி விடுவதை என்னால் புரிந்துக்கொள்ள முடிகிறது. ஆனால், மழையிலும், வெயிலிலும், கொளுத்தும் கோடையிலும், நடுங்கும் குளிரிலும், நீ ஏன் இங்கே நின்றுக் கொண்டிருக்கிறாய்” என்று கேட்டார்.

அதற்கு அந்தப் போலி மனிதப் பொம்மை கூறியது, “உனக்கு என் மகிழ்ச்சி தெரியாது. மழை, வெயில், வெப்பம், குளிர், இவற்றில் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை. அந்த விலங்குகளைப் பயமுறுத்துவதில் எனக்குத் தனி இன்பம் இருக்கிறது. என்னைக் கண்டு ஆயிரக்கணக்கான விலங்குகள் அஞ்சுகின்றன. நான் போலி என்றும் எனக்குள் ஒன்றும் இல்லை என்றும் எனக்குத் தெரியும். ஆனால், அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. எனது இன்பமே பிறரைப், பயமுறுத்துவதில் தான் இருக்கிறது” என்றதாம் அந்தப் பொம்மை.

---

**08–03–2003** அன்று திருவாரூரில் நடைபெற்ற
அரசு விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து .

# மரங்களைக் காப்போம்

ஒரு நாட்டு மன்னர் கண்டபடி வேட்டையாடி வந்தார். வேட்டையாடுவதில் அவருக்கு விருப்பம் மிக அதிகம். ஆனால், அந்த நாட்டின் அமைச்சர் இதற்கு மாறானவர். இப்படியே வேட்டை நடைபெற்றால் பறவை இனங்களும், விலங்கினங்களும், அழிந்து போகுமே– அடிக்கடி மன்னருடன் ஆட்கள் வந்து அங்கும் இங்கும் அலைவதால், காடுகளும் அழிக்கப்பட்டுவிடுமே என்று அமைச்சர் பெரிதும் கவலைப்பட்டார். எப்படி மன்னரைத் தடுப்பது? நேரடியாகச் சொல்லி தடுக்க இயலாது. என்ன செய்வது என்று யோசித்து, அமைச்சர் ஒரு முடிவுக்கு வந்தார். மன்னர் வேட்டைக்குச் சென்றார். உடன் அமைச்சரும் சென்றார்.

அமைச்சர் மன்னரிடம் சொன்னார்––

“அரசே நேற்று எனக்கு ஒரு அபூர்வமான, ஓலைச் சுவடி கிடைத்தது. அதில் எல்லா உயிர்களின் மொழிகளையும் தெரிந்து கொள்வது எப்படி என்று கூறப்பட்டுள்ளது. நான் அதைத் தெரிந்து கொண்டேன்,” என்று அமைச்சர் சொன்னதும், மன்னர் “அப்படியானால், உமக்குப் பறவைகளின் மொழி தெரிந்திருக்க வேண்டுமே” என்று மன்னர் கேட்டார்.

“தெரியுமே” என்றார் அமைச்சர். அப்போது அருகே ஒரு மரக்கிளையில் இரண்டு ஆந்தைகள் கத்திக் கொண்டிருந்தன.

“இந்த ஆந்தைகள் என்ன பேசிக்கொள்கின்றன”? என்று கேட்டார் மன்னர்.

“மன்னா. ஒன்று பெண் ஆந்தையின் தந்தை, மற்றது பிள்ளை ஆந்தையின் தந்தை. இரண்டும் சம்பந்தம் பேசிக்கொண்டிருக்கின்றன. பிள்ளையின் தந்தையாகிய ஆந்தை பெண்ணின் தந்தையான ஆந்தையிடம், வரதட்சணை கேட்கிறது” என்றார் அமைச்சர். “அடடே, ரொம்ப சுவையான செய்திதான். நாட்டு மனிதர்களைப் போல, காட்டு மிருகங்களும், வரதட்சணை கேட்க ஆரம்பித்து விட்டதா ? அப்படி என்ன வரதட்சணை கேட்கிறதாம் ?” என்றார் அரசர்.

“ஐம்பது பாழடைந்த காடுகள் வேண்டுமாம். இப்போது இருபது பாழடைந்த காடுகளைத் தருகிறேன்; இன்னும் ஆறு மாதங்கள் கழித்து, மேற்கொண்டு முப்பது பாழடைந்த



காடுகளைத் தருகிறேன் என்று சொல்கிறது பெண் ஆந்தையின் அப்பா" என்று விளக்கினார் அமைச்சர்.

ஆஹா பிரமாதம், ஆமாம், இன்னும் ஆறு மாதத்தில் எப்படி முப்பது பாழடைந்த காடுகளைத் தர முடியும்? இதைப்பற்றி, பிள்ளையின் தந்தையாகிய ஆந்தை கேட்கவில்லையா?" என்று மன்னர் கேட்டார். அமைச்சர் பதில் அளித்தார்––" அவ்வாறு கேட்டதற்கு, பெண்ணின் தந்தை நமது சக்கரவர்த்தி இதுவரை, இருபது பாழடைந்த காடுகளை உருவாக்கிவிட்டார். இன்னும் ஆறு மாதத்தில் முப்பது பாழடைந்த காடுகளையாவது உருவாக்கி விடுவார். சக்கரவர்த்தி வேட்டையாடுகிற வேகத்தைப் பார்த்தால் இன்னும் ஆறு மாதத்தில், மேலும் ஐம்பது பாழடைந்த காடுகளாவது, நிச்சயம் கிடைக்கும். எனக்கும் இருப்பதோ ஒரு பெண். அந்த ஐம்பது காடுகளையும் அவளுக்கே சீதனமாக தருவேன் என்று சொல்கிறது" என்றார் அமைச்சர்.

இவ்வாறு அமைச்சர் சொன்னதும், மன்னர் மனம் மாறிவிட்டார். " வேட்டையாடியது போதும், வாருங்கள் போகலாம் "என்று சொல்லி அனைவரையும் அழைத்துக்கொண்டு மன்னர் அரண்மனைக்குத் திரும்பி விட்டார்.

அன்றிலிருந்து மன்னர், எப்போதாவது ஒரு முறை அதுவும் மக்களுக்குத் தொந்தரவு கொடுக்கும் கொடிய விலங்குகளை வேட்டையாடுவதாக இருந்தால் மட்டுமே வேட்டைக்குச் சென்றார் என்று கூறுகிறது கதை.

---

**09–03–2003** அன்று தருமபுரியில்
நடைபெற்ற அரசு விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# உண்மையே உயர்ந்தது

**ஓ**ர் அரசர், மிகவும் நேர்மையாக ஆட்சி நடத்தி வந்தார். அவருடைய நாடு எல்லா வளங்களோடும் சிறப்பாக இருந்தது.

ஒரு நாள் இரவு அரசர் தமது நாட்டின் கோட்டையைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு இருந்தார்.

அப்போது அரண்மனைக்குள் இருந்து ஒரு பெண் வெளியே போவது தெரிந்தது.

“ அம்மா நீங்கள் யார் ? இந்த நள்ளிரவு நேரத்தில் ஏன் வெளியே போகிறீர்கள் ?” என்று கேட்டார்.

அந்தப் பெண் சொன்னாள், “ நான்தான் திருமகள். மகாலெட்சுமி ஆகிய நான், ஒரே இடத்தில் நிரந்தரமாக இருப்பதில்லை. இங்கே தங்கி, நீண்ட நாட்கள் ஆகிவிட்டது. ஆகவே, இப்போது வெளியே போகிறேன்”, என்று மகாலெட்சுமி சொன்னதும், “சரி, உங்கள் விருப்பம் தாயே; நீங்கள் போகலாம்” என்று மன்னர் சொல்லிவிட்டார்.

சிறிது நேரம் கழித்து இன்னொரு பெண் அரண்மனையை விட்டு வெளியே வந்து கொண்டிருந்தாள்.

“அம்மா நீங்கள் யார்” ? என்று மன்னர் கேட்டார்.

நான் தர்ம தேவதை. திருமகள் இல்லாத இடத்தில் நான் இருக்க இயலாது. ஆகவே, நான் போகிறேன். என்று தர்ம தேவதை சொல்லவும் “சரி தாயே வாருங்கள்” என்று மன்னர் சொல்லி விட்டார்.

இன்னும் கொஞ்ச நேரம் கழித்து மூன்றாவது பெண், அரண்மனையிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தாள்.

"அம்மா, நீங்கள் யார் ? ஏன் போகிறீர்கள் ?" என்று கேட்டார் மன்னர்.

"நான் தான் நீதி தேவதை. எப்போது திருமகளும், தர்மதேவதையும் வெளியேறி விட்டார்களோ அப்போது இந்த அரண்மனையில் எனக்கு என்ன வேலை ?" என்று சொல்லி விட்டு நீதி தேவதை வெளியேறி விட்டாள்.

சிறிது நேரம் கழித்து நான்காவதாக ஒரு பெண் வெளியேறிக் கொண்டிருந்தாள்.



“அம்மா, நீங்கள் யார் **?**” என்று கேட்டார் மன்னர்.

“ நான் தான் சத்திய தேவதை” என்றாள் அந்தப் பெண்.

உடனே அரசர். அந்தப் பெண்ணின் காலில் விழுந்து “தாயே! யார் போனாலும் போகட்டும், நீங்கள் போகக்கூடாது. சத்தியம் வெளியேறிவிட்டால் என் சாம்ராஜ்ஜியம் அழிந்து போகும். ஆகவே, நீங்கள் மட்டும் இங்கேயே தங்கி விட வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார்.

“சரி” என்று சொல்லிவிட்டு, சத்திய தேவதை அரண்மனைக்குள் சென்றுவிட்டாள்.

சிறிது நேரத்தில் வெளியே போன நீதி தேவதை “உண்மையில்லாத இடத்திற்கு, நான் போக முடியாது; ஆகவே வந்துவிட்டேன்” என்று, அரண்மனைக்குள் போய்விட்டாள்.

அவளைத் தொடர்ந்து தர்ம தேவதையும், “உண்மையும், நீதியும் இருக்கும் இடத்தில் தான் நானும் இருப்பேன்” என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்துவிட்டாள்.

கடைசியில் திருமகளும் திரும்பி வந்தாள்.

“அரசே, எங்கே உண்மை இல்லையோ, எங்கே தர்மம் இல்லையோ, எங்கே நீதி இல்லையோ, அங்கு நான் மட்டும் இருந்துவிட்டால் அந்த இடம் அநியாயக்காரர்களின் வேட்டைக் காடாகிவிடும். ஆகவே தான், நானும் இங்கேயே வந்துவிட்டேன்” என்று திருமகள் சொன்னாளாம்.

---

**09–03–2003** அன்று தருமபுரியில் நடைபெற்ற அரசு விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# யார் அறிவாளி?

**ர**ஷ்ய நாட்டிலே, ஒரு சிறந்த சிந்தனையாளர் இருந்தார். அவரிடம் அறிவுரை கேட்பதற்கு, ரஷ்ய நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், மக்கள் வருவார்கள். அவருடைய பெயர் கோகோல் (GOGOL)



அந்த நாட்டின் ஒரு ஊரில், ஒரு முட்டாள் இருந்தான். அவன் என்ன சொன்னாலும், அவனைப் பார்த்து பரிகசித்து, மக்கள் சிரிப்பார்கள். முட்டாள் என்பது, அவனது பட்டமாக, ஒரு காலத்தில் இருந்தது. நாளடைவில், சொந்தப் பெயர் போய்விட்டது. முட்டாள் என்னும் இந்தப் பெயரே, சொந்தப் பெயராய் ஆகிவிட்டது.

அவன் சிந்தனையாளர் கோகோலைச் சந்தித்து, 'முட்டாள் என்னும் பட்டத்தை மாற்ற முடியுமா ?' என்று கேட்பதற்காகப் போனான். கோகோலிடம் போய் விஷயத்தைச் சொன்னான். அவப்பெயரை நீக்க வழி கூற வேண்டும், என்று அவரைக் கேட்டுக் கொண்டான்.

அவன் மிகவும் மனம் வருந்திச் சொன்னான். "நான் சொன்னதைக் கேட்ட பிறகு, மக்கள் என்னை முட்டாள் என்று அழைத்தாலும், பரவாயில்லை. ஆனால், நான் எதையாவது சொல்லத் தொடங்கினாலே, ஏன், வாயைத் திறந்த உடனேயே, மக்கள் என்னை முட்டாள் என்று பரிகசிக்கிறார்கள். இதை மாற்றுவது எப்படி ?" என்று பரிதாபமாகக் கேட்டான்.

அதற்கு அந்த ரஷ்ய சிந்தனையாளர் கோகோல் சொன்னாராம் – "இனிமேல் யார், என்ன சொன்னாலும், உடனே அதை மறுத்துப் பேசு. எப்போதும் மறுத்துப் பேசு! எவரையும் மறுத்துப் பேசு! என்ன சொன்னாலும் மறுத்துப் பேசு! உதாரணமாக, யாராவது கடவுள் இருக்கிறார் என்று சொன்னால்,

உடனே இல்லை என்று சொல். நிரூபிக்க முடியுமா என்று சவால் விடு! யாரும் உன்னைப் பற்றி என்ன சொன்னாலும் மறுத்துப் பேசு! அதை மட்டும் ஒழுங்காகச் செய்!" என்று கோகோல் அவனுக்கு அறிவுரை வழங்கி, அனுப்பி வைத்தார்.

அவன் ஊருக்குள் போனான். யார் என்ன சொன்னாலும், உடனே அதை மறுத்துப் பேசினான். யார் யாருடனோ பேசிக் கொண்டிருந்தாலும், இவன் நடுவில் குறுக்கிட்டு " அப்படி இல்லை" என்பான். "நிரூபிக்க முடியுமா ?" என்று சவால் விடுவான்.

ஒன்றிரண்டு மாதங்களிலேயே, அவனை ஊர் மக்கள், "அறிவாளி"! என்று பேசத் தொடங்கி விட்டார்கள். விரைவில் அவன் புகழ் நாடெங்கும் பரவியது. இதில் வேடிக்கை என்னவென்றால், முன்பு அவனை யார், யார் 'முட்டாள்' என்று அழைத்தார்களோ அவர்களுக்கெல்லாம் அவன் முட்டாள் என்று அழைத்ததே, மறந்து போய்விட்டது. இப்போது அவன் அறிவாளி, அதனால் தான், எல்லோரையும் அவனால் மறுக்க முடிகிறது என்று மக்கள் பேசிக் கொண்டார்கள்.

---

**10–03–2003** அன்று திருச்சியில் நடைபெற்ற
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# பெண்ணின் மதிநுட்பம்

**ஓ**ர் ஊரில் ஒரு வணிகன் இருந்தான். அவனுக்கு வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டது. அதனால் அவன் கடனாளி ஆகிவிட்டான். அவனுக்குக் கடனாகப் பணம் கொடுத்தவன் கொடுமையானவன். பல தடவை தவணை சொன்னதால் கோபம் அடைந்த அவன் ஒரு நாள் திடீரென்று வணிகனின் வீட்டிற்கே வந்துவிட்டான்.

அப்போது வணிகன் தன் ஒரே மகளுடன் தோட்டத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான். தோட்டத்தின் நடைபாதையில் கூழாங்கற்கள் கருப்பு நிறத்திலும், வெள்ளை நிறத்திலும் ஆங்காங்கே கிடந்தன. உள்ளே நுழைந்த லேவாதேவிக்காரன் மரியாதை இல்லாமல் கத்தினான். "உடனே கடனைத் திருப்பிக் கொடு! இல்லாவிட்டால் உனக்குச் சிறைத் தண்டனை கிடைக்கும்!" என்று சொன்னான்.

வணிகன் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தான். அது மன்னர் ஆட்சிக் காலம்! ஆகவே கடனைக் கொடுத்தவன் புகார் செய்தால் கடன் வாங்கியவனுக்குத் தண்டனை நிச்சயம். மேலும், வணிகனுக்கோ வயது எழுபது! சிறைக்குப் போகவும் முடியாது. போனால் அவன் மகளைக் காப்பாற்றவும் யாருமில்லை. என்ன செய்வது என்று புரியாமல் கையைப் பிசைந்து கொண்டிருந்தான்.

அப்போது, லேவாதேவிக்காரன் பார்வை வணிகனின் மகள் மீது விழுந்தது. அழகின் வடிவமாக இருந்த அவளைப் பார்த்த பின்பு ஒரு தீர்மானத்திற்கு வந்தான். வணிகனைப்

பார்த்து அவன் கூறினான்–– “நான் சொல்வதைக் கேள். உன்னைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. நான் உனக்கு உதவ நினைக்கிறேன்.

ஆனால், நான் சொல்லும் ஒரு ஏற்பாட்டிற்கு நீ சம்மதிக்க வேண்டும். ஒரு பையில் இங்கே கீழே கிடக்கும் ஒரு கருப்புக் கூழாங்கல்லையும் ஒரு வெள்ளைக் கூழாங்கல்லையும், நான் போடுவேன். உன் மகள் பையிலிருந்து ஒரு கல்லை எடுக்க வேண்டும். அப்படி எடுக்கும் கல் வெள்ளைக் கல்லாய் இருந்தால் நீ கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டாம். அதன் பிறகு நான் உன்னை ஒரு போதும் தொந்தரவு செய்ய மாட்டேன். ஆனால், உன் மகளை எனக்கு கல்யாணம் செய்து தரவேண்டும். சம்மதமா ?” என்று வணிகனைக் கேட்டான்.



வணிகனுக்கு வேறு வழியில்லை. தயங்கித்தயங்கி, சரி என்று சொன்னான்.

லேவாதேவிக்காரன் கீழே தரையில் கிடந்த இரண்டு கற்களை எடுத்து பைக்குள் போட்டான். ஆனால், திருட்டுத்தனமாக இரண்டு கற்களையும் கருப்புக் கற்களாக எடுத்துக் கொண்டு பைக்குள் போட்டுவிட்டான். வணிகன் இதைக் கவனிக்கவில்லை. ஆனால், வணிகன் மகள் இதைக் கவனித்து விட்டாள்.

பை அவள் முன் கொண்டு வரப்பட்டது. உள்ளே இருப்பதோ இரண்டு கற்கள். இரண்டுமே கருப்புக் கற்கள். அவற்றில் எதை எடுத்தாலும் லேவாதேவிக்காரனைக் கல்யாணம் செய்துதான் ஆக வேண்டும்.

இந்த நிலையில் லேவாதேவிக்காரனின் மோசடித்தனத்தை எப்படிச் சொல்வது? அப்பாவோ கண்களில் கண்ணீருடன் நின்று கொண்டிருக்கிறார். என்ன செய்வது? இரண்டு கருப்புக் கற்கள் என்ற உண்மையைச் சொன்னாலும் ஒன்றும் நடக்கப் போவதில்லை. லேவாதேவிக்காரன் ஆர்ப்பாட்டம் செய்வான்.

இந்த நிலையில் யார் தான் என்ன செய்ய முடியும்? இந்தச் சவாலை எப்படிச் சந்திப்பது? வணிகன் மகள் ஒரு முடிவோடு பைக்குள் கையை விட்டு ஒரு கல்லை வெளியே எடுத்தாள். கண்ணிமைக்கும் நேரத்தில் அந்தக் கல்லை நழுவவிட்டாள். கல் விரைந்து ஓடிப்போய் கற் குவியலில் சேர்ந்துவிட்டது. அது என்ன நிறம் என்று யாருக்கும் தெரியவில்லை.

வணிகன் மகள் கல்லை நழுவ விட்டதற்காக வருத்தம் தெரிவித்தாள்.

அவள் லேவாதேவிக்காரனிடம் சொன்னாள். “இப்போது பையில் ஒரு கல் இருக்கிறது. அந்த கல் கருப்பாய் இருந்தால், நான் எடுத்தது வெள்ளை. அப்படி என்றால், நாங்கள் கடனைச் செலுத்த வேண்டியதில்லை. நான் உன்னை மணம் புரியவும் அவசியம் இல்லை. உள்ளே கல் வெள்ளையாய் இருந்தால் நான் எடுத்தது கருப்புக் கல். அப்போது நான் உன்னை மணந்து கொள்ளத்தான் வேண்டும். பையில் என்ன கல் என்று பார்க்கலாமா!” என்று சொன்னாள்.

திணறிப் போனான் லேவாதேவிக்காரன். எடுத்த கல் போக பைக்குள்ளே ஒரு கல் இருக்கும். அந்தக் கல் கருப்புக் கல்லாகவே இருக்கும். இவன் போட்ட இரண்டு கல்லும் கருப்புக் கல்தானே ? அப்படி என்றால் அந்தப் பெண் எடுத்த கல் வெள்ளைக் கல் என்று ஏற்றுக் கொள்வதைத் தவிர, வேறு வழி இல்லை.

லேவாதேவிக்காரனின் தந்திரம் பலிக்கவில்லை. அவன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டுபோய் விட்டான்.

வணிகன் இப்போது நிம்மதிப் பெரு மூச்சு விட்டான். வணிகன் மகள் வெற்றிப் புன்னகை பூத்தாள்.

இந்தக் கதை எதனைக் காட்டுகிறது ? இதிலிருந்து என்ன தெரிகிறது ? அறிவுள்ளப் பெண்களை யாரும் ஏமாற்ற முடியாது.

---

**13–03–2003** அன்று திருநெல்வேலியில் நடைபெற்ற
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# சேமிப்பின் அவசியம்

இறைவன் புகழ் பாடி மக்களிடமிருந்து அரிசி முதலான தானியங்களைப் பிச்சையாகப் பெற்று, உயிர் வாழ்ந்து கொண்டிருந்த அடியார் ஒருவர் ஓர் ஊரில் இருந்தார். அந்த ஊர் சத்திரத்தில் தங்கியிருந்த அவரைக் காண வெளியூலிருந்து இன்னொரு அடியார் வந்தார். அவர்கள் இருவரும் வெகு நேரம் தங்களுடைய பழங்கதைகளைப் பேசிக் கொண்டிருந்தார்கள். வெளியூரிலிருந்து வந்தவர், எவ்வளவோ சுவையான செய்திகளைக் கூறிக் கொண்டிருந்தபோதும், உள்ளூர் அடியார் அதில் மனம் லயிக்காமல் சிறிது நேரத்திற்கு ஒரு முறை தன் கையில் வைத்திருந்த கோலால் “டொக், டொக்” என்று தட்டிக் கொண்டே இருந்தார்.

இதைப் பார்த்த வெளியூர் அடியார், “எவ்வளவோ நாட்கள் கழித்து உங்களைக் காண வந்தேன். ஆனால், நீங்களோ நான் பேசுவதை கவனிக்காமல் வேறு ஏதோ செய்து கொண்டு இருக்கிறீர்கள். என்னை அவமானப்படுத்தி விட்டீர்கள்” என்று கோபமாகப் பேசினார். உடனே அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்ட உள்ளூர் அடியார், “நான் இந்தக் கோலால், அடிக்கடித் தட்டிக் கொண்டிருப்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது. நான் எவ்வளவோ சிரமப்பட்டு மக்களிடம் அரிசியைப் பிச்சையாக வாங்கி வருகிறேன். ஆனால், இந்தச் சத்திரத்தில் இருக்கும் ஓர் எலி எனக்கு எதிரியாகச் செயல்படுகிறது. நான் எவ்வளவு

உயரத்தில் அரிசியை மூட்டையாகக் கட்டி வைத்தாலும் அந்த எலி அதைக் கடித்து என்னுடைய அரிசியை அபகரித்துக் கொள்கிறது. அந்த எலியிடமிருந்து தப்பிக்கவே இந்தக் கோலால் அடிக்கடி தட்டிக் கொண்டிருக்கிறேன்'' என்று சொன்னார் உள்ளூர் அடியார்.

இதை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்ட வெளியூர்க்காரர், ''எவ்வளவு உயரத்தில் அரிசியைக் கட்டி வைத்திருந்தாலும் அதை அந்த எலி அபகரிக்கிறது என்று நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அவ்வளவு உயரம் எட்டிக் குதிக்க அந்த எலியின் மனதில் தெம்பு இருக்கிறது என்று பொருள். அந்தத் தெம்பு எங்கிருந்து வருகிறது



என்று கண்டுபிடித்துச் சொல்கிறேன் பாருங்கள்'' என்று கூறிவிட்டு அந்த எலி வலையைத் தேடித் தோண்ட ஆரம்பித்தார். அந்த வளைக்குள்ளே, ஏராளமான நெல்லையும், அரிசியையும் அந்த எலி பதுக்கி வைத்து இருந்ததைக் கண்டுபிடித்த அந்த அடியார், அதையெல்லாம் வெளியே எடுத்து காலி செய்துவிட்டு, ''இப்போது அந்த எலி என்ன செய்கிறது என்று பார்த்து விடலாம்'', என்று கூறினார்.

அவர் சொன்னது போலவே, அன்று இரவு மிகக் குறைந்த உயரத்திலேயே கட்டி வைக்கப்பட்டிருந்த, அடியாரின் அரிசியை எட்டிப் பிடிக்கவோ—அந்த அரிசி கட்டி வைக்கப்பட்டிருந்த மூட்டையைக் கடித்துக் குதறவோ— அந்த எலியால் முடியவில்லை. தன்னுடைய சேமிப்பை எல்லாம் இழந்துவிட்ட அந்த எலியால் முன்பு போல் வேகமாகச் செயல்பட முடியவில்லை. தன்னுடைய எதிர்காலத் தேவையைச் சமாளித்துக் கொள்ள இருப்பில் எதுவுமே இல்லை என்ற எண்ணமே அதனுடைய உள்ள உறுதியை உருக்குலைத்துச் செயல்பட முடியாதபடி செய்துவிட்டது.

உள்ளூர் அடியாரிடம், இதைத் தெரிவித்த வெளியூர் அடியார், ''இனிமேல் நீங்கள் காலத்திற்கும் கவலைப்படாமல் இருக்கலாம்'' என்று கூறி விட்டுப் போனார்.

---

**13–03–2003** அன்று திருநெல்வேலியில் நடைபெற்ற
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# வள்ளல் மனம் வேண்டும்

**அ**ரசர் ஒருவர், தன் அமைச்சரிடம் ஒரு நாள் சொன்னாராம்.

"அமைச்சரே—

இங்கு உண்டு, அங்கு இல்லை

இங்கு இல்லை, அங்கு உண்டு

இங்கும் இல்லை, அங்கும் இல்லை

இங்கும் உண்டு, அங்கும் உண்டு

—இந்தக் கருத்துகளுக்கு, விளக்கமான பொருள்களை, என் கண் எதிரே கொண்டு வந்து காட்டுங்கள்" என்றாராம்.

"அரசே! இதற்கு எனக்குக் கொஞ்சம் கால அவகாசம் வேண்டும். நாளைக்குக் கொண்டு வந்து காட்டுகிறேன். அதுவரை, எனக்கு வெளியே சென்று வர அனுமதி வேண்டும்", என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

அதற்கு அரசரும் சம்மதித்தார். மறுநாள் காலை அரச சபை கூடியது. அமைச்சரை இன்னும் காணோமே என்று அரசர் நினைத்துக் கொண்டிருந்தபோது அமைச்சர் வந்தார்.

அவர் மட்டும் வரவில்லை. தன்னுடன் நாலு பேரையும், அழைத்து வந்திருந்தார்.

“இவர்கள் எல்லாம் யார்? ஏன் இங்கு அழைத்து வந்தீர்?” என்று அரசர் கேட்டார்.

“அரசே, இதோ இருக்கிறானே, இவன் கொள்ளைக்காரன்– இரண்டாவது மனிதன் ஞானி – மூன்றாவது மனிதன் பிச்சைக்காரன் – நான்காவது மனிதன் ஒரு வள்ளல். நீங்கள் கேட்ட 4 கேள்விகளுக்கு, இந்த 4 மனிதர்களே பதில்,” என்றார் அமைச்சர்.

“நான்கேட்டதற்கும்,நீங்கள்கொண்டுவந்த ஆசாமிகளுக்கும், என்ன சம்பந்தம்?” என்று கேட்டார் அரசர்.



அமைச்சர் முதலாவது ஆளை முன்னே நிறுத்திச் சொன்னார்.

“அரசே, நீங்கள் போட்ட முதல் புதிருக்கு விடை இவன் தான்! இவன் ஒரு கொள்ளைக்காரன். இவன் ஊர்ப் பணத்தைக் கொள்ளையடித்து எல்லா வசதிகளோடும் வாழுகிறான். இவன் இந்த உலகில் மகிழ்ச்சியாக இருக்கிறான். இவனுக்கு மேல் உலகில் இடமில்லை. எனவே, இங்கு உண்டு, அங்கு இல்லை என்பதற்கு இவன்தான் விளக்கம்” என்று விளக்கம் தந்தார் அமைச்சர்.

இரண்டாவது மனிதனைக் காட்டி, “இந்த மனிதன் ஒரு ஞானி. சதா சர்வ காலமும், ஆண்டவனையே நினைத்துக் கொண்டிருக்கும் இந்த மனிதனுக்கு இந்த உலகத்தில் எதுவும் வேண்டியதில்லை. இவனுக்கு நிச்சயம் மேல் உலகத்தில் இடம் உண்டு. எனவே, இங்கு இல்லை, அங்கு உண்டு என்பதற்கு, இவன்தான் விளக்கம்” என்றார் அமைச்சர்.

மூன்றாவது மனிதனைக் காட்டி “இவன் ஒரு பிச்சைக்காரன். இவன் வாழ்க்கை பரிதாபமானது. இவனுக்கு இந்த உலக வாழ்க்கை ஒரு தண்டனையாகவே இருக்கிறது. மேலும், எந்த ஒரு நல்ல செயலையும் இவன் செய்யவில்லை. எனவே, இவனுக்கு இந்த உலகமும் இல்லை. அந்த உலகமும் இல்லை! இங்கும் இல்லை அங்கும் இல்லை என்பதற்கு இவன் தான் விளக்கம்” என்றாராம் அமைச்சர்.

அரசர் நாலாவது மனிதனைப் பார்த்து, “இவனைப் பற்றி என்ன சொல்லப் போகிறீர் **?**” என்று கேட்டார்.

அதற்கு அமைச்சர், “இவன் ஒரு வள்ளல். தன்னிடம் இருப்பதைப் பிறருக்கும் கொடுத்து வருகிறான். அதனால் இவனுக்கு மகிழ்ச்சியும், மனநிறைவும் கிடைக்கிறது. மேலும், இவனை மக்கள் மதிக்கிறார்கள். புகழுகிறார்கள். அது மட்டுமல்லாமல், இவனுடைய நற்செயல்களுக்காக மேல் உலகமும் நிச்சயம் உண்டு. ஆகவே, இங்கும் உண்டு, அங்கும் உண்டு என்பதற்கு இவன்தான் விளக்கம்” என்று மன்னரின் புதிர்களுக்கு அமைச்சர் விளக்கம் அளித்தார்.

தான் போட்ட நாலு புதிர்களுக்கும் அமைச்சர் அளித்த அருமையான விளக்கங்களால் மனம் மகிழ்ந்த அரசர், பெரும் பரிசை அமைச்சருக்கு வழங்கினார்.

அது மட்டும் அல்லாமல், “வாழ்ந்தால் இந்த நாலாவது மனிதனைப் போல் வாழ வேண்டும். இனி எனது வாழ்நாள் முழுவதும் வள்ளல் மனம் படைத்த அந்த மனிதனைப் போலவே வாழ்வேன், என்று அரசர் உறுதி மேற்கொண்டாராம்.

---

**13–03–2003** அன்று திருநெல்வேலியில் நடைபெற்ற
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# அவதாரம்

**ஒ**ரு மன்னர் இருந்தார். அவருக்கு ஒரு நாள் திடீரென்று ஒரு சந்தேகம் வந்தது. "அமைச்சரே! எனக்கு வேலைக்காரர்கள் இருப்பதைப் போல, கடவுளுக்கும் வேலைக்காரர்கள் இருப்பார்கள் இல்லையா?" என்று கேட்டார்.

"ஆம் அரசே நிச்சயம் இருப்பார்கள். இந்த ஒரு உலகத்தில் மட்டுமல்ல எல்லா உலகங்களிலும் கடவுளுக்கு வேலைக்காரர்கள் உண்டு. சொல்லப் போனால் கோடி கோடியாகக் கடவுளுக்கு வேலைக்காரர்கள் இருப்பார்கள்" என்று அமைச்சர் பதில் சொன்னார். "அப்படியானால் நான் கேட்கிற கேள்விக்கு மிகச் சரியான பதிலை, நீங்கள் சொல்ல வேண்டும் என்றார் அரசர்.

"என்ன கேள்வி என்று சொல்லுங்கள் அரசே. என்னால் இயன்ற வரை பதில் சொல்லுகிறேன்" என்று சொன்னார் அமைச்சர். "உலகத்தில் மக்களுக்கு நல்வழி காட்ட கடவுள் அவதாரம் எடுத்து வருகிறார் என்று சொல்லுகிறோம். கடவுள் ஏன் தானே வர வேண்டும்? அவருக்குத் தான் இத்தனை வேலைக்காரர்கள் இருக்கிறார்களே? அவர்களில் யாராவது ஒருவரை, கடவுள் ஏன் அனுப்பக் கூடாது?" என்று மன்னர் கேட்டார்.

"ஒரு மாத கால அவகாசம் கொடுங்கள். சரியான பதிலைச் சொல்லுகிறேன்" என்று அமைச்சர் மன்னரிடம் கூறினார்.

கடைசி நாளில் "நாம் எல்லோரும் ஆற்றில், படகில் போகலாம். அப்போது நீங்கள் கேட்ட கேள்விக்கு உரிய பதில் கிடைக்கும்" என்று அமைச்சர் மன்னரிடம் தெரிவித்தார்.

அதன்படி, மன்னர் 10 படகுகளைத் தயார் செய்யச் சொன்னார். மன்னர் உட்பட எல்லோரும் ஆற்றங்கரையில் காத்திருந்தார்கள். ஆனால், அமைச்சர் மட்டும் வரவே இல்லை. காத்திருந்து, காத்திருந்து, மன்னரும் மற்றவர்களும் பொறுமை இழந்தார்கள். அமைச்சர் வருவாரா மாட்டாரா என்று யாருக்கும் தெரியவில்லை.



படகில் பயணம் செய்வதா அல்லது அரண்மனைக்குத் திரும்புவதா என்று அரசர் யோசித்துக் கொண்டிருக்கும் வேளையில் திடீர் என்று அமைச்சர் அரக்கப் பரக்க ஓடி வந்தார். தோளிலே, மன்னரின் மகனைச் சுமந்து கொண்டு அமைச்சர் வந்து கொண்டிருந்தார். மூச்சிரைக்க ஓடி வந்த அமைச்சர் மன்னரிடம் சொன்னார், “மன்னித்துக் கொள்ளுங்கள், அரசே! நான் அரண்மனைக்கு வந்துவிட்டு, புறப்படும்போது இளவரசரும் உடன் வருவேன் என்று அடம் பிடித்தார். நான் என்ன சொல்லியும் கேட்கவில்லை. இளவரசர் ஓயாமல் அழுது கொண்டிருந்தார். கடைசியில் அவரையும் தூக்கிக் கொண்டு ஓடோடி வந்தேன்” என்று அமைச்சர் விளக்கம் அளித்தார்.

மன்னர் கோபம் தீராமல், “வாருங்கள், எல்லோரும் படகில் ஏறலாம்” என்று கூறிவிட்டு அவரும் படகில் ஏறினார். மன்னரின் மகனைத் தோளில் போட்டுக் கொண்டிருந்த அமைச்சரும் ஒரு படகில் ஏறினார். நடு ஆற்றுக்கு வரும்போது அமைச்சர் தோளில் இருந்த மன்னரின் மகனைத் தண்ணீரில் போட்டு விட்டார். எல்லோரும் கதறினார்கள். பதறினார்கள். மன்னர் உடனே ஆற்றுக்குள் குதித்தார். தன் மகனை தூக்கினார். படகிலே மகனை ஏற்றித் தானும் ஏறிக்கொண்டார். அப்புறம்தான் தெரிந்தது ஆற்றில் எறியப்பட்டது, அரசரின் மகன் அல்ல அவனைப் போன்ற மெழுகு பொம்மை என்பது.

அமைச்சரைப் பார்த்து கடும் கோபத்துடன் “ஏன் இப்படிச் செய்தீர்” என்று மன்னர் கேட்டார். அமைச்சர் சொன்னார் “அரசே, கோபப்பட வேண்டாம். ஒருமாத காலத்திற்கு முன்னால் என்னிடம் ஒரு கேள்வி கேட்டீர்கள். அதற்கு ஒரு மாதம் கழித்து,

பதில் சொல்வதாகச் சொன்னேன். இன்று நான் என் செயல் மூலம் பதில் சொல்லிவிட்டேன்'' என்று சொன்னார்.

மன்னருக்கு அதிகமாகக் கோபம் வந்தது. உடனே அமைச்சர் சொன்னார், ''ஆற்றில் இளவரசர் விழுந்து விட்டார் என்று தெரிந்ததும் இத்தனை தளபதிகளும், சேவகர்களும் இருந்தபோதும், நீங்களே தண்ணீரில் குதித்து, யாரையும் எதிர்பார்க்காமல் மகனைக் காப்பாற்றினீர்கள். நீங்கள் ஏன் உங்கள் வேலைக்காரர்களிடம் தண்ணீரில் குதித்து இளவரசரைக் காப்பாற்றச் சொல்லியிருக்கக் கூடாது? ஏனென்றால், இளவரசர் உங்கள் மகன். ஆகவே, காப்பாற்றுவதற்காக நீங்களே தண்ணீரில் குதித்தீர்கள். கடவுளும் அப்படித்தான். அவர் தன்னுடைய பிள்ளைகளாகிய மக்களைக் காப்பாற்றத்தானே வானுலகத்திலிருந்து பூமிக்கு வருகிறார். வேறு யாரையும் அனுப்புவதில்லை. உங்கள் மகனைக் காப்பாற்ற நீங்களே ஆற்றில் குதித்தது போல, தன் மக்களைக் காப்பாற்ற, கடவுளே அவதாரம் எடுத்து, நேரிலே வருகிறார்.'' அமைச்சர் சொன்ன பதிலால், மன்னர் மகிழ்ச்சி அடைந்தார்.

தன் பக்தர்களுக்கு உதவ, ஆண்டவன் அவதாரம் எடுத்து, நேரிலே வந்தார். தன் மகனைக் காப்பாற்ற, மன்னர் தானே ஆற்றில் குதித்தார்.

---

14–03–2003 அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற
அரசு விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# தயையும் கொடையும் பிறவிக்குணம்

**ஓ**ர் ஊரில் மிகவும் கொழுத்த பணக்காரர் ஒருவர் இருந்தார். அவரிடம் நிறைய பொருட்செல்வம் இருந்தாலும் அதனைத் துன்பத்தில் இருக்கும் ஏழை எளிய மக்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்கின்ற தயாள சிந்தனை அற்றவராக அந்த தனவந்தர் இருந்தார். அந்தச் செல்வந்தர் எடுக்க மட்டுமே



தெரிந்தவர்; மற்றவர்களுக்குக் கொடுக்கத் தெரியாதவர் என்பதை அறியாத ஒரு புலவர், அவரைப் புகழ்ந்து பாடிப் பரிசுகள் பெற்று விடலாம் என்ற நப்பாசையுடன் அவருடைய வீட்டுக்குப் போனார்.

புலவரை வரவேற்ற அந்த செல்வந்தர் என்ன ஏது என்று விசாரித்தார். புலவரும் தனது வறுமை நிலையை எடுத்துக் கூறி பொருள் உதவி செய்ய வேண்டும் என்று வேண்டி அவரைப் புகழ்ந்து ஒரு பாடலைப் பாடினார். உடனே தனவந்தர் தன் வீட்டின் உள்ளே இருந்த கணக்குப் பிள்ளையை அழைத்து, "புலவருக்கு இரண்டு போர்வைகளைக் கொடுங்கள்" என்று கூறினார்.

அது குளிர் காலம். தன் தேவையறிந்து, போர்வைகள் தருகிறாரே என்று மகிழ்ந்து போன புலவர், இன்னும் ஒரு பாடலைப் பாடினார். உடனே அந்த செல்வந்தரும் தன் கணக்குப் பிள்ளையிடம், "புலவருக்கு ஒரு பட்டு வேட்டியும், அவரது மனைவிக்கு ஒரு பட்டுச் சேலையும் கொடுங்கள்" என்று கூறினார். இதனால் இன்னும் அதிகமாக உற்சாகம் அடைந்த புலவர் அவரைப் பாராட்டி மேலும் ஒரு பாடலை எடுத்துவிட்டார். இதைக் கேட்ட செல்வந்தர், தன் கணக்குப் பிள்ளையை மீண்டும் அழைத்து "புலவருக்கு நூறு பொற்காசுகள் கொடுங்கள்" என்றார்.

கணக்குப் பிள்ளையும், எல்லாவற்றுக்கும் சரி என்று தலையாட்டிவிட்டு உள்ளே போய்விட்டார். பின்னர் அந்த தனவந்தர் நாட்டு நடப்புகளைப் பற்றி புலவரிடம் பேச ஆரம்பித்துவிட்டார். நேரமோ போய்க் கொண்டே இருந்தது.

ஆனால், தனவந்தர் கொடுக்கச் சொன்ன எந்தப் பொருளுமே உள்ளிருந்து வெளியே வரக் காணோம்.

பொறுமையிழந்த புலவர் தனவந்தரிடம், “ஐயா, நீங்கள் சொன்ன எந்தப் பொருளையும், கணக்குப்பிள்ளை இது வரையில் கொண்டு வந்து தரவில்லை. நேரம் ஆகிவிட்டது. நான் வீட்டிற்குச் செல்ல வேண்டும். எனக்குத் தருவதாகச் சொன்ன பரிசுப் பொருட்கள்” என்று கேட்கத் தொடங்கும் போதே– “ஓ, அதுவா” என்று கூறிய தனவந்தர் “ஐயா, புலவரே! நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள். என் மனம் மகிழும்படியாக நீங்கள் சில வார்த்தைகளைச் சொன்னீர்கள். அதற்கு உங்கள் மனம் மகிழும்படியாக நான் சில வார்த்தைகளைச் சொன்னேன். நீங்கள் பாடிய பாடலைக் கேட்டு என் மனம் எப்படி மகிழ்ச்சி அடைந்ததோ – அதே போல நான் கணக்குப் பிள்ளையிடம் ‘அதைக் கொடு இதைக் கொடு’, என்று சொன்ன போது உங்கள் மனம் மகிழ்ச்சி அடைந்தது இல்லையா? அவ்வளவுதான். இரண்டுக்கும் சரியாகப் போயிற்று! போய் வாருங்கள்” என்று கூறி பெரிய கும்பிடு ஒன்றைப் போட்டு விட்டு உள்ளே போய் விட்டார். எப்படி இருக்கிறது கதை?

---

**14–03–2003** அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற

அரசு விழாவில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# அதே முகம்

**உ**லகப் புகழ் பெற்ற ஓவியர் ‘‘லியோனார்டோ டா வின்சி’’ (Leonardo da Vinci) ஏசு பெருமானின் ‘‘கடைசி இரவுச் சாப்பாடு’’ - The Last Supper - என்னும் ஓவியத்தை, வரையத் திட்டமிட்டு இருந்தார். ரோமாபுரி ஆலயம் ஒன்றில், அந்த ஓவியம் வரையப்பட வேண்டும். ஏசு பெருமான், தன் 12 சீடர்களுடன் இருக்கின்ற காட்சியை, ஓவியர் வரைய ஆரம்பித்தார். ஏசு பெருமான் எப்படி இருப்பார் ? அவருடைய முகப் பொலிவு எப்படி இருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து, எழுதுவதை விட பாலொழுகும் ஒரு பச்சைக் குழந்தையின் முகத்தை மாதிரியாக வைத்து எழுதினால் சிறப்பாக இருக்கும் என்று கருதிய லியோனார்டோ டா வின்சி அப்படி ஒரு சிறுவனைத் தேடினார். ஒரு சாந்த சொரூபனாக அழகிய முகத்தோடு, ஒரு சிறுவன் கிடைத்தான். அந்தக் குழந்தையின் முகத்தை மாதிரியாக வைத்து ஏசு பெருமானின் திருமுகம் வரையப்பட்டது. அதே போல, சீடர்களுடைய முகங்களை வரைய வேண்டும். 11 சீடர்களுடைய முகங்களை ஒரு வழியாக வரைந்துவிட்டார்.

ஆனால், ஏசு பெருமானை 30 வெள்ளிக் காசுகளுக்காக காட்டிக் கொடுத்த சீடனாகிய ஜுடாஸின் முகம் எப்படி இருக்கும் என்பதை அவரால் கற்பனை செய்ய முடியவில்லை. ஆகவே அப்படிப்பட்ட ஒரு முகத்தைத் தேடினார். நாட்கள் உருண்டு, மாதங்கள் கழிந்தன. மாதங்கள் உருண்டு, ஆண்டுகள் கழிந்தன. அப்போதும் ஜுடாஸின் முகத்துக்கான, மாதிரி கிடைக்காததால், ஓவியம் முற்றுப் பெறாமலே இருந்தது. சில ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு நாள், ஓவியர் லியோனார்டோ டா வின்சியின் வீட்டு

வாயில்படியில் ஒருவன் வந்து விழுந்தான். லியோனார்டோ டா வின்சி அவனைப் பார்த்தார்.

அந்த முகத்தில் ஒரு வஞ்சகம் இருந்தது. வந்தவன் பசியாலும், தாகத்தாலும், களைப்பாலும், சவம் போல விழுந்து கிடந்தான். அவனைத் தொட்டுத் தூக்கி உள்ளே அழைத்துச் சென்று, பருகுவதற்குப் பழரசம் தந்து உண்பதற்கு உணவும் தந்தார் ஓவியர். அவன் உண்ணும் போதும் அவனையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார். அவர் மனதுக்குள் ஒரு முடிவு எடுத்தார். ''இவனது முகம், ஜுடாஸின் முகத்திற்குச் சரியாக இருக்குமே'' என்று நினைத்தார். அவன் பசி தீர்ந்து கொஞ்சம் தெளிவான நிலைக்கு வந்த பிறகு, ''உன்னை வைத்து, ஓர் ஓவியம் வரையப் போகிறேன்'' என்று சொன்னார். அவனும் சரி என்றான். அவனை அவர், ஓவியம் வரைந்து கொண்டிருந்த ஆலயத்திற்கு அழைத்துச்



சென்று ஓரிடத்தில் அமர வைத்தார். “உன் முகத்தை வைத்து, ஏசு பெருமானைக் காட்டிக் கொடுத்த ஜுடாஸின் முகத்தை வரையப் போகிறேன்” என்று சொல்லிவிட்டு, வண்ணங்களையும், தூரிகைகளையும் சேகரிக்கத் தொடங்கினார்.

அங்கு வரையப்பட்டிருந்த ஓவியங்களை அந்த இளைஞன் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று, அவன் கதறி அழத் தொடங்கினான். ஓவியரால் அவனை சமாதானப்படுத்த இயலவில்லை. ஒரு வழியாக, அவன் கதறலை நிறுத்தியதும், “ஏன் இப்படிக் கதறி அழுகிறாய்? உனக்கு என்ன நேர்ந்தது?” என்று அவனிடம் கேட்டார். “நான் சிறு பையனாக இருந்தபோதே, இந்த இடத்திற்கு நான் வந்தது நினைவிருக்கிறது. அதோ வரைந்திருக்கிறீர்களே, ஏசு பெருமான் ஓவியம் அந்த முகம் என்னுடைய முகம்தான். இன்று நான் வளர்ந்த பிறகு ஜுடாஸின் முகத்திற்கும், என்னுடைய முகமே பயன்படப் போகிறது என்று நினைத்துப் பார்த்தேன். அழுகை வந்தது. எப்படி இருந்த நான் எப்படி மாறிவிட்டேன்! அமைதி தவழும் அந்த அழகிய முகம் எங்கேபோனது? இன்று என் முகத்தை என்னாலேயே பார்க்க சகிக்க முடியவில்லை. எத்தனை வஞ்சகம் ததும்பும் விழிகள் என் விழிகள்; கூடா நட்பால் இந்த நிலைமைக்கு நான் ஆளாகி இருக்கிறேன்”, என்று அவன் சொன்னானாம். லியோனார்டோ டா வின்சி விக்கித்து நின்று விட்டார். பால் வழியும், பச்சைக் குழந்தையின் முகம் இன்று ஒரு துரோகியின் முகமாக மாறியதற்கு என்ன காரணம்? சமூகச் சூழல் தான் காரணம். அவன் சேர்ந்த சேர்க்கை தான் காரணம் என்று அவர் நினைத்தார்.

---

**14–03–2003** அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற
அரசு விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# அறம் செய்
# அன்றே செய்

**அ**ந்த மகாபாரத்தில் ஒரு கதை! தருமர் தன் தம்பிகளோடு அரச சபையில் அமர்ந்திருந்தார். அந்த நேரம் பார்த்து ஓர் ஏழை சபைக்கு வந்து தருமரிடம் உதவி கேட்டான்.

ஏதோ முக்கிய விஷயமாகப் பேசிக் கொண்டிருந்த தர்மர், "நாளைக்கு வா" என்று சொல்லி அனுப்பினார்.



தருமரின் தம்பி பீமன் உடனே சபையை விட்டு வெளியே சென்று முரசு அறைந்தான். முரசின் முழக்கத்தைக் கேட்டு மக்கள் ஓடோடி வந்தார்கள். பீமன் உரத்த குரலில் சொன்னான். "மன்னர் தருமராஜா காலத்தை வென்று விட்டார்"! என்று எல்லோருக்கும் பீமன் அறிவித்தான். அவன் அரண்மனையை விட்டு அவசரமாக வந்ததைப் பார்த்த தருமரும், அர்ஜுனனும், நகுலனும், சகாதேவனும், மந்திரிகளும், அவனைத் தொடர்ந்து வந்து அவன் முரசு அறைவதைப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

தருமர், பீமனைப் பார்த்துக் கேட்டார்– "பீமா, என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று தெரிந்துதான் செய்கிறாயா?" இவ்வாறு தருமர் கேட்டதும், "மன்னா, நீங்கள் காலத்தை வென்றுவிட்ட செய்தியை மக்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்" என்று பீமன் பதில் சொன்னான்.

என்ன சொல்கிறாய்? நான் காலத்தை வென்றுவிட்டேனா? யார் உனக்குச் சொன்னது? என்று தருமர் கேட்டார்.

"சற்று முன் நீங்கள் தானே உதவி கேட்டு வந்த ஒருவனை நாளைக்கு வா என்று சொன்னீர்கள்? நாளைக்கு இருப்போம் என்று யாரால் உறுதியாகச் சொல்ல முடியும்? காலத்தை வென்ற ஒருவரால் தானே சொல்ல முடியும்? ஆகவே தான் நீங்கள் காலத்தை வென்றுவிட்ட செய்தியை மக்களுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன்" என்று பீமன் சொன்னானாம்.

தருமருக்கு உண்மை புரிந்தது. தன் தவறு தெரிந்தது.

---

**15–03–2003** அன்று கன்னியாகுமரியில் நடைபெற்ற
அரசு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை.

# உழைப்பின் அருமை

**ஓ**ர் அரசரும் அவருடைய அமைச்சரும் ஒரு நாள் மாலை நேரத்தில் உலாவச் சென்றார்கள். அவ்வாறு சென்று கொண்டிருந்தபோது, ஒரு வீட்டின் திண்ணையில், இளைஞன் ஒருவன் உட்கார்ந்து செருப்புகளைத் துடைத்துக் கொண்டிருந்ததை அவர்கள் இருவரும் பார்த்தார்கள். அதிலே என்ன வேடிக்கை என்றால் விலை உயர்ந்த ஒரு பட்டுச்



சால்வையால் மிகச் சாதாரண தனது செருப்புகளை அவன் துடைத்துக் கொண்டிருந்தான். இதைப் பார்த்த அரசருக்கு ஒரே ஆச்சரியம்! அரசர் உடனே அமைச்சரிடம் கேட்டாராம் "இவன் ஏன் இப்படிச் செய்கிறான். என்று எனக்குப் புரியவில்லை. உங்களுக்குப் புரிகிறதா?" என்று கேட்டார். அதற்கு அமைச்சர், "இவன் ஏன் இப்படி செய்கிறான் என்று எனக்கும் புரியவில்லை மன்னா.

யாராவது விலை உயர்ந்த பட்டுச் சால்வையைச் சாதாரண செருப்பைத் துடைப்பதற்காகப் பயன்படுத்துவார்களா? ஒரு வேளை இவனுக்கு மனநிலை சரியில்லையோ? பட்டுச் சால்வையைக் கொண்டு செருப்பைத் துடைக்கும் அளவுக்கு பெரிய செல்வந்தனாகவும் அவனைப் பார்த்தால் தெரியவில்லையே? எதற்கும் அவனையே கேட்டுக் பார்த்து விடலாம் மன்னா" என்று அமைச்சர் பதில் கூறினார்.

சரி, இதைப் பற்றி நேரில் அவனையே கேட்டு விடுவோம் என்று நினைத்த அரசர் அவனிடம் சென்று "இந்த சாதாரண செருப்புகளை, இப்படி விலை உயர்ந்த பட்டுச் சால்வையைக் கொண்டு துடைக்கிறாயே ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று மன்னர் கேட்டார்.

அதற்கு அந்த இளைஞர் "இதை சாதாரண செருப்பு என்கிறீர்களே? இதை வாங்க நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன் என்பதை நீங்கள் அறிவீர்களா? நான் கடினமாக உழைத்து ஈட்டிய பொருளில் இருந்து வாங்கப்பட்ட செருப்பு இது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்" என்றான்.

மன்னர், "அப்படியானால் அந்த சால்வை?", என்று வினவினார்.

"அதுவா.... அது என்னுடைய தாத்தா காலத்திலிருந்து இந்த வீட்டில் கிடக்கிறது" அலட்சியமாக பதில் சொன்னான். அப்போதுதான் ஓர் உண்மை அரசருக்குப் புரிந்தது.

நாம் உழைத்து அந்த உழைப்பிலே கிடைத்த பணத்தை கொண்டு ஒரு பொருளை வாங்கினால்தான், அதனது அருமை நமக்கு நன்றாகத் தெரியும். முன்னோர் சொத்து என்கிறபோது நாம் அவ்வளவாக அதற்கு மரியாதை தருவதில்லை.

ஆகவே உழைப்பிற்கு என்றும் உயர்வு உண்டு என்பதை சொல்லி, பிறர் உழைப்பில் கிடைக்கும் பொருளை அனுபவிப்பதில் உள்ள இன்பத்தை விட சொந்த உழைப்பின் உயர்வில்தான் உண்மையான மனநிறைவு கிடைக்கும் என்பதை உணர்ந்து நம்பிக்கையோடு கடமைகளை நிறைவேற்றுங்கள். வெற்றி உங்களுக்கே!

---

**15–03–2003** அன்று கன்னியாகுமரியில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# தானமே உயர் பண்பு

**ஒ**ரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் தொடர்ந்து சண்டை நடந்து வந்தது. அசுரர்கள் தாங்களாகவே தங்கள் வல்லமையால் ஜெயித்துக் கொண்டே வந்தார்கள். தேவர்களால் தாங்களாகவே வெல்ல முடியவில்லை. அவர்களுக்கு சிவபெருமான் உதவியோ, பராசக்தியின் உதவியோ, அவ்வப்போது தேவைப்பட்டது அவர்களை வைத்துத்தான் தேவர்களால் வெல்ல முடிந்தது.

ஒரு முறை தேவர்கள் தங்கள் உடைமைகளை எல்லாம் இழந்து விட்டு நிர்கதியாக நின்றார்கள். அசுரர்களை வெல்வதற்கு அவர்களுக்கு வழியே தெரியவில்லை. அப்போது தேவர்களின் தலைவனான இந்திரனுக்கு ஒருவர் ஆலோசனை சொன்னார்.

“ததீசி முனிவர் என்ற ஒரு முனிவர் இருக்கிறார். அவருக்கு நிகரான தவசீலர் எந்த உலகத்திலும் கிடையாது. அவர் தமது தவத்தின் வலிமையை எல்லாம் தனது முதுகெலும்பில் வைத்திருக்கிறார். அவரிடம் சென்று அவரது முதுகெலும்பைக் கேட்டுப் பெற முடிந்தால் அந்த முதுகெலும்பை ஆயுதமாக்கி அசுரர்களை அழிக்கலாம்” என்பது தான் அந்த யோசனை.

உடனே தேவாதி தேவர்கள் எல்லாம் தேவேந்திரன் தலைமையில் ததீசி முனிவரைப் பார்க்கப் போனார்கள். ததீசி

முனிவர் தவத்தில் இருந்தார். தேவேந்திரன் உட்பட எல்லாத் தேவர்களும் ததீசி முனிவரைப் பலவாறாகப் புகழ்ந்து தங்களை இரட்சிக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்தார்கள். தனது மோன நிலையிலிருந்து விழித்த முனிவர் "என்ன வேண்டும் உங்களுக்கு? என்னை நாடி வந்த காரணம் என்ன?" என்று கேட்டார். அதற்கு எல்லா தேவர்களும் ஒரே குரலில் பதில் சொன்னார்கள். "முனிவர் சிரேஷ்டரே! எங்களைக் காப்பதற்கு இப்போது உங்களை விட்டால் ஆளில்லை. உங்களிடம் ஓர் உதவி கேட்க வேண்டும் என்று வந்தோம்" என்று தேவர்கள்



சொன்னார்கள். "விஷயத்தைச் சொல்லுங்கள் என்ன உதவி வேண்டும்?" என்று கேட்டார் ததீசி முனிவர்.

"எங்களுக்கு அசுரர்களை வெல்ல ஆயுதம் தேவைப்படுகிறது. கைவசம் உள்ள எந்த ஆயுதத்தாலும் அவர்களை அழிக்க முடியவில்லை. ஆகவே, தபோபலம் பொருந்திய உங்கள் முதுகெலும்பைத் தர முடியுமானால் நாங்கள் அதன் மூலம் ஒரு ஆயுதத்தைச் செய்து அசுரர்களை அழித்து விடுவோம்" என்று தேவர்கள் சொன்னதைக் கேட்டதும் முனிவர் மகிழ்ச்சி அடைந்தார் "என்னுடைய முதுகெலும்பு தானே வேண்டும்? தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி முனிவர் முடிவில்லாத சமாதியில் ஆழ்ந்தார்.

அவருடைய முதுகெலும்பை எடுத்துக் கொண்டார்கள். அந்த முதுகெலும்பைக் கடைந்து ஓர் ஆயுதத்தைத் தயாரித்தார்கள். அந்த ஆயுதத்திற்கு "வஜ்ராயுதம்" என்று பெயர். அதனால்தான், தேவேந்திரனுடைய ஆயுதத்தை வஜ்ராயுதம் என்று சொல்கிறோம். அவனுக்கு அந்த ஆயுதம் இப்படித்தான் கிடைத்தது. ததீசி முனிவரின் முதுகெலும்பே தேவேந்திரன் வஜ்ராயுதமாக ஆனது. இது கதை!

---

15–03–2003 அன்று கன்னியாகுமரியில்
நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# கொடுப்பதே கிடைக்கும்

**ம**லைப் பகுதியில் ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டில் ஒரு சின்னஞ்சிறு பையன் இருந்தான். அவன் ஒரு நாள் அம்மாவிடம் சண்டை போட்டுக் கொண்டு, “நான் உன்னை வெறுக்கிறேன்; நான் உன்னை வெறுக்கிறேன்;” என்று சொல்லிக் கொண்டே வெளியே ஓடினான். ஓடிப்போனவன் வீட்டிற்கு வெளியே ஓரிடத்தில் நின்று கொண்டு “நான் உன்னை வெறுக்கிறேன்” என்று உரக்கக் கத்தினான். உடனே பல இடங்களில் இருந்தும்



“நான் உன்னை வெறுக்கிறேன்”, என்று திரும்பத் திரும்பச் சப்தம் வந்தது. அவன் இருந்தது ஒரு மலைப்பகுதி! அந்தப் பள்ளத்தாக்கு முழுவதும் அவனது குரல் எதிரொலித்தது.

ஆனால், பாவம் சின்னஞ்சிறு பையனாகிய அவனுக்கு அது அவனது குரலின் எதிரொலிதான் என்று தெரியவில்லை. உடனே வேகமாக ஓடிச் சென்றான்; வீட்டில் அம்மாவைக் கட்டிக் கொண்டு தயங்கித் தயங்கிப் பேச ஆரம்பித்தான். ‘ஏன் இப்படி பயப்படுகிறாய்’? என்று அம்மா கேட்டாள். “இந்த மலையில் நிறைய கெட்ட பையன்கள் இருக்கிறார்கள். அந்தப் பையன்கள் எல்லோரும் ‘நான் உன்னை வெறுக்கிறேன்! நான் உன்னை வெறுக்கிறேன்’ என்று கத்துகிறார்கள்” என்று அந்தச் சிறுவன் பதில் சொன்னான். அவனுடைய தாய்க்கு என்ன நடந்திருக்கும் என்று புரிந்தது. அவள் புத்திசாலி.

அவள் என்ன நடந்தது என்பதையும் விளக்கிச் சொல்லவில்லை. அவள் மகனைப் பார்த்துச் சொன்னாள்— “இப்போது நான் சொல்கிறபடி செய்! நீ முன்னால் நின்ற இடத்தில் நின்று கொண்டு, ‘நான் உன்னை நேசிக்கிறேன்’ என்று உரக்கச் சொல் !” என்று கூறி அனுப்பி வைத்தாள்.

அந்தச் சிறுவன், பயந்து கொண்டே போனான். முன்பு நின்ற இடத்தில் நின்றான். “நான் உன்னை நேசிக்கிறேன்”, என்று உரக்கக் கத்தினான். உடனே, “நான் உன்னை நேசிக்கிறேன், நான் உன்னை நேசிக்கிறேன்!” என்று பல்வேறு குரல்கள் கேட்டன. பையனுக்கு இப்போது சந்தோஷம்!

---

4.7.2003 அன்று திருவள்ளூரில்
நடைபெற்ற அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# தெரியாமல் செய்த தவறு

**ஒ**ரு நாள் இராமபிரான் ஆற்றங்கரையில் நின்று கொண்டிருந்தாராம். அவரது கையில் கோதண்டம் என்ற அவரது வில் இருந்தது. தரையில் ஊன்றிய வில்லுக்குக் கீழே தவளை ஒன்று தவித்துக் கொண்டிருந்தது; துடித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த ராமன், ''நான் வில்லை உன் மீது ஊன்றும் போதே கத்தியிருக்கலாம் அல்லவா ? ஏன் கூக்குரல் எழுப்பவில்லை ?'' என்று கேட்டாராம். அதற்குத் தவளை பதில் சொன்னதாம், ''ராமா, யாராவது எனக்குத் தீங்கு செய்தால் ராமா !ராமா ! என்றுதான் கூக்குரலிடுவேன். அந்த ராமனே தீங்கு செய்தால், நான் யார் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவேன் ?'' என்று சொன்னதாம் அந்தத் தவளை. இதைக் கேட்டு ராமர் உள்ளம் உருகினார்; தவறு செய்து விட்டோமே என்று மனம் துடித்தார். தெரியாமல் செய்து விட்ட ஒரு தவறுக்கு கடவுளே கலங்கிக் கண்ணீர் விட்டதாகக் கதை கூறுகிறது.



---

**4.7.2003** அன்று திருவள்ளூரில் நடைபெற்ற
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து.

# எதுவும் நல்லதே

Positive Thoughts என்றதும், ஒரு கதை என் நினைவுக்கு வருகிறது.



ஆப்பிரிக்க நாட்டில் ஒரு மன்னர் இருந்தார். அவருக்கு ஒரு நெருங்கிய நண்பர் இருந்தார். இருவரும் குழந்தைப் பருவத்தில் இருந்தே ஒன்றாக வளர்ந்தவர்கள். இந்த நண்பருக்கு ஒரு பழக்கம் உண்டு. வாழ்க்கையில் எது நடந்தாலும், நல்லது நடந்தாலும் கெட்டது நடந்தாலும் இதுவும் நல்லதுதான் என்று சொல்வார். இது அவருக்குப் பழக்கம்.

ஒருநாள் இந்த மன்னரும் அவர் நண்பரும் வேட்டைக்குக் காட்டுக்குச் சென்றார்கள். இப்படி வேட்டைக்கு செல்லும்போதெல்லாம் இந்த நண்பர்தான் மன்னர் பயன்படுத்தும் துப்பாக்கிகளை எல்லாம் துடைத்துத் தயார் செய்து, அவற்றில் தோட்டாக்களைப் போட்டுக் கொடுப்பார். அதைப் போலவே அன்றைய தினமும் நண்பர் துப்பாக்கில் தோட்டாவைப் போட்டு மன்னரிடம் கொடுத்தார். அன்று அந்த நண்பர் ஏதோ ஒரு தவறு செய்துவிட்டார். எனவே, மன்னர் அந்தத் துப்பாக்கியை எடுத்துச் சுட்ட உடன் அது வெடித்து மன்னருடைய கட்டை விரல் சிதறி துண்டிக்கப்பட்டுவிட்டது. வேதனையில், வலியில் மன்னர் துடித்துக் கொண்டிருந்தார். ஆனால் அத்தகைய சூழ்நிலையிலும் அந்த நண்பர் இதுவும் நல்லதுதான் என்றார்.

மன்னருக்கு கோபமும், எரிச்சலும், ஆத்திரமும் தாங்கவில்லை. இல்லை இது நல்லது இல்லை என்று கூறி, அந்த நண்பரைச் சிறைக்கு அனுப்பிவிட்டார். அந்த நண்பர் சிறையில் அடைக்கப்பட்டார். ஒரு ஆண்டு காலம் கழிந்தது. ஒரு ஆண்டுக்குப் பிறகு மன்னர் மீண்டும் வேட்டைக்குச் சென்றார். இந்தமுறை அவர் போகக்கூடாத இடத்திற்கு, போகக்கூடாத ஒரு

பகுதிக்கு வேட்டையாடச் சென்றார். அங்கே சில காட்டுவாசிகள் மன்னரைப் பிடித்து, அவர்களுடைய கிராமத்திற்குக் கொண்டு போய்விட்டார்கள்.

இந்தக் காட்டுவாசிகள் Cannibals என்னும் பிரிவைச் சேர்ந்தவர்கள். Cannibals என்றால் மனிதர்களைக் கொன்று, மனித மாமிசத்தை சாப்பிடுபவர்கள். மனித மாமிசம் சாப்பிடுபவர்களை Cannibals என்பார்கள். இவர்கள்தான் மன்னரைப் பிடித்துவிட்டார்கள். ஆகவே, இந்த மன்னரைத் தங்கள் குலதெய்வத்துக்கு நரபலி கொடுத்து, பின்னர் அவரைச் சமைத்து சாப்பிடுவது என்று முடிவு செய்தார்கள்.

மன்னரை ஒரு தூணில் கட்டிப் போட்டு அவரைச் சுற்றி விறகுகளை அடுக்கி வைத்தார்கள். அந்த விறகுக்கு தீ மூட்ட அருகில் வந்தபோது, மன்னருக்கு ஒரு கட்டை விரல் இல்லை என்பதைக் கண்டுபிடித்தார்கள். அவர்களுடைய சம்பிரதாயப்படி அவர்களுடைய வழக்கப்படி அங்கஹீனம் உள்ளவர்களை நரபலி கொடுக்கக் கூடாது, சாப்பிடவும் கூடாது.

ஆகவே, மன்னருக்கு ஒரு கட்டைவிரல் இல்லை என்பதைக் கண்டவுடன், அவரை விடுதலை செய்துவிட்டார்கள். மன்னர் அரண்மனைக்குத் திரும்பிப் போய்க் கொண்டு இருந்தபோது, எத்தகைய சூழ்நிலையில் இந்தக் கட்டை விரலை இழக்க நேரிட்டது என்பதை நினைவு கூர்ந்து பார்த்தார். அப்போது நண்பருக்குத் தான் இழைத்த கொடுமையும் நினைவுக்கு வந்தது. மன்னர் உடனே வருத்தப்பட்டு, அந்த நண்பரைத் தேடிச் சிறைக்குச் சென்றார். அவரை விடுதலை செய்யச் சொன்னார்.

மன்னர் சொன்னார் – "அன்றைக்கு நீ சொன்னது சரிதான். என் கட்டைவிரல் துண்டிக்கப்பட்ட போது, இதுவும் நல்லதுதான் என்று நீ சொன்னாய். அந்தக் கட்டைவிரல் துண்டிக்கப்பட்டதால்தான் இன்று என் உயிர் காப்பாற்றப்பட்டது. உயிரோடு திரும்பி வந்திருக்கிறேன் என்று நடந்தவற்றை எல்லாம் சொன்னார். ஆகவே உன்னைச் சிறைக்கு அனுப்பி நான் உனக்கு தீங்கு இழைத்துவிட்டேன். உனக்கு கெடுதல் செய்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு என்றார்.

அப்போது நண்பர், 'இல்லை, இதுவும் நல்லதுதான்' என்றார். மன்னர் கேட்டார். "என் ஆருயிர் நண்பரையே நான் சிறையில் அடைத்துவிட்டேன். இதையும் நல்லது என்று எப்படி சொல்கிறாய் ? அதற்கு நண்பர் சொன்னாராம்– "நான் இன்று சிறையில் இல்லை என்றால் உங்களோடு காட்டிற்கு வந்திருப்பேன். அந்த காட்டு வாசிகள் என்னைப் பிடித்திருப்பார்கள். நான் அங்கக்கீனம் இல்லாதவன். இந்நேரம் என்னை பலிகொடுத்து சமைத்து சாப்பிட்டிருப்பார்கள். என்னை நீங்கள் சிறையில் அடைத்து வைத்ததால்தான் நான் உயிரோடு இருக்கிறேன்" என்று சொன்னாராம்.

---

**16.7.2003** அன்று நாமக்கல் மாவட்டத்தில்
நடைபெற்ற அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# இரண்டு பொய்யர்கள்

இரண்டு பொய்யர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். இருவரும் உலக மகாப் பொய்யர்கள். இருவரும் தங்கள் பாரம்பரியத்தைப் பற்றிப் பெருமையடித்துக் கொண்டு இருந்தார்கள்.



முதல் பொய்யன் கேட்டான்–

“தாஜ்மகால் தெரியுமா ?”

“தெரியும்” என்றான் இரண்டாம் பொய்யன்.

“அதைக் கட்டியவர் யார் தெரியுமா ?– எங்க அப்பாதான் அதைக் கட்டினார்” என்று சொன்னாராம்.

இதைக் கேட்டு விட்டு, இரண்டாவது பொய்யன் சும்மா இருப்பானா ? சும்மா இருக்கத்தான் முடியுமா ?

Dead sea தெரியுமா ? என்று கேட்டானாம். டெட் என்றால் செத்துவிட்டது என்று பொருள். Dead sea என்று ஒரு கடல் இருக்கிறது. அதைச் சாகடிச்சவரே எங்க அப்பாதான்” என்றானாம், அந்த இரண்டாவது பொய்யன்.

---

**16.7.2003** அன்று நாமக்கல் மாவட்டத்தில்
நடைபெற்ற அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# அன்புத் தாய்

**ஓ**ர் ஊரில் ஒரு தாய் இருந்தாள். அவள் அன்புத்தாய்! நீதித் தாய்! அவளுக்குப் பல பிள்ளைகள் இருந்தார்கள்.

ஒவ்வொரு பிள்ளையும், ஒவ்வொரு தொழிலை மேற்கொண்டு, அல்லும் பகலும் பாடுபட்டார்கள். தங்களது குடும்பத்தை மேம்படுத்த, இரவும் பகலும், உழைத்துக் கொண்டிருந்தார்கள்.



இவர்கள் காட்டிலும் மேட்டிலும் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்க, ஒரு பிள்ளை மட்டும் வீட்டிலேயே இருந்தது. மற்ற சகோதரர்கள் கொடுக்கும் பணத்துக்குக் கணக்கு வைத்துக் கொள்வதுதான் இந்தப் பிள்ளையின் தொழில். மற்ற சகோதரர்களைக் காட்டிலும் இந்தப் பிள்ளை கொஞ்சம் படித்த பிள்ளை.

நல்ல உணவு, நல்ல உடை, நல்ல ஓய்வு – இப்படி வசதியாக வாழ்ந்த இந்தப் பிள்ளை அடிக்கடி செலவுக்குப் பணம் கேட்டு அம்மாவைத் தொல்லைப்படுத்துமாம்.

அந்த அம்மாவும், கேட்ட பொருளைக் கொடுக்கிற அம்மாதான்; கேட்காமலும் கொடுக்கின்ற அம்மாதான். அந்த ஆண்டு மழை பெய்யவில்லை, கழனிகள் விளையவில்லை. எனவே, முன்பு கொடுத்ததுபோல் இப்போது கொடுக்க முடியவில்லை.

சட்டியில் இருந்தால்தானே, அகப்பையில் வரும்? அம்மா என்ன செய்ய முடியும்? அம்மா சொன்ன வார்த்தைகளை—அன்பு மொழிகளை—அந்தப் பிள்ளை காதிலே போட்டுக் கொள்ளவில்லை. போதாக்குறைக்கு, உள்ளூர் பணக்காரர் ஒருவரும், அம்மாவை எதிர்க்குமாறு அந்தப் பிள்ளையை தூண்டிக் கொண்டே இருந்தார்.

அந்தப் பணக்காரருக்கு எந்தக் குடும்பமும் ஒற்றுமையாக இருந்தால் பிடிக்காது. கோள் மூட்டுவதே தனது கொள்கை, குடி கெடுப்பதே தனது கோட்பாடு என்னும் இலட்சியத்தோடு வாழ்ந்து வந்தவர் அவர்.

வீட்டை விட்டு வெளியே வந்து விடுமாறும்; அவ்வாறு வெளியே வந்தால்தான் உறுதியாக ஆதரிப்பதாகவும் அந்தப் படுபாவி பணக்காரர் வாக்குறுதி தந்து கொண்டே இருந்தார்.

அந்தப் பிள்ளையும், அந்தக் கபட மனிதரின் வார்த்தை ஜாலங்களுக்குப் பலியாகி வீட்டை விட்டுப் போனான்.

கொஞ்ச நாள் கழிந்தது. அன்பிற் சிறந்த அம்மா, அச்சுறுத்தலுக்குப் பணிந்து விட மாட்டார் என்பதை அந்தப் பிள்ளை உணர ஆரம்பித்தது. தவறு செய்து விட்டோமோ என்று வருந்தி, தன்னை வீட்டிலே மீண்டும் சேர்த்துக் கொள்ளுமாறு அம்மாவிடம் வேண்டுகோள் விடுத்தது.

ஆனால், அதற்குள் அம்மாவுக்கும் பிள்ளைக்கும் அப்படி ஒரு சமரசம் ஏற்பட்டுவிடக் கூடாது என்று ஆத்திரப்பட்ட அந்த உள்ளூர்ப் பணக்காரர், வீட்டுக்கு நீ போய் விடாதே! உனக்காக நான் கோர்ட்டுக்கு ஆள் அனுப்பியிருக்கிறேன்! ஒரு கை பார்த்து விடுவோம் என்று கொம்பு சீவிக் கொண்டே இருந்தார். அந்த அடாவடிப் பணக்காரர் யார் என்று உங்களுக்குத் தெரியும்! வீட்டை விட்டு வெளியேறிய பிள்ளை யார் என்ற விவரமும் உங்களுக்கு நன்றாகத் தெரியும்!

---

**27.8.2003** அன்று சேலத்தில் நடைபெற்ற
அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# போலிச் சாமியார்

ஓர் ஊரில் ஒரு சாமியார் இருந்தார். அவர் ஒரு போலிச் சாமியார். அவருக்கு சீடர்கள் ஏராளம். அந்தச் சாமியாருக்கு எதுவுமே தெரியாது. அவருக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால், எல்லாம் தெரிந்தவர் போல், தன்னைக் காட்டிக் கொள்வார். ஒரு நாள், அவருடைய சீடர்கள் எல்லாரும், வெளியே சென்று இருந்தபோது அந்தச் சாமியாரைக் காண்பதற்காக ஒருவர் வந்தார். வந்தவர், தனக்கு இருந்த சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக சாமியாரிடம் கேள்விகள் கேட்கத் தொடங்கினார்.



அவருடைய முதல் கேள்வி, ‘கடவுள் எங்கே இருக்கிறார் ?’ என்பதாகும்.

இந்தக் கேள்வியை அவர் கேட்டதும், போலிச் சாமியாருக்கு, என்ன சொல்வது என்றே தெரியவில்லை. சீடர்கள் யாராவது இருக்கிறார்களா, என்று நாலா பக்கமும் சுற்றிச் சுற்றிப் பார்த்தார்.

வந்தவர் இரண்டாவது கேள்வியைக் கேட்டார்.

‘தர்மம் என்றால் என்ன ? இதுதான் அவர் கேட்ட இரண்டாவது கேள்வி.

போலிச் சாமியார் என்ன பதில் சொல்வார் ? என்ன பதிலை அவரால் சொல்ல முடியும் ? ஆகவே, மேலே கூரையைப் பார்த்தார். கீழே குனிந்து தரையைப் பார்த்தார்.

உடனே, வந்தவர் மூன்றாவது கேள்வியைக் கேட்டார். மனிதன் செய்ய வேண்டியது என்ன ?” இதுதான் அவர் கேட்ட மூன்றாவது கேள்வி. போலிச் சாமியாரின் நிலைமை, பரிதாபமாக இருந்தது. அவர், இரண்டு கைகளையும் தூக்கி உள்ளங்கைகளை விரித்துக் காட்டினார்.

இந்தப் போலிச் சாமியாரைப் பார்க்க வந்தவர், இந்த மூன்று கேள்வியையும் கேட்டு முடித்த உடன் வெளியே போய்விட்டார். வெளியே சாமியாரின் சீடர்கள் வந்து கொண்டிருந்தார்கள். தாங்கள் இல்லாத சமயத்தில், சாமியாரைச் சந்தித்து விட்டு வருபவரைப் பார்தத சீடர்கள் என்ன நடந்தது என்பதை அறிய விரும்பினார்கள். சாமியாரைப் பார்க்க வந்தவர் சொன்னாராம்.

“எத்தனை பெரிய ஞானி, உங்கள் குருநாதர் ! என் மனதில் இருந்த சந்தேகங்களை எல்லாம், அவர் தீர்த்து விட்டாரே” என்று புகழ்ந்து கூறி, நடந்ததை விவரிக்கத் தொடங்கினார்.

“நான் ‘கடவுள் எங்கே இருக்கிறார்’ என்று கேட்டேன். அவர் நாலா புறமும் பார்த்தார். அதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? மக்கள் எல்லா இடங்களிலும் கடவுளைத் தேடுகிறார்கள். அவர்கள் இன்னும் காணவே இல்லை என்பதுதான் அர்த்தம்!

“நான் ‘தர்மம் என்றால் என்ன’? என்று 2 ஆவது கேள்வி கேட்டேன். அதற்கு அவர் மேலேயும், கீழேயும் பார்த்தார். அதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? மேல், கீழ் என்று ஒன்றும் இல்லை. எல்லோரையும் சமமாகக் காண்பதே தர்மம், என்பது தான் அர்த்தம்!

“கடைசியாக நான் ஒரு கேள்வியைக் கேட்டேன். ‘மனிதன் என்ன செய்ய வேண்டும்?’ என்பது தான் அந்தக் கேள்வி. அதற்கு, அவர் இரண்டு கைகளையும் மேலே தூக்கி, கைகளை விரித்துக் காட்டினார். அதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? மனிதன் தனது கைகளால், மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், என்பது தான் அர்த்தம்!” – இவ்வாறு, போலிச் சாமியார் செய்த சைகைகளுக்கு எல்லாம், தத்துவ விளக்கங்களை அந்த மனிதர் தந்தார்.

இதைக் கேட்டு மகிழ்ந்த சீடர்கள், குருவிடம் போனார்கள். குரு பயங்கர கோபத்தில் இருந்தார். “அடப் பாவிப் பயல்களே! என்னை எல்லோரும் விட்டு விட்டுப் போய் விட்டீர்களே! அவன் என்னை, என்ன பாடு படுத்திவிட்டான் தெரியுமா! என்னென்னவோ கேள்விகளை எல்லாம் கேட்டான். அவற்றுக்கு எல்லாம், எவனுக்குப் பதில் தெரியும்?” என்று சொன்னாராம்.

---

1.9.2003 அன்று புதுக்கோட்டையில் நடைபெற்ற
அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# பேராசை

**ஓ**ர் ஊரில் ஒரு நல்ல மனிதன் இருந்தான். அவனுடைய நல்ல குணங்களைப் பாராட்டி, ஒரு தேவதை, அவனுக்கு மந்திரக் கண்ணாடி ஒன்றைப் பரிசாகத் தந்து, “ இந்தக் கண்ணாடியிடம் கேட்டால், அது உன்னுடைய விருப்பங்களை நிறைவேற்றித் தரும். ஆனால், மூன்று விருப்பங்களை மட்டுமே சொல்ல வேண்டும்” என்று சொல்லிவிட்டு மறைந்தது. அந்த நல்ல மனிதன், முதலில், பெரிய மாளிகை வேண்டும் என்று நினைத்தான்; கண்ணாடியிடம்



கேட்டான். உடனே பெரிய மாளிகையில், அவன் இருந்ததைப் பார்த்தான்.

இரண்டாவதாக, நிறைய செல்வம் வேண்டும் என்று நினைத்தான்; கண்ணாடியிடம் கேட்டான். உடனே பெருஞ்செல்வத்தைப் பெற்றான்.

மூன்றாவதாக, தான் வாழ்கின்ற ஊர், சிறப்பு அடைய வேண்டும் என்று நினைத்தான். கண்ணாடியிடம் கேட்டான். உடனே ஊர் மக்களுக்கு, எல்லா நலமும் வளமும் கிடைத்தது. இவ்வாறு தானும் உயர்ந்தான்; தான் பிறந்த ஊரையும் உயர்த்தினான்.

அவன் இப்படி திடீரென்று, பணக்காரன் ஆனதைப் பார்த்துப் பொறாமைப்பட்ட அவனது சொந்தக்காரன் ஒருவன், எப்படி இவற்றையெல்லாம் பெற்றான், என்பதை அறிந்து கொள்ளத் துடித்தான். நல்லவனைக் கேட்ட பொழுது, அவன் நடந்தவற்றை எல்லாம், நடந்தது நடந்தபடியே சொன்னான்.

“ஒரே ஒரு நாள் மட்டும், அந்த மந்திரக் கண்ணாடியை என்னிடம் கொடேன்.” என்று கேட்டு, வாங்கிக் கொண்டு போனான், பேராசைக்காரன். வீட்டுக்குப் போய், கண்ணாடியைப் பார்த்து, என்ன கேட்கலாம் என்று நினைத்தபோது, தன்னை எல்லோரும், “சப்பை மூக்கன்” என்று அழைப்பது, அவனுக்கு ஞாபகத்துக்கு வந்தது. உடனே, “என் மூக்கு நீளமாக வேண்டும்” என்று முதல் விருப்பத்தைத் தெரிவித்தான்.

உடனே மூக்கு, மூன்றடி நீளத்திற்கு நீண்டுவிட்டது. ஐயோ இப்படி ஆகிவிட்டதே, என்று பயந்துபோய், ‘எனக்கு இந்த மூக்கு வேண்டவே வேண்டாம்’ என்று, இரண்டாவதாகத் தனது

விருப்பத்தைத் தெரிவித்தான். உடனே மூக்கு முற்றிலுமாக மறைந்துவிட்டது. என்ன பயங்கரம்! அடடா! பழைய சப்பை மூக்கே பரவாயில்லையே என்று நினைத்தான். அது மூன்றாவது விருப்பம். உடனே பழைய சப்பை மூக்கே வந்துவிட்டது.

இப்போது என்ன செய்வது? மூன்று விருப்பங்கள் தானே கேட்க முடியும்? இருந்தாலும் பேராசை விடவில்லை. திரும்பத் திரும்ப கண்ணாடியின் முன்பு நின்று, அது வேண்டும், இது வேண்டும் என்று நினைத்தான். ஒன்றும் நிறைவேறவில்லை.

வாய்ப்புக் கிடைத்தாலும், அந்த வாய்ப்பு, அந்தப் பேராசைக்காரனுக்குப் பயன்படவே இல்லை, “நாமும் நல்லா இருக்கணும், ஊரும் நல்லா இருக்கணும்” என நினைத்தான் நல்லவன்.

அவன் நினைத்தது நடந்தது! கெட்டவனுக்கோ, தன்னைப் பற்றி நினைக்கவே, நேரம் போதவில்லை! மந்திரக் கண்ணாடி கிடைத்தும், அவனுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை.

அவனுக்கு, மறைந்த சப்பை மூக்கு மறுபடியும் கிடைத்ததே பெரிய விஷயம்! இல்லாவிட்டால், மூக்கே இல்லாமல் போயிருக்குமே! மூக்கு இல்லாத முகம், எப்படி இருந்திருக்கும், என்று நினைத்துப் பாருங்கள்.

---

**1.9.2003** அன்று புதுக்கோட்டையில் நடைபெற்ற
அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# ஆணவம் அழிவைத் தரும்



**ஓ**ர் ஆறு அமைதியாக, அதே நேரத்தில் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. அதற்கு ஒரே இலட்சியம்! போகும் பாதையில் இருக்கும் அத்தனை வயல்களையும், வளம் கொழிக்கச் செய்ய வேண்டும்; அந்த தேசம் வற்றாத செல்வத்தோடு விளங்க வேண்டும்; மக்கள் வயிறார உண்டு பசியாறவேண்டும்; எத்தனை எத்தனை மக்களுக்கு நன்மை செய்ய முடியுமோ, அத்தனை

பேருக்கும் நன்மை செய்ய வேண்டும்; எவ்வளவு சீக்கிரம் செய்ய முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் அதைச் செய்துவிட வேண்டும் – இதுதான் அந்த நதியின் இலட்சியம்! அப்படிப் போய்க் கொண்டிருந்தது அந்த ஆறு! அப்போது, கரையோரம் அடித்த காற்றில், ஆற்றிலே ஒரு துரும்பு வந்து விழுந்தது.

அது அற்பமான துரும்பு தான்! அதற்கு ஆணவம் அதிகம்! வாயாடித்தனமோ மிகவும் அதிகம்!

எந்தக் காற்று தன்னைத் தள்ளிக் கொண்டு ஆற்றில் போட்டதோ, அந்தக் காற்றிடம் அந்தத் துரும்பு சொன்னதாம்!

"என்னைப் பார்! இந்த ஆற்றை ஓட விடாமல், நான் தடுத்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் கொஞ்சம் நேரத்தில், என்ன நடக்கிறது பார்! ஆற்றை அப்படியே நிறுத்திவிடப் போகிறேன். ஆறு என்னைப் பார்த்து கெஞ்சப் போகிறது. நான் இதனிடம் இரக்கம் காட்ட மாட்டேன். ஓர் அங்குலம் கூட நகரமுடியாமல், நான் இந்த ஆற்றை நிறுத்திவிடப் போகிறேன்" என்றது.

காற்று கைகொட்டிச் சிரித்தது, "என்ன சிரிக்கிறாய்? என்று ஆத்திரத்தோடு கேட்டது துரும்பு.

இந்த முட்டாள் துரும்பின் அகங்காரப் பேச்சுக்கு, காற்று பதில் சொல்ல விரும்பவில்லை. அதுவும் ஆற்றைப் போல், சுறுசுறுப்பாக விரைந்து செல்ல வேண்டும் என்று விரும்பியது.

ஆகவே, மூடத் துரும்பின் மூளை கெட்ட பேச்சுக்கு, அது பதில் சொல்லவில்லை.

துரும்புக்கு ஆணவம் இன்னும் தலைக்கு ஏறியது'' காற்றே ! நான் நினைத்தால், உன்னையும் நிறுத்தி விடுவேன் தெரியுமா ? என்று கொக்கரித்தது.

அதே நேரம், ஆற்றில் ஒரு சுழல் ஏற்பட்டது. ஆணவத் துரும்பு, அந்தச் சுழலிலே அகப்பட்டுக் கொண்டு, படாதபாடு பட்டது. கண நேரத்தில் அதன் கதை முடிந்துவிட்டது. அந்தத் துரும்பு எங்கே போயிற்று என்று யாரும் கவலைப்படவில்லை. ஆறோ, தன் போக்கில் போய்க் கொண்டிருந்தது. அப்படி ஒரு சம்பவம் நடந்ததையே அது கவனிக்கவில்லை.

---

**13.9.2003** அன்று நீலகிரியில் நடைபெற்ற அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை.

# கஞ்சன்

**ஓ**ர் நாள் ஓர் இடத்தில், பெரிய கூட்டம் கூடி இருந்தது. அந்த வழியாகச் சென்று கொண்டிருந்த ஒருவர், கூட்டத்துக்குள் எட்டிப்பார்த்தார். கூட்டத்துக்கு நடுவே ஒரு கிணறு இருந்தது. அதைச் சுற்றித்தான் கும்பல் கூடியிருந்தது. என்னதான்



நடக்கிறது என்பதை அறிய கூட்டத்தைத் தள்ளிக் கொண்டு அந்த வழிப்போக்கர் உள்ளே போனார்.

கிணற்றுக்குள் ஒரு மனிதன், "காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்" என்று கத்திக் கொண்டே இருந்தான்.

அவனைக் காப்பாற்ற பலபேர் முயன்று கொண்டிருந்தார்கள். "கையைக் கொடு! கையை நீட்டு மேலே தூக்கி விடுகிறேன்!" என்று பலர் கை நீட்டச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால், கிணற்றுக்குள் இருந்தவன், அவர்கள் சொன்னதைக் கேட்கவும், இல்லை; கையை நீட்டவும் இல்லை.

அப்போது, வழிபோக்கராயிருந்து, கூட்டத்துக்கு உள்ளே போன மனிதர், முன்னால் சென்று கிணற்றுக்குள் குனிந்து, "என் கையைப் பிடித்துக்கொள்" என்றார். உடனே, அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு, கிணற்றுக்குள் கிடந்தவன், மேலே வந்து விட்டான்.

சுற்றி நின்ற எல்லோருக்கும் ஆச்சரியம்! "எப்படி இதைச் சாதித்தீர்கள்?" என்று கேட்டார்கள். "நாங்கள் எத்தனையோ தடவை கையைக் கொடு, தூக்கி விடுகிறோம் என்று சொன்னோம். அவன் கேட்கவில்லை. ஆனால், நீங்கள் சொன்னதும் வந்துவிட்டானே, எப்படி?" என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் சொன்னாராம், "ஒரு கஞ்சன் எதையும், யாருக்கும் கொடுக்கமாட்டான். அடுத்தவர்க்குக் கொடுக்க அவனுடைய கை நீளவே நீளாது. கிணற்றுக்கு உள்ளே விழுந்த

மனிதன், ஒரு கஞ்சன் என்பதை யூகித்து, அறிந்து கொண்ட நான், "உன் கையை நீட்டு" என்று சொல்லாமல், "என் கையைப் பிடித்துக் கொள்" என்றேன். உடனே, என் கையைப் பிடித்துக் கொண்டு அவன் வெளியே வந்துவிட்டான்.

நீங்கள் எல்லாம் "கைகொடு, கைகொடு, கையைநீட்டு" என்கிறீர்கள்.

நானோ, எனது கையை நீட்டினேன்; பிடித்துக் கொண்டு வந்து விட்டான்" என்றாராம்.

---

**13.9.2003** அன்று நீலகிரியில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# தானே கடவுள்

**ஓ**ர் ஊரில் ஒரு மனிதன் இருந்தான். அவன் பூஜை அறையில், சிவலிங்கத்துக்கு பூஜை செய்து கொண்டிருந்தான். அப்போது ஒரு எலி ஓடி வந்து, சிவலிங்கத்தின் முன் வைக்கப்பட்டிருந்த பிரசாதத்தை, வாயிலே கவ்விக் கொண்டு போய்விட்டது. அந்த மனிதன் ஓர் அரைகுறை ஆசாமி! அவனுக்கு ஒரே அதிர்ச்சி! சாமிக்கு முன் வைக்கப்பட்டிருந்த பிரசாதத்தை, எடுத்துக் கொண்டு போய்விடும் அளவுக்குத் துணிச்சல் இருந்தால், அந்த எலி தானே பெரிய கடவுள் என்று நினைத்தான். அதற்குப் பின், அவன் எலியே தெய்வம் என்று நினைத்து வழிபாடு செய்து வந்தான். ஒரு நாள், எலிச்சாமி சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது,



பூனையார் வந்துவிட்டார். பூனையைக் கண்டதும், தப்பித்தேன், பிழைத்தேன் என்று எலியார், ஒரு பொந்துக்குள் ஓடி ஒளிந்துக் கொண்டார்.

"சீ! எலியும் ஒரு கடவுளா? இப்படி ஓடுகிறதே! எலியைப் பயமுறுத்திய பூனைதான் பெரிய கடவுள்!" என்று, பூனைக்குப் பூஜை செய்யத் தொடங்கினான். பூனை பூஜை விமரிசையாக நடந்து வந்தது. ஒரு நாள் பக்கத்து வீட்டுப் பையன் தனது நாயைப் பிடித்துக் கொண்டு, பூஜை அறைக்குள் வந்ததும், பூனைச் சாமி ஒரே ஓட்டமாய் ஓடிப்போனார். உடனே பக்த சிகாமணி, ஒரு முடிவுக்கு வந்தான். "பூனையாவது சாமியாவது! நாயாரே நமது தெய்வம்" என்னும் நல்லதொரு முடிவுக்கு வந்தான்.

அன்றைக்கே, நாய் சமையல் அறைப் பக்கம் வந்ததைக் கண்ட, அவனது மனைவி நாயின் முதுகிலே ஒரு போடு போட்டு விரட்டிவிட்டாள். இப்போது, நினைத்துப் பார்த்தான் நமது ஆசாமி. நாயையே அடித்து விட்டாளே! எனவே, மனைவிதான் மாபெரும் கடவுள் என்று மதித்து, வழிபாடு செய்ய ஆரம்பித்தான். இத்தோடு, இந்தக் கதை முடிந்து போயிருந்தால், நன்றாய் இருந்திருக்கும். மனைவியின் மகிமையை அறிந்து கொண்டான் ஓர் ஆண் என்ற மகிழ்ச்சியையாவது, நாம் அடைய வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால் கதை இத்துடன் முடியவில்லையே!

ஒரு வார காலம் கழித்து, சாப்பாட்டில் உப்பு போதவில்லை என்று மனைவியை அடித்துவிட்டான். மறுபடியும் அவனுக்கு ஞானோதயம் பிறந்தது! "நம்மிடம் அடி வாங்குகிறவள், நமக்கு எப்படிக் கடவுளாய் இருக்க முடியும்? என்று நினைத்தான். அவளை அடிக்கும் ஆற்றல், தனக்கு இருப்பதை எண்ணிப் பார்த்த அவன், தானே கடவுள் என்ற முடிவுக்கு வந்தான்.

---

**13.9.2003** அன்று நீலகிரியில் நடைபெற்ற அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# பெருமக்கள் வாழ்ந்த பூமி

6,000 மைல்களுக்கு அப்பால் இருந்து வந்து இந்திய நாட்டைத் தங்கள் வசப்படுத்திக் கொண்ட ஆங்கிலேயர்கள் தென் தமிழகத்திலும் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தி வந்த காலம் அது. காளையார் கோயிலைக் கைப்பற்றிக் கொண்ட ஆங்கிலேயர்கள் வீரத்தில் சிறந்த மருது சகோதரர்களை எப்படியாவது பிடித்து விட வேண்டும் என்று வெறி கொண்டு



அலைந்தார்கள். ஒரு நாள் ஆங்கிலேயப் படை பெரிய மருதுவைத் துரத்தி வந்தது. அவர்களுக்கு அகப்படாமல் பெரிய மருது குதிரையில் மிக வேகமாகச் சென்றார்.

இரவு முழுவதும் இவ்வாறு குதிரைப் பயணம் செய்து களைத்துப் போன பெரிய மருது விடியும் வேளையில் ஒரு சிற்றூருக்கு வந்தார். அந்த ஊரில் ஒரு சிறு குடிசை முன் அவருடைய குதிரை நின்றது. பசி, தூக்கம் இல்லாமை, தாகம், களைப்பு, இவற்றால் பாதிக்கப்பட்டிருந்த பெரிய மருது அந்த வீட்டுக் கதவை தட்டினார். அந்த வீட்டில் இருந்தவர் ஒரு ஏழைக் கிழவி. பெரிய மருது அந்தக் கிழவியிடத்திலே தனக்கு மிகவும் பசிப்பதாகவும் உண்பதற்கு ஏதாவது உணவு அளிக்கும்படியும் கேட்டுக்கொண்டார். "இரவு தண்ணீரிலே போட்ட சோறு இருக்கிறது. போடவா?" என்று அந்த மூதாட்டி கேட்டார். "எதையாவது கொடுங்கள் அம்மா" என்று பெரிய மருது சொன்னார். பழைய சோறும், பழங்கறியும் பரிமாறப்பட்டது. பசியாலும், களைப்பாலும், வாடிப் போயிருந்த பெரிய மருதுவுக்கு அந்த ஏழைக் கிழவி இட்ட உணவு தேவாம்ருதமாக இருந்தது. உண்டு முடிந்ததும் குதிரையை வீட்டின் பின்புறத்திலே கட்டிவிட்டு பெரிய மருது அந்தக் குடிசையில் படுத்துத் தூங்கினார்.

நீண்ட நேரம் தூங்கி எழுந்த பிறகு புதுத் தெம்பும், புது வலிமையும் அவருக்கு ஏற்பட்டு இருந்தன. புறப்படத் தயாராய் இருந்த பெரிய மருது எழுதுவதற்கு ஓலையும் எழுதுகோலும் இருக்குமா என்று கேட்டார். கல்வி அறிவற்ற அந்த ஏழைக் கிழவியிடம் ஏது ஓலையும், எழுதுகோலும்? அவை இல்லை என்று அறிந்த உடன் கூரையிலே இருந்து ஓலை ஒன்றை எடுத்தார். அந்த முள்ளை வைத்துக் கொண்டு ஓலையில் ஏதோ எழுதினார்.

எழுதிய பின்பு அந்தக் கிழவியிடம் ஓலையைக் கொடுத்து அம்மா, அரண்மனை அதிகாரிகளைச் சென்று பாருங்கள், அதனால் உங்களுக்குப் பயன் உண்டு'' என்று சொல்லி விட்டு, குதிரை மீது ஏறி விரைந்து சென்றார்.

சில நாட்களில் மருது சகோதரர்கள் திருப்புத்தூரிலே தூக்கில் இடப்பட்டார்கள். அவ்வாறு தூக்கில் இடுவதற்கு முன்பு பெரிய மருது, ''நான் யார் யாருக்கு எதை எதை மானியமாகக் கொடுத்தேனோ அவற்றை எல்லாம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்'' என்று ஆங்கிலேயப் படைத் தலைவர்களிடம் கேட்டுக் கொண்டார். அவர்களும் அவ்வாறே கொடுப்பதாக உறுதி அளித்தார்கள். அதற்குப் பின் ஓலையை எடுத்துக் கொண்டு ஏழைக்கிழவி அரண்மனைக்குச் சென்று அதிகாரிகளிடம் ஓலையைக் காட்டியபோது அதில் பெரிய மருது எழுதியிருந்தபடி அந்தக் கிழவிக்கு அவள் வாழ்ந்த ஊர் முழுதும் மானியமாக வழங்கப்பட்டது. அப்போதுதான் அந்தக் கிழவிக்கு தன் வீட்டுக்கு வந்திருந்தவர் பெரிய மருது என்பது தெரியவந்தது. தங்கள் மரணத்திற்குப் பிறகும் தாங்கள் வழங்கிய கொடைகள் உரியவர்களுக்குச் சேர வேண்டுமென்று எண்ணிய பெருமக்கள் வாழ்ந்த பூமி இந்த பூமி.

கொடையும் பிறவிக் குணம் என்பார்கள்.

---

23.9.2003 அன்று சிவகங்கையில் நடைபெற்ற
அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# தப்பாமல் பிறந்த பிள்ளை

**ஒ**ரு பையன் பக்கத்து வீட்டில் கோழி முட்டையைத் திருடிக் கொண்டிருந்தான். சில நாள் இப்படி நடந்தது.

ஒரு நாள் இந்தப் பையன் முட்டை திருடியதைப் பார்த்துக் கொண்டிருந்த அடுத்த வீட்டுக்காரர் பையனின் அப்பாவைச் சந்தித்தார்.

“உங்க பையன் செய்வது உங்களுக்கே நல்லா இருக்கா ?” என்று கேட்டார்.

“அப்படி என்ன செய்கிறான் ? என்று அப்பாக்காரர் கேட்டார்.



“எங்கள் வீட்டில் இருப்பது ஒரே ஒரு கோழி. அது இடும் முட்டைகளை உங்கள் பையன் திருடி வருகிறான். இன்று அவன் முட்டை திருடுவதை நானே பார்த்தேன். என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் ? என்று பக்கத்து வீட்டுக்காரர் கேட்டார்.

“நீங்கள் வீட்டுக்குப் போங்கள், நான் தக்க நடவடிக்கை எடுக்கிறேன்.”– என்று அப்பாக்காரர் சொன்னார்.

பக்கத்து வீட்டுக்காரர் போய்விட்டார். மறுநாள் முட்டைத் திருட்டு நடைபெறவில்லை. அதற்கு வாய்ப்பே இல்லை!

ஏன் ? கோழியையே காணோம்!

பையன் முட்டை திருடாமல் இருக்க, அப்பா கோழியையே திருடிவிட்டார்.

இனி, பையன் முட்டை திருட மாட்டான். அப்பா சொன்ன சொல்லைக் காப்பாற்றி விட்டார்.

இப்படி, மகன் திருடாமல் பார்த்துக் கொள்கிற அப்பாக்களும் உண்டு.

அதற்கு, அவர்கள் கையாளுகிற முறை இருக்கிறதே அதுதான் அபாரம்!

மறுநாள் கோழியைப் பறி கொடுத்த பக்கத்து வீட்டுக்காரரிடம் பையனின் அப்பா சொல்லிக் கொண்டிருந்தார். “நான் ரோஷக்காரன்!” வார்த்தை மாறாதவன். மனுஷனுக்கு வார்த்தை சுத்தம் வேணுமுங்க.”

இது தந்திரத் தந்தையின் சவடால் பேச்சு.

---

23.9.2003 அன்று சிவகங்கையில் நடைபெற்ற
அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# காட்டு நாயின் தந்திரம்

**ஒ**ரு காட்டில் காட்டு நாய் ஒன்று சுற்றித் திரிந்து கொண்டிருந்தது. அப்போது ஒரு சிறுத்தைப் புலி தன்னை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்ததை அந்தக் காட்டு நாய் பார்த்தது. நாயைப் பிடித்துத் தின்ன வேண்டும் என்பதுதான் சிறுத்தைப் புலியின் நோக்கம். எப்படி அதனிடம் இருந்து தப்பிச் செல்வது என்பது காட்டு நாயின் கவலை. ஓடிச் செல்வதால் பயன் இல்லை.

ஏனென்றால் எவ்வளவு வேகமாக ஓடினாலும் சிறுத்தைப் புலியின் அளவுக்கு காட்டு நாயால் வேகமாக ஓட முடியாது. எனவே காட்டு நாய் உடனே மிக வேகமாக யோசிக்கத்



தொடங்கியது. அருகில் சில எலும்புகள் கிடந்தன. அவற்றைப் பார்த்ததும் உடனே அந்தக் காட்டு நாய்க்கு ஒரு யோசனை பிறந்தது.

சிறுத்தைப் புலியின் பக்கம் தன் முதுகைத் திருப்பிக் கொண்டு கீழே அமர்ந்து அந்த எலும்புகளை மென்று தின்பது போல் கடிக்க ஆரம்பித்தது. சிறுத்தைப் புலி அருகில் வந்து தன் மீது பாய்வதற்குத் தயாரான போது காட்டு நாய் உரத்த குரலில் சொன்னது– ‘‘இப்போது நான் தின்று முடித்த சிறுத்தைப் புலி மிகவும் சுவையாக இருந்தது. அக்கம் பக்கத்தில் வேறு சிறுத்தைப் புலி கிடைக்குமா என்று தேடிப் பார்க்க வேண்டும்’’ என்றது.

இதைக் கேட்டதும் பயந்து போய் சிறுத்தைப் புலி அப்படியே ஸ்தம்பித்து சிலை போல் நின்றுவிட்டது. ‘இந்தக் காட்டு நாய் சிறுத்தைப் புலிகளையே கொன்று தின்று விடுகிறதே! அப்படியானால் எவ்வளவு பலம் வாய்ந்ததாய் இருக்க வேண்டும்! இதனிடம் அகப்படாமல் தப்பிச் சென்று விட வேண்டும்’ என்று நினைத்து ஓசைப்படாமல் பின்னோக்கிச் சென்று அந்த சிறுத்தைப் புலி புதருக்குள் மறைந்துவிட்டது.

அருகில் இருந்த ஒரு மரத்தின் மீது உட்கார்ந்து இருந்த ஒரு குரங்கு நடந்ததை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்தது. தனக்குத் தெரிந்த தகவலை சிறுத்தைப் புலியுடன் பகிர்ந்து கொண்டு சிறுத்தைப் புலியுடன் பேரம் பேசி தனக்குப் பாதுகாப்பு தேடிக் கொள்ளலாம் என்று அந்தக் குரங்கு கருதியது. எனவே, சிறுத்தைப் புலியைப் பின் தொடர்ந்து அந்தக் குரங்கு வேகமாக ஓடிச் சென்றது. காட்டு நாயும் இதை கவனித்தது, ஏதோ சதி நடக்கிறது என்பதைப் புரிந்து கொண்டது. குரங்கு சிறுத்தைப் புலியிடம் சென்று காட்டு நாய், சிறுத்தைப் புலியை எப்படி ஏமாற்றியது என்ற முழு விவரத்தையும் சொன்னது. சிறுத்தைப் புலிக்குத் தாங்க முடியாத கோபமும் ஆத்திரமும் வந்தது. ‘‘அந்தக் காட்டு நாய் என்னையே ஏமாற்றலாம் என்று நினைக்கிறதா?

அதற்கு மறக்க முடியாத பாடத்தைப் புகட்டுகிறேன். இந்தக் காட்டில் யார் யாரைக் கொன்று தின்பார்கள் என்பதைக் காட்டுகிறேன்'' என்று சொல்லிவிட்டு, ``குரங்கே வா! என் முதுகில் ஏறி உட்கார். இரண்டு பேரும் அந்தக் காட்டு நாயைப் பிடிக்கலாம்'' என்றது. குரங்கு சிறுத்தைப் புலியின் முதுகில் ஏறி உட்கார்ந்தது. இரண்டும் நாயை நோக்கிச் சென்றன.

சிறுத்தையும் குரங்கும் சேர்ந்து வருவதைக் காட்டு நாய் பார்த்தது. ``இந்தத் திருட்டுக் குரங்கு என்னை இப்படி ஆபத்தில் மாட்டி விட்டுவிட்டதே! இப்போது என்ன செய்வது?'' என்று அந்தக் காட்டு நாய் யோசித்தது. அப்படி யோசித்ததே தவிர, அதற்காக அந்தக் காட்டு நாய் பயந்து ஓடவில்லை. அந்தச் சிறுத்தையையும் குரங்கையும் பார்க்காத மாதிரி நடித்து அவைகளுக்குத் தன் முதுகைக் காட்டிக் கொண்டு தரையில் அமர்ந்தது. அவை அருகில் நெருங்கியதும் அந்தக் காட்டு நாய் உரத்த குரலில் சொன்னது. ``அந்தப் போக்கிரிக் குரங்கு எங்கே போய்த் தொலைந்தது? அதனை நம்பவே முடியாது! நான் சாப்பிடுவதற்கு இன்னொரு சிறுத்தைப் புலியை உண்பதற்குப் பிடித்துக் கொண்டு வா என்று நான் சொல்லி அனுப்பி, அரை மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் அந்தக் குரங்கைக் காணோமே?'' என்றது. இதனைக் கேட்டதும், அடுத்து என்ன நடந்திருக்கும் என்று உங்களாலேயே யூகிக்க முடியும். காட்டு நாய் சொன்னதைக் கேட்ட அந்த சிறுத்தைப் புலி தன் கோபம் முழுவதையும் குரங்கின் மீது திருப்பியது; அதனைக் கடித்துக் குதறிக் கொன்று தின்றுவிட்டது.

---

7.10.2003 அன்று திருவண்ணாமலையில் நடைபெற்ற
அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# உள்ளாற்றல்

**ஒ**ரு பலூன் வியாபாரி வண்ண வண்ண பலூன்களை விற்றுக் கொண்டிருந்தார். ஹீலியம் (Helium) என்னும் வாயுவால் நிரப்பப்பட்ட அந்தப் பலூன்கள் உயரத்தில் சென்று பார்ப்பவர்களைப் பரவசப்படுத்திக் கொண்டிருந்தன.

பல்வேறு வண்ணங்களில் பலூன்கள் வானத்தில் பறப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பச்சை வண்ணம், நீல வண்ணம், சிவப்பு வண்ணம், மஞ்சள் வண்ணம், வெள்ளை வண்ணம் என்று பல்வேறு வண்ணங்களில் பலூன்கள் காற்றின் வேகத்திற்கு ஏற்ப உயர உயரச் சென்று கொண்டிருந்தன.

பலூன் வியாபாரி தன் பக்கத்தில் ஒரு குட்டிப் பையன் நிற்பதைப் பார்த்தார். எல்லோரும் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்த போது அந்தக் குட்டிப் பையன் மட்டும், பலூன் வியாபாரியையே பார்த்துக் கொண்டிருந்தான். “தம்பி! என்ன வேண்டும்?” என்று அந்த வியாபாரி கேட்டார். “எனக்கு ஒன்றும் வேண்டாம். ஆனால் உங்களிடம் ஒரு சந்தேகத்தைக் கேட்க வேண்டும். பச்சை வண்ணம், நீல வண்ணம் என்று பல வண்ண பலூன்கள் வானத்தில் பறப்பதைப் போல கருப்பு வண்ண பலூனும் இப்படி வானத்தில் பறக்குமா?” என்ற அந்த குட்டிப் பையன் கேட்டான்.

குட்டிப் பையனின் கேள்வி, பலூன் வியாபாரியின் நெஞ்சைத் தொட்டது.



“தம்பி ! பலூன் பறப்பதற்கு நிறம் காரணம் அல்ல ! பலூனுக்குள் என்ன இருக்கிறதோ, அதுதான் பலூன் பறப்பதற்குக் காரணம் ! ஆகவே, கருப்பு நிற பலூனும், கட்டாயம் வானத்தில் பறக்கத்தான் செய்யும்” என்று அந்த பலூன் வியாபாரி பதில் சொன்னார்.

---

**7.10.2003** அன்று திருவண்ணாமலையில் நடைபெற்ற
அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# காலம் கடந்த ஞானோதயம்

**ரொ**ம்ப நாட்களுக்கு முன்னால் ஒரு சக்கரவர்த்தி இருந்தார். அவர் ஒரு குதிரை வீரனிடம் சொன்னார்–'குதிரை மேல் ஏறி சவாரி செய்து, இடையில் எங்கேயும் நிற்காமல் ஒரே பயணத்தில் உன்னால் எவ்வளவு தூரம் நிலப் பரப்பைக் கடக்க முடிகிறதோ அவ்வளவு நிலத்தையும் உனக்கே தானமாகத் தருகிறேன்' என்று கூறினார்.

உடனே, குதிரை மேல் ஏறி அந்தக் குதிரை வீரன் எவ்வளவு வேகமாகச் செல்ல முடியுமோ அவ்வளவு வேகத்துடன் அதிக நிலப்பரப்பைக் கடக்க வேண்டும் என்று வேக வேகமாகச் சென்றான். இன்னும் அதிக நிலப்பரப்பைக் கடக்க வேண்டுமென்ற பேராசையில் மேலும் வேகமாகச் செல்ல வற்புறுத்திக் குதிரையை அடித்துக் கொண்டே இருந்தான். தனக்குப் பசி ஏற்பட்ட போதிலும் தாகம் ஏற்பட்ட போதிலும் களைப்பு ஏற்பட்ட போதிலும் அவன் பயணத்தை நிறுத்தாமல் சென்று கொண்டே இருந்தான். ஏனென்றால், முடிந்த வரை அதிக அளவு நிலப் பரப்பைக் கடந்து, அதைச் சக்கரவர்த்தியிடம் இருந்து பெற வேண்டுமே என்ற பேராசை அவனை விரட்டிக் கொண்டிருந்தது.

"மிகப் பெரிய நிலப்பரப்பைக் கடந்த பின்னர் இறுதியில் ஓர் இடத்திற்கு வந்தான். அப்போது, அதற்கு மேல்அவனால் செல்ல முடியவில்லை – அந்த அளவுக்குக் களைத்துப் போய்விட்டான்! அதற்கு மேல் குதிரையாலும் ஓட முடியவில்லை. குதிரை கீழே விழுந்து இறந்து போய்விட்டது. தானும் மண்ணில் விழுந்தான்.



தன் உயிர் பிரியப் போவதை உணர்ந்தான். அப்போது தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்– ‘இவ்வளவு பெரிய நிலப்பரப்பைக் கடக்க வேண்டுமென்ற பேராசையால் என்னை நானே ஏன் இப்படி விரட்டிக் கொண்டேன்? ஆசை என்னை விரட்டியது! குதிரையை நான் விரட்டினேன்! இப்போது, நான் எங்கே வந்து சேர்ந்திருக்கிறேன்? மரணத்தின் வாசலுக்கு அல்லவா வந்து சேர்ந்திருக்கிறேன்? இதோ, இப்போது என் உயிர் பிரியப் போகிறது. இப்போது எனக்குத் தேவை என் உடலை அடக்கம் செய்ய **6** அடி மண் தானே!” இவ்வாறு இறப்பதற்கு முன் அந்தக் குதிரை வீரனுக்கு ஞானம் வந்ததாம்!

---

**7.10.2003** அன்று திருவண்ணாமலையில் நடைபெற்ற

அரசு விழாவில்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# புதியவை

மரம் வெட்டும் நிறுவனம் ஒன்று, காட்டு மரங்களை வெட்டும் உரிமம் பெற்று ஒரு காட்டிலே தொழிலாளர்களை வைத்து மரம் வெட்டிக் கொண்டிருந்தது. ஒரு நாள் அங்கு வேலை பார்க்கும் ஒரு தொழிலாளி அந்த நிறுவனத்தின் முதலாளியைப் பார்க்கப் போனான்.

'என்ன வேண்டும் ?' என்று கேட்டார் முதலாளி.

'எனக்கு நியாயம் வேண்டும்' என்றான் தொழிலாளி.

'ஏன் உனக்கு அநீதி இழைக்கப்படுகிறதா ?' என்று முதலாளி கேட்டார்.



‘ஆமாம். 5 ஆண்டுகளாக நான் இங்கே மரம் வெட்டிக் கொண்டிருக்கிறேன். ஆனால், நான் வாங்கும் சம்பளத்தை விட 2 மடங்கு சம்பளத்தை 6 மாதத்துக்கு முன்பு வந்த ஒரு தொழிலாளிக்குக் கொடுத்திருக்கிறீர்கள்; இது என்ன நியாயம் ?’ என்று கேட்டான் தொழிலாளி.

‘அவன் ஒரு நாளில் நிறைய மரம் வெட்டுகிறான். உன்னால் அப்படி வெட்ட முடியவில்லை. நாங்கள் வேலைத் திறத்தையே பார்க்கிறோம், வேலை செய்த ஆண்டுகளை அல்ல. நீயும் நிறைய மரம் வெட்டு, நிறைய சம்பளம் தருகிறோம்.’ என்றார் முதலாளி.

‘எப்படி நிறைய மரம் வெட்டுவது ? என்ன முயன்றாலும் முடியவில்லையே,’ என்றான் தொழிலாளி.

‘நீ புதிதாக வந்த தொழிலாளியைப் பார். எப்படி அதிக மரம் வெட்டுவது என்று அவனையே கேள்’ என்றார் முதலாளி.

முதலாளியின் ஆலோசனையை ஏற்று அந்தப் பழைய தொழிலாளி புதிய தொழிலாளியைச் சந்தித்தான்.

‘என்னால் அதிக மரங்களை வெட்ட முடியவில்லை. உன்னால் எப்படி முடிகிறது ? அந்த ரகசியத்தை எனக்குச் சொல்வாயா ?’ என்று பழைய தொழிலாளி கேட்டான்.

‘இதில் ரகசியம் ஒன்றும் இல்லை! ஒவ்வொரு மரத்தை வெட்டிய பிறகும் நான் 2 நிமிடம் வேலையை நிறுத்துவேன். அப்போது மரம் வெட்டும் கோடரியை நான் கூர்மைப்படுத்திக் கொள்கிறேன். அதற்குப் பின் அடுத்த மரத்தை வெட்டப் போகிறேன்’ என்று பதில் சொன்னான் புதிய தொழிலாளி.

பழைய தொழிலாளியும் அப்படியே செய்தான். நிறைய மரங்களை வெட்டினான்; நிறைய சம்பளம் பெற்றான்.

---

13.10.2003 அன்று நாகப்பட்டினத்தில் நடைபெற்ற
அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# பாவ மன்னிப்பு

ஒரு ஊரில் ஒரு முனிவர் இருந்தார். ஒரு நாள் அவரைப் பார்ப்பதற்காக ஒருவன் வந்தான். “நான் ஒரு பாவி என் பாவத்திற்கு மன்னிப்புக் கிடைக்குமா?” என்று அவன் முனிவரிடம் கேட்டான்.

அவன் மீது இரக்கம் கொண்ட முனிவர் “நீ என்ன பாவம் செய்தாய் என்று சொல் பிறகு மன்னிப்பைப் பற்றிப் பேசலாம். பாவத்திற்கு என்ன பரிகாரம் செய்யலாம் என்று நான் சொல்கிறேன்” என்று சொன்னார்.

“நான் பிறரைப் பற்றி அவதூறு பேசினேன். பல காலமாக இப்படி அவதூறு பேசிக் கொண்டிருக்கிறேன். எனக்கு மன்னிப்புக் கிடைக்குமா?” என்று கேட்டான்.

“உன் வீட்டில் தலையணை இருக்கிறதா?” என்று முனிவர் கேட்டார்.

பாவ மன்னிப்பைத் தேடி வந்தவன் குழம்பிப் போனான். “பாவ மன்னிப்பு கேட்டால் உன் வீட்டில் தலையணை இருக்கிறதா என்று கேட்கிறாரே முனிவர்” என்று அவன் குழப்பம் அடைந்தான்.

“வீட்டிலிருந்து தலையணையை எடுத்து வந்து சாலையின் நடுவில் நின்று கொண்டு தலையணையின் உள்ளே இருக்கும் பஞ்சை எல்லாம் நாலா பக்கங்களிலும் பறக்க விடு, அதற்குப் பின்பு வா” என்று முனிவர் கூறினார்.

அவர் கூறியபடியே வீட்டிற்குச் சென்று தலையணை ஒன்றை எடுத்து வந்து அதைக் கிழித்து உள்ளே இருந்த பஞ்சை எல்லாம் எடுத்து சாலையின் நடுவிலே நின்று கொண்டு நாலா புறத்திலும் அதைப் பறக்கவிட்டான். பின்பு, முனிவரிடம் சென்றான்.

“சுவாமி நீங்கள் சொன்னபடியே நான் செய்துவிட்டேன். என் பாவத்திற்குப் பரிகாரம் செய்து விட்டேன். இப்போது மன்னிப்பு அருளுங்கள்” என்று கேட்டான்.

"பஞ்சைப் பறக்கவிட்டால் பாவம் தீரும் என்று, நான் எப்போது சொன்னேன்? பறக்க விட்ட பஞ்சை எல்லாம் மீண்டும் எடுத்து வா – அப்போதுதான் உன் பாவம் தீரும்" என்று முனிவர் சொன்னார்.



பதறிப்போன அந்த மனிதன் "நாலா பக்கங்களிலும் பறந்து போன பஞ்சை நான் எப்படி சேகரிப்பது? அது எங்கே போயிற்று என்று நான் எப்படிக் கண்டுபிடிப்பேன்? பறக்க விடப்பட்ட பஞ்சை ஒன்று சேர்த்து வருவது என்பது, எவராலும் இயலாது. இது நடக்கிற காரியமா சுவாமி" என்றான்.

"பறக்க விடப்பட்ட பஞ்சை எப்படி மறுபடியும் சேகரிக்க முடியாதோ அப்படித்தான் நீ பரப்பி இருக்கிறாயே அவதூறுகள் அவற்றையும் உன்னால் திரும்பப் பெற இயலாது. இதனால் உனக்குப் பாவ மன்னிப்பும் என்றைக்கும் கிடையாது. நீ போகலாம்!" என்று சொல்லி முனிவர் அவனை அனுப்பிவிட்டார்.

---

13.10.2003 அன்று நாகப்பட்டினத்தில் நடைபெற்ற
அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

# குடிகாரனின் தத்துவம்

**ஓ**ர் ஊரில் ஒரு குடிகாரன் இருந்தான். அவன் இரவு நேரத்தில் நிறைய குடிப்பது வழக்கம். அப்படிக் குடித்து விட்டு, குடித்த இடத்திலேயே விழுந்து அங்கேயே தூங்கி விடுவான். காலையில் எழுந்து வீட்டுக்குப் போவான்.

இதுதான் அவனது அன்றாட நடவடிக்கையாக இருந்தது.

ஒரு நாள், இரவில் அதிகமாகக் குடிக்கவில்லை; போதை கொஞ்சம் குறைவாகவே இருந்தது. எனவே, வீட்டுக்கு நடந்து போய் விடலாம் என்று எண்ணி நடக்கத் தொடங்கினான். ஆனால், பாதி தூரத்திலேயே விழுந்து, முழங்கால்களில் அடிபட்டு விட்டது. எனவே, நொண்டி நொண்டி நடந்து போய்க் கொண்டிருந்தான். வழியில் பார்த்த ஒருவர் ‘என்னடா தம்பி, இப்படி நொண்டிக் கொண்டு வருகிறாயே, என்ன காரணம்? எக்கச்சக்கமான போதையா? என்று கேட்டார்.

‘அப்படி இல்லீங்க, இன்றைக்கு சரியாகக் குடிக்கலீங்க, அதனால தான் விழுந்து விட்டேன்’ என்று குடிகாரன் சொன்னானாம்.

‘என்னடா இது ஆச்சரியமாய் இருக்கிறது! சரியாய்க் குடிக்கவில்லை என்பதாலா நீ விழுந்து விட்டாய்? நம்ப முடியவில்லையே!’ என்றாராம் அந்த நண்பர்.



‘வழக்கமாகக் குடிப்பது போல் நெறைய குடிச்சிருந்தா, அங்கேயே தூங்கியிருப்பேன்; பிரச்சினை இல்லை ! இன்னைக்குப் பாருங்க, அரைகொறையா குடிச்சேனா ? வீட்டுக்குப் போயிடலாமேன்னு தோணுச்சு நடந்தேன்; விழுந்துட்டேன். அடிபட்டிடுச்சி. நாளைக்கு இருந்து இந்த அரைகுறையா குடிக்கிற சமாச்சாரமே கெடையாதுங்க. அரை கொறையா குடிக்கிறது ஆபத்தானதுங்க; ஆகவே முழுக்க குடிக்கப் போறேனுங்க’ என்று சொன்னானாம் அந்தக் குடிகாரன்.

---

**22.10.2003** அன்று விருதுநகரில் நடைபெற்ற

அரசு விழாவில்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

# குலம் ஒன்று; குணம் வேறு

**ஒ**ரு முறை முனிவர் ஒருவர் தர்மரிடம் ஒரு எழுதப்படாத ஏட்டைக் கொடுத்தார். துரியோதனன் இடத்திலும் அதே மாதிரி எழுதப்படாத ஏட்டைக் கொடுத்தார்.

தருமரிடத்தில் ஏட்டைக் கொடுத்து "உனக்குத் தெரிந்த தீயவர்களின் பெயர்களை எழுதி வா!" என்று முனிவர் சொன்னார்.

துரியோதனன் இடத்தில் ஏட்டைக் கொடுத்த "உனக்குத் தெரிந்த நல்லவர்களின் பெயர்களை எழுதி வா" என்று முனிவர் சொன்னார்.

ஒரு வாரம் கழித்து இருவரும் திரும்பி வந்தார்கள்.

முனிவரிடம் இருவரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஏடுகளைக் கொடுத்தார்கள்.

இரண்டு ஏடுகளிலும் எதுவுமே எழுதப்படவில்லை.

தருமரைப் பார்த்து முனிவர் கேட்டார், "உன்னை என்ன செய்யச் சொன்னேன் ?"

"எனக்குத் தெரிந்த தீயவர்களின் பெயர்களை எழுதி வரச் சொன்னீர்கள்!" என்றார் தர்மர்.

"ஏன் எழுதவில்லை– ?" என்று கேட்டார் முனிவர்.

"தீயவர் யாருமே கிடைக்கவில்லை. அதனால், எவருடைய பெயரையும் எழுதவில்லை" என்றார் தர்மர்.

துரியோதனனைப் பார்த்து முனிவர் கேட்டார் "உன்னை என்ன செய்யச் சொன்னேன் ?"

"எனக்குத் தெரிந்த நல்லவர்களின் பெயர்களை எழுதச் சொன்னீர்கள்" என்றான் துரியோதனன்.



“ஏன் எழுதவில்லை ?” என்று கேட்டார் முனிவர்.

“நல்லவர்கள் யாருமே கிடைக்கவில்லை, அதனால் எவருடைய பெயரையும் எழுதவில்லை” என்றான் துரியோதனன்.

தருமருக்குக் கெட்டவர்கள் யாரும் கண்ணுக்குத் தெரியவில்லை.

துரியோதனனுக்கு நல்லவர்கள் யாரும் கண்ணுக்குத் தெரியவில்லை !

ஒரே குலத்தில் பிறந்திருந்தாலும் தர்மர் வேறு ! துரியோதனன் வேறு !

---

**22.10.2003** அன்று விருதுநகரில் நடைபெற்ற

அரசு விழாவில்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

# மதிநலம் மிக்க மன்னர்

ஒரு மன்னர், வேற்று நாட்டின் மீது படையெடுத்துச் சென்றிருந்தார். பல்லாயிரக்கணக்கான வீரர்களும் அவருடன் சென்றிருந்தார்கள். முதல் நாள் நடந்த போரில், அவர்கள் தோல்வி அடைந்தனர். மறுநாள் போரைத் தொடங்குகிற வேளை வந்தது. அப்போது, படைகள் அணி திரளவில்லை. வீரர்களுக்கு என்ன நேர்ந்தது ? ஏன் அவர்கள் அணி வகுக்கவில்லை என்று புரியாததால் மன்னர் படைத்தலைவரை அனுப்பி விசாரித்து வரச் சொன்னார்.

படைத் தலைவர் திரும்பி வந்து, மன்னரிடம் சொன்னார். “நமது வீரர்கள் போரிடத் தயங்குகிறார்கள். நாம் நிச்சயம் போரில்



தோற்று விடுவோம் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஆகவே ஊருக்குத் திரும்பி விடலாம் என்று நினைக்கிறார்கள்'' என்று படைத் தலைவர் தயங்கித் தயங்கி மன்னரிடம் சொன்னார்.

``அவர்கள் நினைப்பதும் சரிதான். நாம் ஒன்று செய்யலாம். அருகில் இருக்கிற ஆலயத்திற்குச் சென்று, கடவுளிடம் உத்தரவு கேட்போம். சம்மதம் கிடைத்தால் தொடர்ந்து போராடலாம். இல்லை என்றால் நாட்டுக்குத் திரும்பிப் போய்விடலாம்'' என்று மன்னர் சொன்னார்.

படைத் தலைவருக்கு விளங்கவில்லை. இருந்தாலும் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு மன்னரிடம் கேட்டார். ``அரசே, கடவுளின் விருப்பத்தை எப்படித் தெரிந்து கொள்வது ?''

அதற்கு மன்னர் ``ஒரு தங்க நாணயத்தைச் சுண்டிப் பார்ப்போம். தலை விழுந்தால் தொடர்ந்து போராடலாம். பூ விழுந்தால் ஊருக்குத் திரும்பிப் போய்விடலாம். நீங்கள் போய், வீரர்கள் எல்லோரையும் அணி வகுத்து நிற்கச் செய்யுங்கள். நான் வந்து விடுகிறேன்'' என்று பதில் சொன்னார்.

சிறிது நேரத்தில் படை வீரர்கள் அணி வகுத்து நின்றார்கள். மன்னர் வந்தார். ஒரு தங்க நாணயத்தை எடுத்து உயரத்தில் வீசினார். தரையில் அந்தத் தங்க நாணயம் விழுந்தபோது, அது தலையா, பூவா என்று பார்க்குமாறு படைத்தலைவரிடம் சொன்னார்.

படைத் தலைவர் சென்று பார்த்தார். தலை விழுந்து இருந்தது. அதை எடுத்து வரச்சொல்லி, வீரர்களிடம் காட்டி, ``இதோ தங்க நாணயத்தின் தலை விழுந்திருக்கிறது. இப்போது என்ன சொல்கிறீர்கள் ? போராடலாமா ?'' என்று மன்னர் கேட்டார்.

படை வீரர்கள் அனைவரும் மன்னரை வணங்கி, ``போராடுவோம்! போராடுவோம்!'' என்று விண் அதிர முழக்கமிட்டார்கள்.

போர் தொடங்கியது. அன்று மாலைக்குள் எதிரிப் படை துரத்தப்பட்டது.

வெற்றிக்குப் பிறகு மன்னரும், வீரர்களும் தாயகம் திரும்பினார்கள். அங்கு அவர்கள் பெற்ற வெற்றியைக் கொண்டாட மாபெரும் விழாவுக்கு மந்திரி ஏற்பாடு செய்திருந்தார்.

மந்திரி மன்னரிடம் கேட்டார், "மாமன்னர் அவர்களே! வீரர்கள் போரிட மறுக்கிறார்கள் என்று எனக்குத் தகவல் வந்ததே ? அப்புறம் எப்படி வெற்றி பெற்றீர்கள் ?"

மன்னர் எதுவும் பதில் பேசவில்லை. தங்க நாணயத்தை மந்திரி கையிலே கொடுத்து சுண்டிப் பார்க்கச் சொன்னார். மந்திரி அவ்வாறே செய்தார்.

"என்ன விழுந்து இருக்கிறது என்று பாருங்கள்!" என்றார் மன்னர்.

மந்திரி பார்த்தார். தலை விழுந்து இருந்தது. உடனே அந்த நாணயத்தை எடுத்து வந்தார். மன்னர், "அந்த நாணயத்தை நன்றாகப் பாருங்கள். நாம் எப்படி வெற்றி பெற்றோம் என்பது புரியும்," என்று சொன்னார்.

மந்திரி அந்த நாணயத்தை நன்றாகப் பார்த்தார். திருப்பித் திருப்பிப் பார்த்தார். இரண்டு பக்கங்களிலும் தலைதான் இருந்தது.

ஒற்றை நாணயத்தை வைத்தே, வீரர்களின் மனோபாவத்தை மாற்றினார் மதி நலமிக்க மன்னர்!

எந்த வீரர்கள் போராடத் தயங்கினார்களோ, அந்த வீரர்களைக் கொண்டே மகத்தான வெற்றியை மன்னர் பெற்றார்.

---

27.10.2003 அன்று தஞ்சாவூரில் நடைபெற்ற
அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

# பணத்தாசை

**ஓ**ர் ஊரில் ஒரு பயில்வான் இருந்தான். ஏழு, எட்டுப் பேர் ஏக காலத்தில் மோத வந்தாலும் அவர்களை அடித்து வீழ்த்தக் கூடிய ஆற்றல் பெற்றவன் அந்தப் பயில்வான்.

ஒரு நாள் ஒருவன் அந்தப் பயில்வானை அடித்து விட்டான். இதில் என்ன வேடிக்கை என்றால், அடித்தவன் காற்றடித்தால் கூடப் பறந்துவிடும்அளவுக்கு நோஞ்சானாக இருந்தான். அவன்



பயில்வானைத் தொடர்ந்து அடித்துக் கொண்டே இருந்தான். அவர்களைச் சுற்றிப் பெரிய கூட்டமே கூடி விட்டது.

கூட்டத்தில் கூடி இருந்தவர்கள், "பயில்வான் ஏன் திருப்பித் தாக்காமல் இருக்கிறான்? இவன் ஓர் அடி அடித்தாலே அந்த நோஞ்சான் வீழ்ந்து விடுவானே!" என்று தங்களுக்குள்ளே பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது ஒருவர் சொன்னார்; இத்தனை அடிகளையும் வாங்கிக் கொண்டிருந்தாலும், ஏன் திருப்பித் தாக்கவில்லை தெரியுமா? பயில்வான் கருணையே உருவானவன். திருப்பி அடித்தால் அந்த நோஞ்சான் தாங்க மாட்டான் என்றுதான் அடிக்கவில்லை" என்று வியாக்யானம் செய்தார்.

இருந்தாலும், பயில்வான் தொடர்ந்து அடி வாங்குவதைத் தாங்க முடியாத சில பேர், "திருப்பி அடி, திருப்பி உதை!" என்ற கூக்குரல் இட்டார்கள்.

பயில்வானுக்குக் கோபம் வந்தது. அடித்தவன் மீது அல்ல; அடி !உதை! என்று சொன்னார்களே, அவர்கள் மீது!

"என்னை என்ன ஏமாளி என்று நினைத்தீர்களா? நான் யார்? மாபெரும் பயில்வான். ஒரு இலட்சம் ரூபாய் பந்தயம் கட்டினால்தான், சண்டை போடுவேன். அதுதான் வழக்கம் அதை விட்டு விட்டு, பைசா எதுவும் தராமலே, 'ஒருவனை அடி' என்கிறீர்களே! பணம் வாங்காமல் சண்டை போட நான் என்ன ஏமாளியா?" என்று கேட்டானாம்.

தன்னைத் தாக்குபவனைக் கூட, பணம் தந்தால் தான் தாக்குவேன் என்றான் பணத்தாசை பிடித்த அந்தப் பயில்வான். அவனுக்குப் பணத்தைத் தவிர, வேறு எதிலும் நாட்டம் இல்லை!

விலை நிர்ணயித்தால்தான், வீரத்தையே காட்ட முடியும் என்று வாழ்ந்தான் அந்தப் பயில்வான்.

---

27.10.2003 அன்று தஞ்சாவூரில் நடைபெற்ற
அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

# சோம்பேறித்தனம்

**ஒ**ரு மரத்தின் அடியில் ஓர் இளைஞன் காலை நீட்டிக் கைகளைப் பரப்பி, பகல் நேரத்தில் படுத்துக்கிடந்தான். அந்தப் பக்கம் வந்த ஒரு பெரியவர் அவனைப் பார்த்து, ‘‘தம்பி, இந்த வயதிலே உனக்கு இத்தனை சோம்பலா ? உழைக்க வேண்டிய வயதல்லவா இது ?’’ என்று கேட்டாராம்.

இளைஞன் கேட்டான் – ‘‘ஏன் உழைக்க வேண்டும் ?’’



“பணத்துக்காக!”– இது பெரியவரின் பதில்

‘பணம் எதற்காக ?’– இது பெரியவனின் பதில்

‘வீடு வாங்கலாம், கார் வாங்கலாம், திருமணம் செய்யலாம், குழந்தை குட்டிகளோடு மகிழ்ச்சியாய் இருக்கலாம்.”– இது பெரியவர் பதில்.

பிறகு ? – இது இளைஞனின் கேள்வி.

‘குழந்தைகளைப் படிக்க வைக்கலாம், வேலை வாங்கித் தரலாம், நல்ல சம்பளம் வாங்கச் செய்யலாம்’ இது பெரியவர் பதில்.

‘அதற்கு பிறகு ?’ என்று இளைஞன் கேட்டான்.

‘அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கலாம், பேரக் குழந்தைகளோடு மகிழ்ச்சியாக இருக்கலாம்’ என்றார் பெரியவர்.

‘அதற்கும் பிறகு ?’ என்று இளைஞர் கேட்டான்.

‘ஓய்வாக இருக்கலாம்; நிம்மதியாக காலை நீட்டித் தூங்கலாம்’ என்று பெரியவர் சொன்னதும், உடனே அந்த இளைஞர், “அதைத் தாங்க இப்பவே செஞ்சுக்கிட்டு இருக்கேன்; போயிட்டு வாங்க!” என்றானாம்.

“எனக்கு நல்லா வேணும்; வாயை மூடிக் கொண்டு வழியைப் பார்த்துக் கொண்டு போயிருக்கலாம்” என்று வருத்தப்பட்டுக் கொண்டே போனாராம், அந்தப் பெரியவர்.

---

27.10.2003 அன்று தஞ்சாவூரில் நடைபெற்ற
அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

# மனம்

இரண்டு மனிதர்கள் இருந்தார்கள். ஒவ்வொருவரிடமும் பாதி தண்ணீரால் நிரப்பப்பட்ட ஒரு கிண்ணம் இருந்தது.

ஒரு கிண்ணத்தை வைத்திருந்தவன் அழுது கொண்டிருந்தான். 'ஏன் அழுகிறாய் ?' என்று கேட்டார் கடவுள். 'நீ இரக்கம் இல்லாதவன்; கொடுமைக்காரன்; என் கிண்ணத்தைப் பாதி காலியாக விட்டு விட்டாயே' என்று திட்டினான் முதல் மனிதன்.



இரண்டாவது கிண்ணத்தை வைத்திருந்தவன் மகிழ்ச்சியோடு சிரித்துக் கொண்டிருந்தான். 'ஏன் சிரிக்கிறாய் ?" என்று கடவுள் கேட்டார்.

'நீ கருணை உள்ளவன்; என் கிண்ணத்தில் பாதியளவு ஆவது தண்ணீரால் நிரப்பியுள்ளாயே; அதனால் மகிழ்ச்சியால் சிரிக்கிறேன்' என்று சொல்லி நன்றி தெரிவித்தான் இரண்டாம் மனிதன்.

---

30.1.2004 அன்று சென்னையில் நடைபெற்ற
தமிழ்நாடு காவல்துறையின் முதல் மகளிர் சிறப்புக்காவல்
அணித்தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

# நம்பிக்கை

**ஓ**ர் ஊரில் நீண்ட காலமாக மழை பெய்யவில்லை. விவசாயிகள் பயிர்செய்ய இயலவில்லை. தண்ணீர் இல்லாமல் மக்கள் வாடினார்கள். ஊரின் வறட்சியைப் போக்குவதற்கு என்ன செய்வது என்று தெரியாமல் மக்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் ஒரு முனிவர் அந்த ஊருக்கு



வந்தார். ‘‘நீங்கள் எல்லோரும் ஏன் வாடி இருக்கிறீர்கள் ?’’ என்று முனிவர் கேட்டார்.

‘‘சாமி, ஊரிலே சில ஆண்டுகளாக மழை இல்லை. அதனால் பயிர் இல்லை. மனைவி மக்களுக்கு உணவு இல்லை. மாடு கன்றுகளுக்குத் தீவனம் இல்லை. எங்கள் வறுமையைத் தீர்க்க வழி இல்லை. என்ன செய்வது என்றும் தெரியவில்லை!’’ என்று ஊரிலே இருந்த பெரியவர்கள் சொன்னார்கள்.

அவர்கள் சொன்னதை எல்லாம் கேட்ட முனிவர் சிறிது நேரம் கண்களை மூடிக்கொண்டு தியானம் செய்தார். பிறகு தீர்க்கமான குரலில் முனிவர் அவர்களிடம் சொன்னார்.

‘‘நாளை விடியற்காலை 5 மணிக்கு ஊர் மக்கள் எல்லோரும் இந்த இடத்திற்கு வர வேண்டும். நான் இதே இடத்தில் இருப்பேன். அப்போது மழை பெய்யும். அந்த மழையால் உங்கள் பஞ்சம் தீரும். இது உறுதி! ஆகவே, காலையில் கட்டாயம் வாருங்கள்! இப்போது நீங்கள் போகலாம்!’’ என்று கூறிய முனிவர் கண்களை மூடி தியானத்தில் ஆழ்ந்தார்.

மறுநாள் விடியற்காலை 4 மணியில் இருந்தே ஊர் மக்கள் வரத் தொடங்கிவிட்டார்கள். 5 மணி அளவில் ஏறத்தாழ எல்லா மக்களும் வந்துவிட்டார்கள். முனிவர் கண்களை மூடியபடியே இருந்தார். திடீரென்று பெருமழை பொழியத் தொடங்கியது. ஊர் மக்கள் அனைவரும் மழையில் நனைவதைக் கூட பொருட்படுத்தாமல் முனிவரின் கால்களில் விழுந்து வணங்கினார்கள்.

‘‘சாமி, உங்கள் கருணையே கருணை! உங்கள் அருளால் எங்கள் துன்பம் நீங்கப் போகிறது! நாங்கள் உங்களுக்கு

என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்'' என்று மக்கள் முனிவரிடம் கூறினார்கள்.

அப்போது முனிவர் சொன்னார். ''மழை என்னால் வரவில்லை. அங்கே பாருங்கள் ஒருவரை, அவரால் தான் மழை வந்தது'' என்று சுட்டிக் காட்டினார். எல்லோரும் அவர் சுட்டிக்காட்டிய திசையில் பார்த்தார்கள். அங்கே ஒருவர் குடையுடன் நின்று கொண்டிருந்தார்.

''பார்த்தீர்களா அந்த மனிதரை? நான் மழை வரும் என்று சொன்னதில் உங்களுக்கு சந்தேகம் இருந்தது. இருந்தாலும் என்ன நடக்கின்றது என்று பார்க்கலாம் என்று வந்தீர்கள். ஆனால், அங்கு நிற்கும் மனிதரோ நான் சொன்னதில் மாபெரும் நம்பிக்கை வைத்தார். அதனால் தான் மழை பெய்யும் என்று சொன்னதும் அதை உறுதியுடன் நம்பிக்கையில் குடையுடன் வந்திருக்கிறார். அவரது நம்பிக்கையால் தான் இப்போது மழை பெய்தது. இன்னும் மழை பெய்யும். அப்படிப்பட்ட நம்பிக்கை உங்களுக்கும் வேண்டும்'' என்று முனிவர் சொன்னாராம்.

---

5.2.2004 தேனி – ஆண்டிப்பட்டி அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

# சுயநலம்

**ஓ**ர் ஊரில் ஒரு அரசர் இருந்தார். அவருடைய நாட்டில் சில பெரிய மனிதர்கள் இருந்தார்கள். உண்மையில் அவர்கள் பெரிய மனிதர்களே அல்ல. போலிப் பெரியவர்கள். அவர்கள் அரசருக்கு எதிராக எதையாவது செய்து கொண்டே இருப்பார்கள். ஆனால், ஊர் மக்களுக்கு இது தெரியாது. அவர்கள் அந்தப் போலிப் பெரிய மனிதர்களை நல்லவர்கள் என்றே நம்பி வந்தார்கள்.

அந்தப் போலி மனிதர்கள் பொல்லாதவர்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்; அதற்கு என்ன வழி என்று அரசன்



யோசித்தார். யோசித்த பின் ஒரு முடிவுக்கு வந்தார். ஊரிலே ஒரு விழாவுக்கு ஏற்பாடு செய்தார்.

அந்த ஊர்ப் பொது விழாவுக்கு வசதியுள்ளவர்கள் நன்கொடை அளிக்கலாம் என்று அறிவித்தார். பணக்காரர்கள் பலரும் அரண்மனைக்கு வந்தார்கள். என்ன பொருளைத் தாங்கள் அளிக்கலாம் என்று அரசரிடம் கேட்டார்கள். அரசர் ஒவ்வொருவருக்கும், அவர்கள் கொடுக்க வேண்டிய பொருளைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார். அப்பொழுது போலிப் பெரிய மனிதர்கள் வந்தார்கள். எதைச் செய்தாலும் அவர்கள் கூட்டாகத்தான் செய்வார்கள். அவர்கள் அரசரிடம் அடக்கத்துடன் நின்று கொண்டு ‘‘அரசே! நாங்கள் என்ன தர வேண்டும் என்று உத்தரவிடுகிறீர்களோ அதை உடனே தரத் தயாராய் இருக்கிறோம். பொன்னைத் தரவா ? மணியைத் தரவா ? வைர வைடூரியங்களைத் தரவா ? எது வேண்டுமானாலும் தரத் தயாராய் இருக்கிறோம். ஆணையிடுங்கள் அரசே’’ என்று கூறினார்கள்.

‘‘இல்லை, பொன்னும், பொருளும் வேண்டாம். எல்லாப் பொருள்களையும் ஊர்ப் பொது இடத்தில் தரச் சொல்லியிருக்கிறேன். உங்கள் பங்காகப் பால் கொண்டு வந்து நடுவே வைக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தில் ஊற்றுங்கள்; அதுபோதும்’’ என்று அரசர் சொன்னார்.

உடனே அந்தப் போலி மனிதர்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு ஒரு அண்டா பால் கொண்டு வருகிறோம் என்றார்கள். அரசர், ‘‘அவ்வளவு வேண்டாம். ஆளுக்கு ஒரு சொம்பு பால் கொண்டு வாருங்கள் அது போதும், ஊர் நடுவே வைக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தில் ஊற்றுங்கள் என்று சொன்னார்.

அவர்களுக்கு ரொம்ப சந்தோஷம். ‘‘அப்பாடா! ஒரு சொம்பு பால் தானே ? கொடுத்தால் போயிற்று ? என்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

விழா நாள் வந்தது. போலிப் பெரிய மனிதர்கள் ஒவ்வொருவரும் ‘மற்றவர்கள் பால் கொண்டு சென்று ஊற்றும்போது நாம் ஒருவர் மட்டும் சொம்பு நிறையத் தண்ணீரை கொண்டு போய் ஊற்றி விடுவோம்.யாருக்குத்தெரியப்போகிறது ? என்றுநினைத்தார்கள். நினைத்தது மட்டும் அல்லாமல் இயல்பாகவே கருமிகளான அவர்கள் ஒவ்வொருவருமே அப்படிச் செய்தார்கள்.

எல்லோரும் ஊற்றி முடிந்ததும் அரசர் அமைச்சரை அழைத்து “ எவ்வளவு பால் இருக்கும் என்று அளந்து வாருங்கள்” என்று சொன்னார்.

ஊரார் எல்லோரும் திரண்டிருந்த அந்தக் கூட்டத்தில் நடுவே வைக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய பாத்திரத்தை நோக்கி அமைச்சர் நடந்தார். பாத்திரத்தை எட்டிப் பார்த்த அமைச்சருக்கு பகீரென்றது. அமைச்சர் அரசரை நோக்கிச் சொன்னார். “அரசே, இந்தப் பெரிய மனிதர்கள் நம்மை ஏமாற்றி இருக்கிறார்கள். பாத்திரம் முழுவதும் தண்ணீர்தான்! ஒரு சொட்டுப் பாலைக் கூட அவர்கள் ஊற்றவில்லை” என்று உரக்கக் கூறினார். மக்களும் வந்து பார்த்தார்கள். “ஆகா! இவ்வளவு நாளும், பெரிய மனிதர்கள் என்று நினைத்தோமே ? இவர்கள் எல்லோருமே போலிப் பெரிய மனிதர்கள்தானா ? இவர்கள் அரசரை ஏமாற்றினார்கள். நம்மை ஏமாற்றினார்கள். அதைவிடக் கொடுமை இவர்கள் தங்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் ஏமாற்றியுள்ளார்கள்! இதுவரை இவர்கள் நம்மை முட்டாள்களாகவே நினைத்திருக்கிறார்கள். நாமோ இந்த மண்ணாங்கட்டிகளைத் தங்கக் கட்டிகள் என்றல்லவா தவறாக நினைத்து விட்டோம் ?” என்று சொல்லி மக்கள் வெட்கப்பட்டார்கள்! வேதனைப் பட்டார்கள்!

---

5.2.2004 அன்று தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில்
நடைபெற்ற அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

# வாய் ஜாலம்

**ஒ**ரு ஊரில் ஒரு புலவர் இருந்தார். அந்தப் புலவர் ராஜாவிடம் சென்று அவரைப் புகழ்ந்து அருமையாகக் கவிதை பாடினார். ராஜாவுக்கு ரொம்ப மகிழ்ச்சி. அவரை இதற்கு முன் இப்படி யாரும் புகழ்ந்து பாடியதில்லை. அந்த மகிழ்ச்சியில் உணர்ச்சிவசப்பட்டு 'உமக்கு 2 ஏக்கர் நிலம் தருகிறோம்!' என்று சொல்லிவிட்டார். மற்றவர்களுக்கெல்லாம் மிகவும் ஆச்சரியம், ஏனென்றால், ராஜா



சல்லிக் காசு கூட யாருக்கும் கொடுத்து அவர்கள் பார்த்ததில்லை.

ராஜா மந்திரியைக் கூப்பிட்டார். “ இந்தப் புலவருக்கு 2 ஏக்கர் நிலம் தர வேண்டும். அதற்கான தானப் பத்திரம் எழுதிக் கொண்டு வாரும்” என்று சொன்னார். மந்திரி பத்திரம் எழுதிக் கொண்டு வந்து மன்னரிடம் கொடுத்தார். மன்னர் அதைப் புலவருக்குக் கொடுத்தார். புலவர் பயபக்தியுடன் அந்தப் பத்திரத்தை இரண்டு கைகளாலும் வாங்கிக் கொண்டார். பத்திரத்தைப் படித்துப் பார்த்த புலவருக்கு மயக்கமே வந்துவிட்டது. ஏன் ? கொடுத்தது வெறும் 2 ஏக்கர் நிலம். அந்த 2 ஏக்கர் நிலமும் எட்டு இடங்களில் சிதறிக் கிடந்தது. “ எப்படி இந்த இடங்களுக்குப் போய் விவசாயம் செய்வது ?” என்ற மலைப்பில் அவர் திகைத்துப் போய் நின்றுவிட்டார். ஒவ்வொரு இடத்திலும் கால் ஏக்கர் நிலம் இருக்கும்படி தள்ளித் தள்ளி எழுதப்பட்டிருந்தது.

இதை இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், உதாரணத்திற்கு இப்படிச் சொல்லலாம்––

அம்மாபட்டியில் 1/4 ஏக்கர்

ஆண்டிப்பட்டியில் 1/4 ஏக்கர்

கம்பத்தில் 1/4 ஏக்கர்

கண்டமனூரில் 1/4 ஏக்கர்

உப்பார்பட்டியில் 1/4 ஏக்கர்

உத்தமபாளையத்தில் 1/4 ஏக்கர்

தேனியில் 1/4 ஏக்கர்

தேவதானப்பட்டியில் 1/4 ஏக்கர்

–இப்படி 2 ஏக்கர் நிலத்தை எட்டு இடங்களில் தள்ளித்தள்ளித் தந்தால் எப்படி இருக்கும் ? கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள் ! இப்படித்தான் அந்தப் பத்திரத்தில் எழுதப்பட்டிருந்தது.

“என்ன புலவரே ? என்னுடைய வள்ளல் தன்மைகளைப் பார்த்து சந்தோஷத்தில் ஊமையாகி விட்டீரா ?” என்று கேட்டார் ராஜா.

“மகாராஜா, மந்திரி தள்ளித் தள்ளி எழுதியிருக்கிறார்.” என்று பயந்து கொண்டே புலவர் சொன்னார். “என்ன ? அப்படியா எழுதினீர் ?” என்று ராஜா கேட்டார். “ ராஜா நான் நெருக்கி நெருக்கித்தானே எழுதி இருக்கிறேன் ? இதற்கு மேல் நெருக்கி எழுதினால் படிக்க முடியாது” என்றார் மந்திரி.

“இல்லை இல்லை ! தள்ளித் தள்ளித்தான் எழுதியிருக்கிறார் ! இதோ பாருங்கள் !” என்று சொல்லிப் பத்திரத்தை ராஜாவிடம் காட்டினார் புலவர்.

ராஜா பார்த்தார். ‘நமக்கேற்ற மந்திரி இவர். நிலத்தைக் கொடுக்கக் கூடாது என்பதற்காகவே இப்படிச் செய்திருக்கிறார்’ என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு புலவரைப் பார்த்துச் சொன்னார் “எங்கே தள்ளித் தள்ளி எழுதப்பட்டிருக்கிறது, நெருக்கி நெருக்கித்தானே எழுதியிருக்கிறது ? புலவரே நீர் பொய் சொல்லிவிட்டீர் ! உமக்கு நிலம் கிடையாது ! நீர் போகலாம் !” என்று, புலவரை விரட்டாத குறையாக வெளியே போகச் சொல்லிவிட்டார் ராஜா, அந்தப் புலவர் தன் விதியை நொந்து கொண்டு வெளியே போனாராம்.

---

**5.2.2004** அன்று தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில்
நடைபெற்ற அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

# பணம் உண்டு; மனம் இல்லை

**மி**கப்பெரிய பணக்காரர் ஒருவர் இருந்தார். பிரம்மாண்டமான மாளிகை! பதினைந்து கார்கள்! வங்கியில் ஏகப்பட்ட பணம்! அந்த நகரத்திலேயே அவர்தான் பெரிய பணக்காரர்!

ஒருநாள் ஒரு நண்பர் அவரைப் பார்க்க வந்தார். அப்பொழுது அந்தப் பணக்காரர் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

“என்ன சார், கப்பல் கவிழ்ந்து விட்டது மாதிரி கன்னத்தில் கை வைத்து உட்கார்ந்து விட்டீர்கள்! அப்படி என்ன கவலை உங்களுக்கு?” என்று நண்பர் கேட்டார். “கப்பல் கவிழ்ந்திருந்தால் கூடப் பரவாயில்லையே; இன்சூரன்ஸ் பணமாவது கிடைத்திருக்கும். இது அதைவிட மோசம்! என்றார் பணக்காரர்!

“ஓ அவ்வளவுசோகமானவிஷயமா?” என்றுநண்பர்ரொம்பவும் வருத்தப்பட்டுக் கொண்டே கேட்டார். “ஆம்! என் மனைவி பணம் கேட்கிறாள்” என்றார் பணக்காரர். பல ஆண்களுக்கு மனைவி பணம் கேட்பதே சோகமான விஷயம்தான். நண்பர் நினைத்துக் கொண்டார். நிச்சயம் பல இலட்சம் ரூபாயாவது பணக்காரரின் மனைவி கேட்டிருக்க வேண்டும். “ஆமாம், அவ்வளவு ஊதாரியா உங்கள் மனைவி?” என்று கேட்டார் நண்பர். “அதை ஏன்



கேட்கிறீர்கள் ? முந்தாநாள் 5 ரூபாய் கேட்டாள்; நேற்று 10 ரூபாய் கேட்டாள். இன்றைக்கு (சொல்லும்போதே துக்கம் தொண்டையை அடைக்க) இன்றைக்கு காலையில், 15 ரூபாய் கேட்டாள் !'' என்று பணக்காரர் ஆதங்கத்தோடு பதில் சொன்னார். நண்பராலும் இந்த அநியாயத்தைத் தாங்க முடியவில்லை. ஏனென்றால், அவரும் அப்படித்தான் ! அவர் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய மனைவி வேலை பார்க்கிறார். மனிதர்

பொல்லாதவர். 1ஆம் தேதி பிறந்துவிட்டால் மனைவி வாங்குகிற முழுச் சம்பளத்தையும் அப்படியே சுளையாக அவர் கையில் ஒப்படைத்துவிட வேண்டும். இல்லாவிட்டால் அந்த மனிதருக்குப் பைத்தியம் பிடித்துவிடும். கண்ணை மூடிக்கொண்டு கத்த ஆரம்பித்து விடுவார். அப்படிப்பட்டவர் அவர்! ஆகவே, பணக்கார நண்பரின் மனைவி தன் கணவரிடத்தில் 15 ரூபாய் பணம் கேட்டது அவருக்கு பயங்கரமாகத் தெரிந்தது.

அவர் கேட்டாராம் – "அப்படி அவ்வளவு பணத்தை வாங்கிக் கொண்டு என்ன செய்கிறார்களாம் அந்த அம்மா?" பணக்காரர் பதில் சொன்னாராம். "எனக்கு எப்படித் தெரியும்? நான்தான் கொடுப்பதே இல்லையே!" என்றாராம். கேட்டது அதிகபட்சம் 15 ரூபாய்; கேட்டவர் கட்டிய மனைவி! பணக்காரக் கணவரோ 10 பைசாக் கூட கொடுக்கவில்லை. ஆனால், மனைவி பணம் கேட்ட சோகத்தை அவரால் தாங்க முடியவில்லை.

---

**9.2.2004** அன்று நடைபெற்ற
கிருஷ்ணகிரி மாவட்டத் துவக்க விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

# உழைப்பால் உயர வேண்டும்

**ஒ**ருவருக்கு ஏகப்பட்ட நிலம் இருந்தது. 7,000 ஏக்கருக்கு மேல் பரந்து விரிந்து கிடந்தது அந்த நிலம். ஆனால் எல்லாம் பொட்டல் வெளி. கொஞ்சம் தண்ணீர் வசதி இருந்தது என்றாலும் பயிர் பச்சை விளையாத கட்டாந்தரையாக நிலம் இருந்ததால் வேளாண்மை செய்யவில்லை; வருமானத்துக்கும் வழியில்லை.



“இந்த நிலத்தை விற்று விட்டால்தான் என்ன ?” என்று நினைத்தார்.

அவருடைய நாட்டம் எல்லாம் எங்காவது வைரச் சுரங்கத்தைக் கண்டுபிடித்துப் பெரும் பணக்காரராக ஆக வேண்டும் என்பதில் இருந்தது.

ஒரு நாள் வந்த விலைக்கு நிலத்தை விற்றுவிட்டு வைரச் சுரங்கத்தைத் தேடி நாடு நாடாகத் திரிந்தார். ஆப்பிரிக்கா, ஐரோப்பாக் கண்டங்களில், அவர் தேடாத இடம் இல்லை. ஆனால், வைரச் சுரங்கம் இருக்கும் இடம் எதுவும் கண்ணுக்குத் தெரியவில்லை. கையில் இருந்த பொருள் எல்லாம் கரைந்து போய்விட்டது. ஏறத்தாழ பிச்சைக்கார நிலைக்கு வந்துவிட்டார். மனதிலே பாரம். உடலிலே நோய்கள். கையிலோ காசில்லை. இவ்வாறு வறுமையிலும் மன வருத்தத்திலும் வாடிய அவர் ஆற்றிலே குதித்துத் தற்கொலை செய்து கொண்டார்.

அவரது நிலை அப்படியிருக்க அவரிடம் நிலத்தை வாங்கினாரே அவர் என்ன செய்தார் ?” மேடு பள்ளத்தைச் சமமாய் ஆக்கினார்; நிலத்தடி நீரைக் கஷ்டப்பட்டு மேலே கொண்டு வந்தார். அவரது உழைப்பால் அந்த நிலத்தின் சிற்றோடைகளில் தண்ணீர் ஓடியது. ஒரு நாள் அந்த வழியாக ஒட்டகத்தில் வந்த ஒருவர், தண்ணீர் பருக அங்கே வந்தார்.

நீரோடைகளில் நீர் குடிக்கக் குனிந்தவர் அங்கே கிடந்த கற்களில் வான வில்லின் ஜாலம் தெரிவதைப் பார்த்தார்.

அனுபவசாலியான அவருக்கு உண்மை ஒரு நொடியில் விளங்கியது. அவர் பார்த்த கற்கள் அத்தனையும் வைரம்!

வழிப்போக்கர் விஷயத்தை நிலத்துச் சொந்தக்காரரிடம் சொன்னார்.

அந்த நிலம் முழுதும் வைரக் கற்கள் கிடைத்தன. அந்த நிலத்தின் உரிமையாளர் கோடி கோடியாகச் சம்பாதித்தார்.

நிலத்தை விற்று விட்டுப் போனவர் வெளிநாடுகளில் வைரத்தைத் தேடியே வாழ்வை முடித்துக் கொண்டார். அவரிடம் நிலத்தை வாங்கியவருக்கோ அந்த நிலம் முழுவதுமே வைர வயலாக அமைந்திருந்தது.

இதுதான் விதியா ? சொர்க்கம் எங்கோ இருக்கிறது என்று நினைக்கிறான் சோம்பேறி மனிதன். அது தன் காலடியிலேயே இருக்கிறது என்பதைக் கண்டுகொள்கிறான் உழைப்பாளி.

---

**9.2.2004** அன்று நடைபெற்ற
கிருஷ்ணகிரி மாவட்டத் துவக்க விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

# அறிவு

**ஓ**ர் ஆற்றில் நிறைய வெள்ளம் போய்க் கொண்டிருந்தது. அங்கே ஓர் மனிதர் வந்தார். ஆற்றைக் கடக்க வேண்டும் என்ன செய்வது என்று தெரியாமல் அவர் நின்று கொண்டிருந்தார். அவர் ஏற்கெனவே பயந்த சுபாவமுள்ள மனிதர். எனவே, அவர் எப்படி ஆற்றைக் கடந்து செல்வது, என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில், ஒரு வலிமையான காளைமாடு வந்து கரையில் நின்றது. கண நேரத்தில் அது ஆற்றுக்குள் குதித்து நீந்தத் தொடங்கியது. அப்போது கரை அருகே விளையாடிக் கொண்டிருந்த ஒரு சிறுவன் உடனே ஆற்றிலே குதித்தான். காளை மாட்டின் வாலை உறுதியாகப் பிடித்துக் கொண்டான். காளைமாடும் விரைவாக நீந்தியது. வாலைப் பிடித்துக் கொண்டிருந்த அந்தச் சிறுவனும் அதன் பின்னாலேயே போனான். காளைமாடு கரை ஏறியது. அந்தச் சிறுவனும் கரை ஏறினான்.

“ஒ, இப்படிக் கூட ஆற்றைக் கடக்கலாமோ ?” என்று அந்த மனிதர் நினைத்தார். நமக்கு ஒரு காளைமாடு அகப்படாதா



என்று தேடிப் பார்த்தார். அப்போது அந்தப் பக்கம் நாய் ஒன்று வந்துகொண்டிருந்தது.

நாய் ஆற்றுக்குள் குதித்தது. இந்த மனிதரும் உடனே ஆற்றுக்குள் குதித்தார்; குதித்து, நாயின் வாலை இறுகப் பிடித்துக் கொண்டார். நாய் தத்தளிக்கத் தொடங்கியது. அந்த மனிதரோ நாயின் வாலை விடவே இல்லை. எந்தச் சனியனோ தன்னைப் பிடித்துக் கொண்டிருக்கிறது என்று பயந்து போன நாய் கடிக்கப் பார்த்தது– அந்த மனிதர் நாய் வாலைப் பிடித்துத் தொங்கத் தொடங்கினார். அங்கே என்ன நடந்திருக்கும் என்பதை நீங்களே கற்பனை செய்து பாருங்கள்!

நடு ஆற்றுக்குள் வருகிறபோது நாய்க்கும் அந்த மனிதருக்கும் நடந்தது ஒரு ஜீவ மரணப் போராட்டம்! ஒரு சில நொடிகள்தான்! நாய் நீந்த முயற்சிக்க மனிதர் அதன் வாலைப் பிடித்துத் தொங்க, நாயையும் அந்த மனிதரையும் சேர்த்து ஆற்று வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டது.

நாய், தான் மட்டும் நீந்தியிருந்தால் ஒரு வேளை உயிர் பிழைத்திருக்கக் கூடும். பாவி மனிதர் அந்த நாயையும் நீந்த விடாமல் சாகடித்து விட்டார்.

---

**9.2.2004** கிருஷ்ணகிரி மாவட்டத் துவக்க விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

# சிரிப்பின் மறுபக்கம்

**ஒ**ரு மருத்துவரிடம் நோயாளி ஒருவர் வந்தார். “எனக்கு மனக் கவலை மிக அதிகமாக இருக்கிறது. ஏதாவது மருந்து கொடுங்கள்” என்று கேட்டார்.

மருத்துவர் சொன்னார். “மனக்கவலை என்பது மருந்துகளால் தீராது. அப்படித் தீர்க்கவும் முடியாது. உங்களுக்கு நான் நல்லவழி ஒன்று கூறுகிறேன். வாய்விட்டுச் சிரியுங்கள், வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்று பழமொழி இருக்கிறது. எனவே, சிரியுங்கள்; சிரித்துக் கொண்டே இருங்கள்; உங்கள் மனக்கவலை மாறும்” என்று மருத்துவர் சொன்னார்.

“எப்படிச் சிரிப்பது ? “எனக்கு இருக்கும் கவலைகளை நினைத்தால் சிரிக்கத்தான் முடியுமா ? எப்படி நான் சிரிப்பது ?” என்றார் வந்தவர்.



“கவலைப்பட வேண்டாம்! இந்த நாட்டிலே மிகச் சிறந்த நகைச்சுவை நடிகர் ஒருவர் இருக்கிறார். அவர் பெயர் க்ரிமால்டி (Grimaldi) அவர் இப்போது நம் நகரில்தான் தங்கி இருக்கிறார். அவரிடம் போங்கள். அவர் சிரிக்க வைப்பார். எப்படிப்பட்ட கவலையும் பறந்து போகும். பிறரைச் சிரிக்க வைப்பதில் அவருக்கு நிகர் அவர்தான். அவரைச் சந்தியுங்கள். உடனே போங்கள்!” என்று மருத்துவர் சொன்னார்.

உடனே வந்த நபர் விக்கி விக்கி அழ ஆரம்பித்தார்.

டாக்டருக்குப் பயமாய்ப் போய்விட்டது. நாம் ஏதாவது தப்பாகப் பேசிவிட்டோமோ என்று அச்சப்பட்டார்.

அவர் கேட்டார்! “ஏன் அழுகிறீர்கள்? நகைச்சுவை நடிகர் க்ரிமால்டியைப் பார்க்கத் தானே நான் சொன்னேன்? அதில் என்ன தவறு? அதற்கேன் அழுகிறீர்கள்?” என்று கேட்டார்.

வந்த நபர் அழுகையை நிறுத்தாமல் டாக்டரின் கைகளைப் பிடித்துக் கொண்டு சொன்னார்.

“டாக்டர்! நான் தான் அந்த க்ரிமால்டி! எந்த நகைச்சுவை நடிகரை நீங்கள் பார்க்கச் சொன்னீர்களோ அந்த நகைச்சுவை நடிகரே நான்தான்” என்று அவர் சொன்னார். அப்போது டாக்டருக்கு மனக்கவலை அதிகமாகிவிட்டது.

---

**3.12.2004** அன்று நடைபெற்ற
தமிழ்நாடு திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

# பொறாமை

**பா**வம் செய்த ஒருவன் நரகத்துக்கு அனுப்பப்பட்டான். நரகப் பள்ளத்தாக்கில் இருந்து வந்த அவன் நடந்து கொண்டிருந்தபோது, பாதையில் ஒரு சிலந்திப் பூச்சி இருந்ததைப் பார்த்து, அதை மிதிக்காமல் கவனமாகச் சென்றான். பிற உயிரைக் கொல்லாமல் இருந்ததற்காக அவன் கணக்கில் கொஞ்சம் புண்ணியம் சேர்ந்தது. உடனே அந்தப் புண்ணியத்திற்கான பயனும் கிடைத்தது. நரகத்தில் இருந்து மேலே வருமாறு அவனை மேலே இருந்து அழைத்தார்கள்.!

‘எப்படி மேலே ஏறி வருவது ? என்று அவன் கேட்டான்.

‘இதோ தொங்குகிறது பார் சிலந்தி இழை– இதைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறி வா’ என்று சொன்னார்கள்.

அவனுக்கோ அவ நம்பிக்கை! ‘இவ்வளவு மெல்லிசாக இருக்கும் இந்தச் சிலந்தி இழை நம்மைத் தாங்குமா ? கையால் தொட்டதும் அறுந்து போகுமே இதை நம்பி எப்படி மேலே ஏறிச் செல்வது ?’ என்று யோசிக்கத் தொடங்கினான்.

அவனது தயக்கத்தைப் பார்த்து மேலே இருந்தவர்கள் ‘தைரியமாக வா; இழை அறுந்து விடாது’ என்று சொன்னார்கள்.

அவனும் சிலந்தி இழையைப் பிடித்து மேலே பாதி வரை ஏறி வந்து விட்டான். அப்போது திடீரென்று கீழே பார்த்தான். அவனைப் போலவே பல பேர் சிலந்தி இழையைப் பிடித்து மேலே வந்து கொண்டிருந்தார்கள்.



அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'புண்ணியம் செய்தது நான்! பலனைப் பெற வேண்டியது நான்! இவர்கள் எல்லோரும் வரப் பார்க்கிறார்களே!' என்று கோபித்து, கீழே இருந்தவர்களைக் காலால் எட்டி உதைத்தான். எல்லாரும் கீழே விழுந்தார்கள்; அவனும் கூட திரும்பவும் நரகத்துக்குள் விழுந்துவிட்டான். என்ன காரணம் ?

எப்போது அவன் பொறாமைப்பட்டானோ, எப்போது சுயநலத்தால் மற்றவர்களை எட்டி உதைத்துக் கீழே தள்ளினானோ, அப்போதே சிலந்தி இழையும் அறுந்து விழுந்தது. அந்தச் சுயநலக்காரனும் கீழே விழுந்தான்.

---

15.12.2004 அன்று நடைபெற்ற
கிருஷ்ணகிரி மாவட்ட அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

# அன்பிற் சிறந்தவர்

ஒரு கோயில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஏராளமான பக்தர்கள் கூடியிருந்தார்கள். அப்போது வானத்திலிருந்து ஒரு தங்கத் தட்டு கோயில் முற்றத்தில் விழுந்தது. 'தகதக' என மின்னும் அந்தத் தங்கத் தட்டைப் பார்த்ததும், எல்லோரும் அதை நோக்கி ஓடினார்கள். யாருக்கு அந்தத் தங்கத் தட்டு? கோயிலுக்கா, இல்லை பக்தர்களில் ஒருவருக்கா?

கோயில் நிருவாகி வந்தார். தட்டைக் கையில் எடுத்தார். அதிலே ஏதோ வாசகம் காணப்பட்டது. 'அன்பில் சிறந்தவர் யாரோ, அவருக்கு ஆண்டவன் பரிசு' என்று அந்தத் தங்கத் தட்டில் எழுதப்பட்டிருந்தது. "அன்பில் சிறந்தவர் யார்? – "அவரா? இல்லை இவரா?, "நான்தான்" நான்தான்!" என்று ஏராளமான குரல்கள் எழுந்தன. கோயில் நிர்வாகி ஓர் அறிவிப்பைச் செய்தார்!

அடுத்த நாள் பகல் 12 மணிக்கு பக்தர்கள் வந்து தாங்கள் செய்த அன்புச் செயலைச் சொல்லி தங்கத் தட்டைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த அறிவிப்பைக் கேட்டுவிட்டுப் போன மக்களில் பலருக்கு அன்று இரவு தூக்கமே வரவில்லை. என்ன சொல்லித் தங்கத் தட்டைத் தட்டிச் செல்லலாம் என்பதே எல்லோருடைய சிந்தனையாகவும் இருந்தது.



மறுநாள் பகல் 12 மணி! எள் போட்டால் எள் கீழே விழாதபடி ஏகப்பட்ட கூட்டம். ஒவ்வொருவரும் தங்களது அன்புச் செயலை விவரிக்க வந்தார்கள்.

ஒரு பணக்காரர் வந்தார்! “நான் எனது சொத்தில் ஏராளமான பங்கை ஏழைகளுக்குத் தர்மம் செய்து வருகிறேன்“ என்றார்.

அவருடைய அன்பு நெஞ்சத்தை உணர்ந்த கோயில் நிர்வாகி, அவருக்கே தங்கத் தட்டை அளித்தார்.

சிலருக்குச் சந்தேகம்! அதைச் செய்தேன் இதைச் செய்தேன் என்று பொய் சொல்லிக்கூடத் தங்கத் தட்டைத் தட்டிச் சென்றுவிடலாமே! இந்தப் பணக்காரர் ஏராளமாகத் தானம் செய்கிறார் என்பதை எப்படி நம்புவது? அதற்கு என்ன சாட்சி?

இப்படி, அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தபோதே பணக்காரர் கையில் இருந்த தங்கத்தட்டு திடீரென்று தகரத் தட்டாக மாறிவிட்டது.

“ஓகோ! தகுதியில்லாதவர் கைக்குப் போனால், தங்கத் தட்டு இப்படித் தகரத் தட்டாகப் போய்விடும் போலும்!” என்று எல்லோரும் பேசத் தொடங்கினார்கள்.

அந்த ஊருக்குப் பெரும் பணக்காரர்கள் எல்லாம் வந்து அங்கே இருந்த ஏழைகளுக்கு வாரி வாரி வழங்கினார்கள். அடித்தது யோகம் பிச்சைக்காரர்களுக்கு ! அந்தக் கோயிலை நோக்கி அடுத்த நாட்டுப் பிச்சைக்காரர்களும் வரத் தொடங்கினார்கள். ஏழைகள் எல்லோருக்கும் பொருள் ஏராளமாகக் கிடைத்தது; எந்தக் குறைவும் இல்லை! பாவம்! பணக்காரர்கள்தான் வந்து வந்து பணத்தைத் தந்து தந்து, நொந்து போனார்கள். அவர்கள் கையில் சென்றதுமே தங்கத் தட்டு தகரத் தட்டு ஆனது!

நாட்கள் நகர்ந்தன. பல நாட்கள், பல மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், தகுதியான ஒருவர் வரவும் இல்லை, தங்கத் தட்டைப் பெறவும் இல்லை. ஆனால், தினசரி கோயிலில் கூட்டத்துக்கு மட்டும் குறைச்சலே இல்லை.

ஒரு நாள் கிராமத்தான் ஒருவன் வந்தான். அவனுக்கு இந்தத் தங்கத் தட்டுச் சமாச்சாரம் எதுவும் தெரியாது. கோயிலில் சாமி கும்பிட வந்தவன் வெளியில் உட்கார்ந்திருந்த பிச்சைக்காரர்கள் கூட்டத்தைப்பார்த்து, "ஐயோ! என் நாட்டில் இத்தனை ஏழைகளா? பார்க்கவே பரிதாபமாக இருக்கிறதே" என்று சொல்லி அழுதான்.

கை, கால் இழந்தவர்கள், கண் பார்வை இல்லாதவர்கள், ஊமைகள்— இவர்களை எல்லாம் பார்த்து அவன் உள்ளம் உருகிற்று. அவன் கதறி அழுதான். கோயிலில், சாமியைப் பார்த்து இந்தக் கொடுமைகளுக்கு எல்லாம் விமோச்சனமே இல்லையா என்று கேட்க உள்ளே ஓடினான். உள்ளே கோயில் நிர்வாகி இருந்தார். அவரது கையில், தங்கத் தட்டு இருந்தது. அப்போது, கோயில் நிர்வாகி கூட்ட நெரிசலில் தங்கத் தட்டைத் தவறவிட்டார். கீழே வந்து நின்ற கிராமத்தான் கையில் விழுந்தது தங்கத் தட்டு! உடனே ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது. தங்கத் தட்டு தகரத் தட்டாக ஆகவில்லை! முன்னைவிட மூன்று மடங்கு ஜொலித்தது.

கோயில் நிர்வாகிக்கு மட்டற்ற மகிழ்ச்சி! "ஐயா, நீதான் உண்மையான அன்பின் வடிவம், உனக்குத் தான் இந்தத் தங்கத் தட்டு சொந்தம்" என்று கூறி ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

---

18.02.2005 அன்று சென்னை,
ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற
இந்தியக் குடியரசுத் தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சரின்
பதக்கங்கள் வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

# கடவுள் இருக்கும் இடம்

முன்னொரு காலத்தில் மன்னர் ஒருவர் இருந்தார். ஒரு நாள், அவரது மனதிலே ஒரு கேள்வி எழுந்தது "கடவுள் எவ்வளவு தூரத்தில் இருக்கிறார்? அவர் இருக்கும் இடத்துக்கும், நமக்கும் எவ்வளவு தூரம் இருக்கும்? யாரைக் கேட்டால் தெரியும்?

அரச சபையில் ஒவ்வொருவராகக் கேட்டார். யாருக்கும் விடை தெரியவில்லை. அமைச்சர் சொன்னார்– மன்னா, நம் நகருக்கு வெளியே ஒரு மண்டபம் இருக்கிறது. அங்கு ஒரு பெரியவர் இருக்கிறார். அவருக்கு கடவுள் எவ்வளவு தூரத்தில் இருக்கிறார் என்ற விவரம் தெரிந்திருக்கும். அவரை அழைத்து வரச் சொல்கிறேன். அவரிடம் கேட்கலாம். இவ்வாறு சொல்லிய அமைச்சர் அந்தப் பெரியவரை அழைத்து வரச் சேவகர்களை அனுப்பினார்.

பெரியவர் வந்தார். அவருக்கு உரிய மரியாதை செலுத்திய மன்னர், "கடவுள் எவ்வளவு தூரத்தில் இருக்கிறார்? உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டார்.

பெரியவர் அமைதியாகப் பதில் சொன்னார்–"கடவுள் கூப்பிடு தூரத்தில் இருக்கிறார்".

"அப்படியானால், அழைத்தால் உடனே வந்து விடுவார் அல்லவா?" என்று மன்னர் கேட்டார்.



“அது எந்த இடத்தில் கடவுள் இருப்பதாக நீ நினைக்கிறாயோ அதைப் பொறுத்தது ?” என்று பெரியவர் பதில் சொன்னார்.

“எனக்கு விளங்கவில்லையே, கொஞ்சம் புரியும்படி சொல்லுங்கள்” என்று கேட்டுக் கொண்டார் மன்னர்.

“துரியோதனன் சபையிலே திரவுபதி துன்புறுத்தப்பட்ட போது கிருஷ்ணனை அழைத்தாள், அப்படி அழைக்கும் போது, ‘‘வைகுந்த வாசா! வந்து காப்பாற்று’ என்றாள். கிருஷ்ணன் வரவில்லை.

“துவாரகைதானே கிருஷ்ணன் ஊர், எனவே, ‘துவாரகாபுரி வாசா’ என்று அழைத்தாள். கிருஷ்ணன் வரவில்லை!

“கடைசியில் இதயத் தாமரையில் இருப்பவனே என்னும் பொருள்பட, ‘ஹ்ருதய கமல வாசா” என்று அழைத்தாள்.

கிருஷ்ணன் உடனே அருள் புரிந்தான். அவளுக்கு ஆடை வழங்கினான். அவளது துன்பத்தைப் போக்கினான்.’

“வைகுந்தத்தில் கிருஷ்ணன் இருப்பதாக நினைத்தாள், “வைகுந்த வாசா” என்று அழைத்தாள், கிருஷ்ணன் வரவில்லை. பின்பு அதைக் காட்டிலும் அருகில், துவாரகாபுரியில் இருப்பதாக எண்ணி ‘துவாரகாபுரி வாசா’ என்று அழைத்தாள். கிருஷ்ணன் வரவில்லை.

“கிருஷ்ணன் எங்கேயோ இல்லை, தன் இதயத்திலேயே இருக்கிறான் என்பதை உணர்ந்து ‘ஹ்ருதய கமல வாசா’ என்று அழைத்தாள், அருள் பெற்றாள்.

“கடவுள் எவ்வளவு தொலைவில் இருக்கிறார் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ, அந்த நினைப்புக்குத் தகுந்தவாறு உடனே வந்து கடவுள் அருள் புரிவார். எந்த இடத்தில் இருந்தாலும் அவருக்குக் கேட்கும். ஆனால், உங்கள் உள்ளத்திலேயே கடவுள் இருப்பதாக எண்ணி அழைத்தால் உடனுக்குடன் கடவுள் வருவார், அருள் தருவார்” என்று, அந்தப் பெரியவர், மன்னருக்கு விளக்கம் சொன்னார்.

---

19.07.2005 அன்று நடைபெற்ற
திருவள்ளூர் மாவட்ட அரசு விழாவில்,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

# துரியோதனன் வஞ்சகம்

**ந**ல்ல காரியங்களை எல்லாம் நடக்க விடாமல் செய்வதற்கு நாளும் ஒரு தடையை ஏற்படுத்தி வரும் நயவஞ்சகர்களை நினைக்கும் போது எனக்கு மகாபாரதக் கதை ஒன்று தான் நினைவுக்கு வருகிறது.

துரியோதனன் வஞ்சகமே வடிவமானவன். சூழ்ச்சியால் பஞ்சபாண்டவர்களைக் காட்டிற்கு அனுப்பியதோடு அவனது வஞ்சகம் முடிந்து விடவில்லை.

வனவாசம் செய்து வந்த பாண்டவர்களை அழித்து விடுவதற்கும் அவன் வஞ்சகச் செயல்களைத் தொடர்ந்து செய்து வந்தான்.

ஒரு நாள் துர்வாச முனிவருக்குத் துரியோதனன் விருந்து அளித்தான். மகிழ்ச்சியடைந்த முனிவர் “உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்!” என்று சொன்னார். துரியோதனன் நல்லவனாக இருந்தால், தனக்கு நன்மை அளிக்கும் நல்வரம் ஒன்றைக் கேட்டிருப்பான். அவன்தான் பிறப்பிலேயே தீயவன் ஆயிற்றே! நன்மையைக் கேட்பானா!

துர்வாச முனிவரிடம் துரியோதனன் சொன்னான்– “எனக்கு எந்த வரமும் வேண்டாம். நீங்கள் என் மாளிகையில் விருந்து உண்டது போல் பாண்டவர்கள் இருக்கும் இடத்திற்குச் சென்று



அங்கும் விருந்து உண்ண வேண்டும்! இதுதான் என் விருப்பம்!"

இப்படித் துரியோதனன் சொன்னதும் துர்வாச முனிவரும், அவருடைய சீடர்களும் பாண்டவர்களைத் தேடிப் போனார்கள்.

அடர்ந்த காட்டில், துறவிகளைப் போல் வாழ்ந்து வந்த பஞ்சபாண்டவர்கள், முனிவருக்கும், அவருடைய பரிவாரங்களுக்கும் என்ன விருந்தை வைக்க முடியும்? எப்படி வைக்க முடியும்?

எப்படியாவது முனிவர் கோபம் கொண்டு பாண்டவர்களைச் சபிக்க வேண்டும். அந்தச் சாபத்தால் பாண்டவர்கள் அழிய

வேண்டும். இதுதான் துரியோதனின் ஆசை! எப்படிப்பட்ட நல்ல ஆசை பார்த்தீர்களா ?

துர்வாச முனிவரும், சீடர்களும் பாண்டவர்கள் இருக்கும் காட்டுக்கு வந்தார்கள். "நாங்கள் உன்னைக் கண்டு, விருந்துண்ண வந்ததிருக்கிறோம். எங்களுக்கு மிகவும் பசியாக இருக்கிறது. நாங்கள் நீராடி வருவதற்குள் நீ விருந்துக்கு ஏற்பாடு செய்" என்று தருமரைப் பார்த்துச் சொல்லிவிட்டுக் குளிக்கச் சென்றார் முனிவர்.

பாண்டவர்கள் நிலை பரிதாபத்துக்கு உரியதாய் இருந்தது. "நடுக்காட்டில் ராஜபோகமான விருந்துக்கு எப்படி ஏற்பாடு செய்ய முடியும் ? அதுவும் மிகக் குறைந்த நேரத்தில் எப்படி ஏற்பாடு செய்வது ? பொருள்களுக்கு எங்கே போவது ?

"முனிவர் வந்து, விருந்து எங்கே என்றால் என்ன செய்வது ? முனிவர்களிலே கோபக்கார முனிவர் அல்லவா இந்தத் துர்வாச முனிவர்! எதற்கெடுத்தாலும் 'பிடி சாபம்!' என்று சாபம் கொடுப்பதுதானே அவரது வழக்கம்! என்ன செய்யலாம் ? " எனப் பாண்டவர்கள் நெஞ்சம் கலங்கிக் கொண்டு இருந்தார்கள்.

துர்வாச முனிவரின் சாபத்திலிருந்து தப்ப ஒரே வழி, கண்ணபிரானைச் சரண் அடைவது தான் என்று முடிவு செய்து கண்ணபிரானை நெஞ்சார்ந்த அன்போடு அழைத்தார்கள்.

ஆபத்துக் காலத்தில் உதவ கடவுளைத் தவிர யார் இருக்கிறார்கள் ?

கண்ணபிரான் தோன்றினார். கவலைக்குக் காரணத்தை அறிந்தார். திரவுபதியைப் பார்த்து, "சமைத்த பாத்திரத்தில் ஏதாவது இருக்கிறதா பார்" என்று சொன்னார். அவர்கள்

உண்பதே ஒரு வேளை. அந்த ஒரு வேளை உணவும் உண்டு முடிந்தாகி விட்டது. பாத்திரத்தில் ஒரே ஒரு சோற்றுப் பருக்கை மட்டும் தான் மீதம் இருந்தது.

அந்த சோற்றைத் திரவுபதி அன்புடன் கிருஷ்ணருக்கு வழங்கினாள். கிருஷ்ண பரமாத்மா அந்த ஒற்றைப் பருக்கையை உண்டார். மன நிறைவு கொண்டார்.

உடனே குளித்துக் கொண்டிருந்த துர்வாச முனிவருக்கும் அவருடைய கூட்டத்தினருக்கும் வயிறு நிரம்பியது.

ஒற்றைப் பருக்கை கூட உண்ண முடியாது என்ற நிலை ஏற்பட்டது. அறுசுவை உணவு உண்ட ஆனந்தம் ஏற்பட்டது. துர்வாசரும், அவருடைய சீடர்களும் பாண்டவர்களிடம் வந்தார்கள். துரியோதனன் சூழ்ச்சியாகத் தங்களை அனுப்பியதைச் சொன்னார்கள்.

'தர்மரே! உமக்கு வேண்டிய வரத்தைக் கேளும்; பெற்றுக் கொள்ளும்!' என்றார் துர்வாசர்.

'துரியோதனனும் அவருடைய சகோதரர்களும் செய்த வஞ்சகச் செயலைப் பொருட்படுத்தாதீர்கள். அவர்கள் மீது நீங்கள் கோபம் கொண்டு சாபத்தைத் தந்து விடாதீர்கள்' என்று தருமர் கேட்டுக் கொண்டாராம்.

---

**06.09.2005** அன்று நீலகிரி மாவட்டம், சிங்காராவில் நடைபெற்ற பைக்காரா இறுதிநிலை புனல் மின் நிலைய திறப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

# ஆக்கும் சக்தி



**ஒ**ரு காட்டில் விலங்குகளுக்கிடையே ஒரு போட்டி. செயற்கரிய செயல் செய்பவர் யார் என்பதில் போட்டி.

மூன்று மாத கால அவகாசம் தரப்பட்டது. அதற்குள் எல்லா விலங்குகளும் ஏதாவது சிறப்பு மிக்க செயலைச் செய்து முடித்திருக்க வேண்டும். அந்தச் செயல்களில் எது செயற்கரிய செயல் என்பதை எல்லா விலங்குகளும் கூடி முடிவு செய்யும். எந்த விலங்கு அப்படிச் செயற்கரிய செயலைச் செய்து முடித்திருக்கிறதோ அந்த விலங்குக்கு, சாதனையாளர் விருது வழங்கப்படும். இதுதான் விலங்குகளின் தீர்மானம்! உடனே எல்லா விலங்குகளும் தீவிரமாகப் போட்டியில் இறங்கின.

அந்தக் காட்டில் ஒரு கரடி இருந்தது. அது மோசமான கரடி. அடுத்தவர் எந்த நல்ல காரியத்தைச் செய்தாலும் அதற்குப் பிடிக்காது. எல்லோரையும் மட்டம் தட்டிப் பேசும் அந்தக் கரடியை யாருக்கும் பிடிக்காது. இருந்தாலும், அந்தக் காட்டிலே அது

வயதிலே மூத்த பிராணி என்பதால் கரடியின் குதர்க்கப் புத்தியை யாரும் அவ்வளவாகக் கண்டு கொள்வதில்லை.

இதையே தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, அகம்பாவத்தில் அந்தக் கரடி அலைந்து திரிந்தது. அந்தக் கரடி மற்ற விலங்குகள் என்ன செய்து வருகின்றன என்று போய்ப் பார்த்துவிட்டு அவற்றைக் குறை கூறிக் கொண்டே இருந்தது.

ஒரு நாள், அதன் வழியில் ஒரு எறும்பு எதிர்ப்பட்டது. அது ஒரு விதையை முட்டி முட்டித் தள்ளிக் கொண்டு வந்தது.

“அற்ப எறும்பே, சௌக்கியமா? அது என்ன, ஏதோ வேப்பங்கொட்டை மாதிரி இருக்கிறதே! உன்னுடைய சக்திக்கோ, நீ ஊர்ந்து கொண்டு போவதே பெரிய காரியம். இந்த இலட்சணத்தில் தள்ள முடியாமல் அந்த வேப்பங்கொட்டையைத் தள்ளிக் கொண்டு போகிறாயே, அதைக் கொண்டு போய் என்ன செய்யப் போகிறாா்? உனக்கெல்லாம் ஏன் இந்த வீண் ஆசை?” என்று எறும்பைப் பார்த்து அலட்சியமாய்ப் பேசியது கரடி.

எறும்பு பதில் ஏதும் கூறவில்லை; தன் பாதையிலே மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது.

மூன்று மாதம் முடிந்தது. விருதுக்கு உரியவர் யார் என்று தேர்ந்தெடுக்கும் நாளும் வந்தது.

ஒவ்வொரு இடத்திலும் ஏதாவது சிறப்பான செயல் செய்யப்பட்டிருந்தது. எல்லாமே சாதனைகள்தான்! கடைசியாக எறும்பின் இடத்திற்கு விலங்குகள் வந்தபோது அவற்றுக்கு ஆச்சரியமோ ஆச்சரியம்! ஏனென்றால், கண்ணுக்கு எட்டிய தூரம் வரை அங்கே வேப்பங்கன்றுகள் முளைத்திருந்தன. இது எவ்வாறு சாத்தியம் ஆயிற்று என்று மற்ற விலங்குகள் எறும்பை வினவின.

“நான் காட்டிலே தேடித் தேடி வேப்பங் கொட்டைகளை ஒவ்வொன்றாகக் கொண்டு வந்து இங்கே மண்ணில் புதைத்து வைத்தேன். மழை வந்தது. மண்ணில் புதைத்து வைத்திருந்த

வேப்பங் கொட்டைகளில் இருந்து சின்னஞ்சிறு செடிகள் வெளி வந்தன. நாளடைவில் செடிகள் பெரிதாகி இப்போது எங்கு பார்த்தாலும் பசுமையாக உள்ளது'' என்று எறும்பு சொன்னது.

எல்லா விலங்குகளுக்கும் ஏகப்பட்ட மகிழ்ச்சி, "இந்தச் செடிகள் எல்லாம் மரம் ஆகும். பெரிய சோலை உருவாகும். நம் காடு, மிகப் பெரிய காடாக ஆகி விடும். இதுதான் பெரிய செயல், சிறந்த செயல்! இந்த எறும்பு தன்னுடைய உழைப்பால், உள்ளத்தின் உறுதியால் இந்தச் சாதனையைப் படைத்துள்ளது. எனவே, இந்த எறும்புக்குத் தான் சாதனையாளர் விருது தரப்பட வேண்டும்" என்று ஏகமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றின.

அந்த நேரம் பார்த்து அந்தக் கரடி அங்கே வந்தது !

"இது எல்லாம் என்ன பெரிய சாதனை ? இதோ பாருங்கள் என்னுடைய சாதனையை!'' என்று கூறிக் கொண்டே, கரடி அங்கே இருந்த ஒரு உயரமான மரத்தை வேகமாக அசைத்தது. இப்படி அசைத்து அசைத்தே மரத்தை வேரோடு வீழ்த்தி விட்டது.

"இப்போது சொல்லுங்க! எது பெரிய சாதனை ? என்னுடைய சாதனையா ?'' இந்த எறும்பின் சாதனையா ?'' என்று உரக்கக் கத்தியது கரடி.

வெறுப்பில் முகத்தைத் திருப்பிக் கொண்டன விலங்குகள், பின்—

"அழிக்கும் சக்தி பெரிதல்ல, ஆக்கும் சக்தி தான் பெரிது. அதனால் எறும்பின் சாதனை தான் விருதுக்குரியது'' என்று ஒருமித்த குரலில் கூறின.

---

**09.09.2005** அன்று தஞ்சாவூர் மாவட்ட அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# மூங்கிலின் வளர்ச்சி

**ஓ**ர் ஊரில் மூங்கில் வளர்ப்பதற்காக மூங்கில் கன்று ஒன்றை நட்டார்கள். அதற்கு நீருற்றி உரமிட்டுக் கவனமாக வளர்த்து வந்தார்கள்.

ஓர் ஆண்டு ஆயிற்று, இரண்டு ஆண்டுகள் ஆயின, மூன்று ஆண்டுகள் ஆயின. மூங்கில் தழைக்கக் காணோம். நான்கு ஆண்டுகள் ஆயின. வளர்வதற்கான அடையாளம் கூட மூங்கிலிடத்தில் இல்லை.

ஐந்தாம் ஆண்டும் வந்தது, மூங்கில் வளரவில்லை. திடீரென ஒரு நாள் மூங்கிலில் ஒரு மாற்றம். அது கொஞ்சம் வளர்ந்திருந்தது. அன்றிலிருந்து ஆறு வாரத்தில் – ஆறே வாரத்தில் அந்த மூங்கில் 90 அடி உயர்ந்து விட்டது. ஆறு வாரத்தில் 90 அடி வளர்ந்து விட்டதாக எல்லோரும் பேசிக் கொண்டார்கள். அது உண்மையா ? இல்லை !

ஆறு வாரத்திலா அது வளர்ச்சி அடைந்தது ? இல்லை ! 5 ஆண்டுகளில் வளர்ந்தது ! அதன் வளர்ச்சி வெளியே தெரியவில்லை. ஆனாலும் அது வளர்ந்து கொண்டுதான் இருந்தது. மூங்கில்களுக்கு நான்கு ஆண்டுகள் வரை பூமிக்கு அடியில் வேர் பாகத்தில்தான் வளர்ச்சி இருக்கும். அதன் பிறகுதான் அந்த மூங்கில் போத்து பூமிக்கு மேலே வளர்ச்சி காணத் தொடங்கும்.

அப்படி அது வேர்விட்டு வளர்ந்தது வெளியே தெரியவில்லை; அவ்வளவுதான் அதன் வெளி வளர்ச்சி இப்போதுதான் தெரிகிறது. அதனால் அதனை நான்காண்டுகள் வளர்த்தது வீண் என்று அறிவுள்ள எவரும் சொல்வாரா ? சொல்லமாட்டார் !



அப்படி நான்கு ஆண்டுகள் பொறுமையாக நீருற்றி, உரமிட்டுப் பாதுகாத்து வளர்த்தால்தான் ஐந்தாம் ஆண்டில் அந்த மூங்கில் வளர்ந்தது. ஐந்தாம் ஆண்டில் ஆறு வாரங்களில் **90** அடி உயரத்திற்கு அந்த மூங்கிலால் வளர முடிந்தது.

கல்லும் முள்ளுமாகக் கிடந்த நிலத்தைப் பண்படுத்தி, நீர் ஆதாரத்துக்கு ஏற்பாடு செய்து, கொஞ்சம் கூடச் சோம்பல் இல்லாமல் உழைத்து, நீர் ஊற்றி, உரமிட்டதால்தான் ஐந்தாம் ஆண்டில் அது **90** அடி வளர்ந்தது.

---

**5.10.2005** சென்னை நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற
மாநில உழவர் மாநாட்டில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

# கெட்டிக்காரன்

**ஒ**ரு வணிக நிறுவனத்திலிருந்து இன்னொரு வணிக நிறுவனத்திற்கு ஒருவன் பணி ஆற்றச் சென்றான். வந்து சேர்ந்திருக்கும் ஆள் எப்படிப்பட்டவன் என்பதை அறிய, புதிய நிறுவனத்தின் மேலாளர் பழைய நிறுவனத்தின் மேலாளரிடம் பேசினார்.

“இந்த ஆள் எப்படிப்பட்டவன் ?” என்று கேட்டார்.

“கெட்டிக்காரன்“ என்று பதில் சொன்னார் பழைய மேலாளர்.



“எத்தனை ஆண்டுகள் உங்கள் நிறுவனத்தில் இவன் பணி செய்தான் ? என்று கேட்டார் புதிய நிறுவனத்தின் மேலாளர்.

“நான்கு மாதங்கள்” என்று பதில் சொன்னார் பழைய நிறுவனத்தின் மேலாளர்.

“என்ன ? 4 மாதங்களா ? நான்கு ஆண்டுகள் என்றல்லவா இவன் எங்களிடம் சொன்னான் ? என்று கொந்தளித்தார் புது நிறுவனத்தின் மேலாளர்.

“அவன் சொல்வது உண்மைதான். ஆனால், அவன் பணி செய்த நாட்கள் நான்கு மாதங்கள் தான்“ என்று நிதானமாகச் சொன்னார் பழைய நிறுவனத்தின் மேலாளர்.

எது உண்மை ? 4 மாதங்களா ? 4 ஆண்டுகளா ?

ஏதாவது ஒன்றுதானே உண்மையாக இருக்க முடியும் ?

இல்லை! இரண்டும் ஏக காலத்தில் உண்மை! அது தான் இரண்டு மேலாளர்களும் பேசிக் கொண்டதில் கிடைத்த தகவல்.

அவன் நான்கு மாதங்கள்தான் அங்கே இருந்தான். ஆனால், நான்கு ஆண்டுகளில் செய்து முடிக்கப்பட வேண்டிய கணக்குப் பணிகளை நான்கே மாதங்களில் செய்து முடித்தான்.

எனவே, இரண்டும் உண்மைதானே ?

---

13.10.2005 அன்று சென்னையில் நடைபெற்ற
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின்
பவள விழா நிகழ்ச்சியில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

# மனிதனின் மதிப்பு

**ஒ**ரு சீடன் தன்னுடைய குருவிடம், "மனிதனுடைய மதிப்பு எவ்வளவு ? என்பதை நீங்கள் தெளிவுபடுத்த வேண்டும்" என்று கேட்டான்.

அதற்கு குரு, தன்னிடம் உள்ள ஒரு வைரக் கல்லைக் கொடுத்து "இதைக் கடை வீதிக்கு எடுத்துச் சென்று, பல வியாபாரிகளிடம் காண்பித்து, இதனுடைய மதிப்பு என்ன என்பதை அறிந்து வா" என்றார். "எக்காரணத்தைக் கொண்டும் இதை விற்கக் கூடாது" என்றும் அறிவுறுத்தினார்.

சீடனும் கடை வீதிக்குச் சென்றான். ஒரு ஆரஞ்சுப் பழ வியாபாரியிடம் வைரக் கல்லைக் காண்பித்து, "இதை நான் விற்க



விரும்புகிறேன். நீங்கள் என்ன விலை கொடுப்பீர்கள்?'' என்று கேட்டான். ''இரண்டு ஆரஞ்சுப் பழங்களைக் கொடுக்கிறேன்'' என்றார் அந்தப் பழ வியாபாரி.

பின்னர், உருளைக்கிழங்கு வியாபாரியிடம், அந்த வைரக் கல்லை காண்பித்து, ''இதை நான் விற்க விரும்புகிறேன். நீங்கள் என்ன விலை கொடுப்பீர்கள்?'' என்று கேட்டான். ''நான்கு கிலோ உருளைக்கிழங்கு தருகிறேன்'' என்று அந்த வியாபாரி தெரிவித்தார்.

இதே போன்று, மளிகைக் கடை வியாபாரியிடம் சென்று கேட்டான். அவர் கொஞ்சம் அரிசியும், பருப்பும் தருவதாகக் கூறினார்.

தங்க நகை வியாபாரியோ ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகக் கூறினார்.

கடைசியாக, பெரிய வைர வியாபாரியிடம் சென்று அந்த வைரக் கல்லைக் காண்பித்தான். அவர் பரிசோதனை செய்து, ''இது நல்ல வைரம். இதற்கு எவ்வளவு விலை வேண்டுமானாலும் கொடுக்கலாம்'' என்றார்.

சீடனுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. தன் குருவிடம் சென்று, நடந்த எல்லா நிகழ்ச்சிகளையும் எடுத்துக் கூறினான். அவர் புன்னகை செய்தபடியே, ''ஒரு மனிதன் தன்னை இரண்டு ஆரஞ்சுப் பழங்களுக்கும் விற்றுக் கொள்ளலாம். நான்கு கிலோ உருளைக்கிழங்கிற்கும் விற்றுக் கொள்ளலாம். கொஞ்சம் அரிசி, பருப்புக்கும் விற்றுக் கொள்ளலாம். ஆயிரம் ரூபாய்க்கும் விற்றுக் கொள்ளலாம். ஆனால், மனிதன் கிடைத்தற்கரிய வைரம்'' என்று கூறினார் குரு.

---

**19. 06.2011** அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற அரசு விழாவில்,
மாண்புமிகு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

# பரிசு படுத்திய பாடு

ஒரு ஊரிலே புதிதாக ஒரு பாலம் கட்டினார்கள். ஒரு விழா ஏற்பாடு செய்து, பாலத்தை அமைச்சர் திறந்து வைத்து, போக்குவரத்தை ஆரம்பித்து வைத்தார்.

அந்தப் பாலத்தைக் கட்டிய அதிகாரிகளும், காண்டிராக்டரும், இந்தப் புதிய பாலத்தைப் பயன்படுத்தும் மக்களுக்கு ஒரு ஆச்சர்யத்தை அளிக்க விரும்பினார்கள். அதாவது, அந்தப் பாலத்தின் மேல் 100–ஆவதாக வரும் வாகனத்தை நிறுத்தி, பரிசுத் தொகையாக 10,000 ரூபாய் கொடுத்து, ஆச்சர்யப்படுத்துவது அவர்களது திட்டம்.

100–ஆவது வாகனமாக ஒரு கார் வந்தது. பாலம் முடிவில் நின்று கொண்டிருந்த அதிகாரிகள், அந்தக் காரை



நிறுத்தி, காரை ஓட்டி வந்தவரிடம் **10,000** ரூபாய் பரிசுத் தொகையாக வழங்கினார்கள். அந்தக் காரை ஓட்டி வந்த நபர் மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப் போனார். அப்போது, அங்கிருந்த பத்திரிகையாளர்கள், அவரிடம், “இந்தப் பணத்தைக் கொண்டு என்ன செய்யப் போறீங்க**?**” என்று கேட்டனர். காரை ஓட்டி வந்த அந்த நபர் சிறிது தடுமாறி விட்டு, பின்னர், “முதல்ல ஒரு driving licence வாங்கணும்” என்று கூறினார். அதைக் கேட்ட எல்லோருக்கும் அதிர்ச்சி. “அப்படின்னா, இந்த ஆள் licence இல்லாமலா கார் ஓட்டிகிட்டு வராரு**?**” என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர். காருக்குள் இருந்த அவருடைய மனைவி நிலைமையை சமாளிக்கப் பார்த்து, வாயைத் திறந்தார். “அய்யா, அவர் சொல்றதை நம்பாதீங்க. அவர் குடி போதையிலே இருக்கும்போது இப்படித்தான் ஏதாவது உளறுவார்” என்று கூறினார். அங்கே இருந்தவர்களுக்கு மேலும் அதிர்ச்சி. “இந்த ஆள் குடிச்சிட்டு வேற வண்டி ஓட்டுகிறாரா**?**” என்று திகைப்பு அடைந்தனர். காருக்குள் இருந்த அவருடைய தந்தை இவற்றைக் கவனித்தார். அவருக்குக் காது சரியாகக் கேட்காது. காருக்கு வெளியே நிலைமை ஏதோ சரி இல்லை என்பதைப் புரிந்து கொண்டார். “இதுக்குத்தான் அப்பவே சொன்னேன்... திருட்டுக் காரை அதிகாரிகள் இருக்கிற இடத்துக்கிட்ட ஓட்டிக் கொண்டு போகாதே என்று ! அதைக் கேட்கலை ... இப்போ மாட்டிக்கிட்டு முழிக்கிறான்” என்று கூறினார். “இது திருட்டுக் கார் வேறயா**?**” என்று அதிகாரிகளுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் மயக்கமே வந்து விட்டது.

---

**15.9.2011** அன்று திருவள்ளூர் மாவட்டம்,
காக்களூரில் சிறப்புத் திட்டங்களைத் தொடங்கி வைத்து
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

# ஊர் வாய்



**பெ**ருஞ்செல்வந்தரான பட்டினத்தார், தன்னுடைய சொத்துக்களை அப்படியே விட்டுவிட்டு துறவறம் பூண்டவர். கௌதம புத்தருக்கு இணையாகத் தமிழகத்திலே கருதப் படுகின்றவர். இவர் ஒரு நாள் நடந்த களைப்பால், மேல் சட்டை போடாமல் வயலில் படுத்துக் கொண்டிருந்தார். அறுவடை நடந்திருந்த வயல் அது. குச்சி குச்சியாய்ப் பூமியில் இருந்து கிளம்பி அறுபடாதிருந்த வைக்கோல், அவர் உடம்பைக் குத்திக் கொண்டிருந்தது. அதைச் சட்டை செய்யாமல், வரப்பு மீது தலை வைத்துப் படுத்துக் கொண்டிருந்தார்.

அந்த வழியாகப் போன இரண்டு பேரில் ஒருவர், "யாரோ மகான்" என்று கூறி அவரை வணங்கி, வரப்பிலிருந்து இறங்கி

நடந்தார். மற்றொருவர், ‘‘ஆமாம், ஆமாம். இவர் பெரிய சாமியாராக்கும்! தலையணை வைச்சுத் தூங்குற சுகம் மாதிரி வரப்பு மேல தலை வைச்சுத் தூங்குகிறார் பாரு! ஆசை பிடித்தவர்’’ எனத் தூற்றினார். அவர்கள் அங்கிருந்து போனதும் எழுந்து உட்கார்ந்த பட்டினத்தார், ‘‘நமக்கு இது தோன்றவில்லையே’’ என்று வருத்தப்பட்டு, வரப்பிலிருந்து தலையைக் கீழே வைத்துப் படுத்தார்.

சற்று நேரத்தில், அந்த இருவரும் அதே வழியாகத் திரும்பி வந்தனர். வரப்பிலிருந்து தலையை இறக்கிக் கீழே வைத்திருந்த பட்டினத்தாரைப் பார்த்து, முதல் நபர் ‘‘பார்த்தியா, நீ சொன்னதைக் கேட்டு உடனே அவர் கீழே இறங்கிப் படுத்துவிட்டார். இப்பவாவது ஒத்துக்கொள் இவர் மகான் தானே?’’ என்றார். மற்றவரோ, ‘‘இவனெல்லாம் ஒரு சாமியாரா? தன்னைப் பற்றி, யார் யார், என்னென்ன பேசுகிறார்கள் என்று ஒட்டுக் கேட்கிறார்’’ என்று கேலி செய்தார். பட்டினத்தாருக்கே தலை சுற்றியது.

---

**13.02.2012** அன்று திருச்சி,
ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில்
மாண்புமிகு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

# தன்வினை தன்னைச் சுடும்

ஒரு ஊரில் இருந்த ஒரு பெரிய குளத்தில் நிறைய மீன்கள் இருந்தன. குளத்திலிருந்து தண்ணீர் வெளியே செல்வதற்காக அமைக்கப்பட்ட மதகின் பக்கத்தில் இருந்து கொண்டு, ஒரு கொக்கு, மீன்கள் ஏமாந்த நேரத்தில் யாருக்கும் தெரியாமல் மீன்களைப் பிடித்துத் தின்று வந்தது. ஒரு நாள், இந்தக் கொக்கு மிகுந்த துயரமுடன் இருப்பது போல் குளத்தின் கரையில் வந்து அமர்ந்து கொண்டது.



இவ்வாறு சோகமாக இருந்த அந்தக் கொக்கிடம், ஒரு நண்டு வந்து கொக்கின் துயரம் என்னவென்று கேட்டது. “ஒன்றுமில்லை. இந்தக் குளத்தினைக் குத்தகை எடுத்தவர், தண்ணீரை இறைத்துவிட்டு, இந்த மீன்களைப் பிடித்துச் சென்று விடுவாராம். இதனால் மீன்களின் கதி என்னவாகுமோ ? என்ற கவலையில்தான் நான் சோகமாக உள்ளேன்” எனக் கூறியது அந்தக் கொக்கு. இதனை உண்மை என்று நம்பிய நண்டு, இதைக் குளத்திலுள்ள மீன்களிடத்தில் கூறியது. இதனால் கவலையடைந்த மீன்கள், இனி என்ன செய்யலாம் என அந்தக் கொக்கிடம் சென்று ஆலோசனை கேட்டன. அதற்கு அந்தக் கொக்கு, “நான் சிரமம் பார்க்காமல், கொஞ்சம் தொலைவில் உள்ள குளத்திற்கு மீன்களையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துச் சென்று, சேர்த்து விடுகிறேன். மீன்கள் கவலையின்றி வாழலாம்” எனக் கூறியது. இதனை நம்பிய மீன்கள், இந்தத் திட்டத்திற்கு இணங்கியது. கொக்கு, மீன்களை ஒவ்வொன்றாக, கொஞ்சம் தொலைவில் உள்ள குளத்திற்கு எடுத்துச் செல்வது போல் சென்று, குளத்தின் அருகில் உள்ள பாறையின் மீது வைத்துத் தின்றுவிட்டு, மீண்டும் பறந்து வந்து, அடுத்த மீனைத் தூக்கிச் சென்றது. இவ்விதமாக கொக்கிற்கு, எவ்வித சிரமமும் இல்லாமல், தினமும் நல்ல விருந்து கிடைத்தது. ஒரு நாள் நண்டு, தன்னையும் அந்தக் குளத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் எனக் கேட்டது. இதற்கும் கொக்கு சம்மதித்தது. நண்டு, கொக்கின் கழுத்தில் மாலை போன்று தொங்கிக் கொண்டது. கொக்கு பறக்க ஆரம்பித்தது. தாழ்வாகப் பறந்துச் சென்ற கொக்கின் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த நண்டு,

கொஞ்சம் தொலைவிலுள்ள பாறையைப் பார்த்தது. பாறையில் ஆங்காங்கே, மீன்களின் முட்கள் நிறைய கிடப்பதைப் பார்த்து, கொக்கு அந்த மீன்களைத் தின்று விட்டது என்பதை உணர்ந்தது. இனிமேல் கொக்கினை உயிருடன் விட்டு வைக்கக் கூடாது என்று எண்ணிய நண்டு, தனது கொடுக்குகளினால் கொக்கின் கழுத்தினைப் பிடித்து, இறுக்க ஆரம்பித்ததும், கொக்கு துடி துடிக்க ஆரம்பித்தது. பறக்க முடியாமல் கீழே விழுந்த கொக்கின் கழுத்தை இறுக்கிக் கொன்று விட்டது நண்டு. இறந்த கொக்கின் தலையைத் துண்டித்து இழுத்துக் கொண்டு பழைய குளத்திற்கு வந்தது. கொக்கின் தலையுடன் வந்த நண்டைப் பார்த்து, மீன்கள் என்னவென்று கேட்டன. அதற்கு நண்டு, கொக்கு மீன்களைக் கொன்று தின்று விட்டதைக் கூறியது.

---

13.02.2012 அன்று திருச்சி,
ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில்
மாண்புமிகு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

# கடமை உணர்வு

**ம**னித நேயத்தை மறந்து சட்டப்படி நடப்பது என்பது சரியாக இருக்காது. இதை, ஆபிரகாம் லிங்கன், அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த சமயத்தில், நடந்த ஒரு நிகழ்வு மூலம் நான் உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

'வில்லியம் ஸ்காட்' என்கிற கடமை தவறாத இராணுவ வீரன், அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றி வந்தான். அவனுடன் பணிபுரியும் நண்பனுக்கு ஒரு நாள் உடல் நலம் சரியில்லை. ஆனால், அவனுக்கு அன்று பகல் நேரத்தில், காவல் காக்க வேண்டிய பணி. அவனுக்காக இரக்கப்பட்ட ஸ்காட், தன் நண்பனுக்குப் பதிலாக, தானே காவல் காக்கும் பணியைச் செய்வதாகச் சொல்லி, அந்தப் பணியை மேற்கொண்டான்.

அன்று இரவும் ஸ்காட்டே பணிபுரிய வேண்டும் என்கிற விஷயம் தெரிய வந்தது. தொடர்ந்து கண் விழித்தால், தூக்கம் வந்துவிடும்; பின்னர் கடமையைச் சரிவர செய்ய முடியாது என்று நினைத்து, இரவுப் பணிக்கு வேறு யாரையாவது அமர்த்துமாறு தனது மேலதிகாரியிடத்தில் தெரிவித்தான். கண்டிப்புக்குப் பெயர் போன மேல் அதிகாரி, அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

வேறு வழியில்லாமல், இரவு நேரக் காவல் பணியையும் ஸ்காட் ஏற்றுக் கொண்டான். ஒரு கட்டத்தில், அவனையும் அறியாமல், அவனுடைய கண் சொக்க ஆரம்பித்தது. அந்தச் சமயத்தில் மேற்பார்வையிட வந்த அதிகாரி, ஸ்காட் தூங்குவதாக, மேலதிகாரிக்குத் தகவல் கொடுத்துவிட்டார்.



நாட்டின் எல்லையைப் பாதுகாக்கும் பணியினை மேற்கொள்ளும் போது, தூங்கும் வீரர்களுக்கு மரண தண்டனை கொடுக்கப்படுவது வழக்கம். அதன்படி, 24 மணி நேரத்தில் ஸ்காட்டை சுட்டுக் கொல்லும்படி உத்தரவு வந்துவிட்டது. ஆனால், இந்த மரண தண்டனையை ரத்து செய்யக்கூடிய அதிகாரம், அமெரிக்க ஜனாதிபதிக்குத்தான் உண்டு. உண்மையான ராணுவ வீரனான ஸ்காட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று ஆப்ரகாம் லிங்கனிடம் முறையிடப்பட்டது. பின்னர், அதற்கான உத்தரவு அன்று இரவே பிறப்பிக்கப்பட்டது.

அதன் பின்னர், வாஷிங்டனிலிருந்து புறப்பட்டு வீரர்கள் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று ஸ்காட்டை ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன் பார்த்தார். ஸ்காட்டின் தோளில் கை போட்டு, ‘‘நீ நாளைக்குச் சாகப் போவதில்லை, நாட்டைக் காக்கப் போகிறாய்’’ என்று கூறினார். மேலும், ‘‘வாஷிங்டனிலிருந்து இங்கு வந்து, போனதற்கான செலவை நீ தான் திருப்பிக் கொடுக்க வேண்டும்’’ என்று ஸ்காட்டிடம் சொன்னார்.

‘‘என் வங்கிக் கணக்கில் கொஞ்சம் பணம் இருக்கிறது. நிலத்தை அடமானம் வைத்துக் கொஞ்சம் கடன் வாங்குவேன். சம்பளத் தேதி வரைக்கும் பொறுத்து இருங்கள், சம்பளத்தையும் சேர்த்து மொத்தச் செலவையும் கொடுத்து விடுகிறேன்’’ என்று, ஸ்காட் ஜனாதிபதியிடம் கூறினார்.

உடனே, ஜனாதிபதி லிங்கன், ‘‘உன்னுடைய வங்கிச் சேமிப்பும், கடனும் என்னுடைய செலவைச் சரிக்கட்டாது. உன்னுடைய கடமைகளை நாட்டிற்கு ஒழுங்காகச் செய்தால்தான் செலவைச் சரிக்கட்ட முடியும்’’ என்று ஸ்காட்டிடம் கூறினார். ஸ்காட்டும் அப்படியே செய்வதாக உறுதிமொழி அளித்தார்.

---

**15.02.2012** அன்று சென்னை,
ஊனமாஞ்சேரியில் அமைந்துள்ள தமிழ்நாடு காவல்
உயர்பயிற்சியகத்தில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

# கருணையும் தகுதியும்

**மி**கக் கொடூரமான குற்றவாளிகளையும் மன்னித்து, விடுவித்து விடும் மனப்பாங்கு ஒரு காவல் துறை அதிகாரியிடம் இருந்தது. கொடுங் குற்றங்களைப் புரிந்த குற்றவாளிகள் மீதும் வழக்குப் பதிவு செய்யாமல், அவர்கள் திருந்த வாய்ப்பளிப்பது தான் அகிம்சை என்று அவர் நினைத்து இருந்தார். பல கொள்ளைகளை நிகழ்த்திய கடும் குற்றவாளி ஒருவன் அவர் முன் நிறுத்தப்பட்டான். அதற்கான தகுந்த ஆதாரங்களும் காட்டப்பட்டன. இருப்பினும், அந்தக் குற்றவாளிக்கும் கருணை காட்ட வேண்டும் என்ற எண்ணத்தில், குற்றவாளிக்கு அறிவுரை



வழங்கி, அவனை அனுப்பிவிட்டார். ஒரு நாள் அத்திருடன், அந்தக் காவல்துறை அதிகாரியின் வீட்டிற்கே திருடச் சென்றான். நகைகளையும், பொருட்களையும் திருடும் போது, அதிகாரியின் மனைவி அங்கு ஏற்பட்ட சத்தத்தால் விழித்துக் கொண்டுவிட்டார். அதைப் பார்த்த குற்றவாளி, சற்றும் தயங்காமல், அதிகாரியின் மனைவியையே கொன்றுவிட்டு தப்பித்துவிட்டான்.

எனவே, தகுதியானவர்களிடம்தான் கருணை காட்ட வேண்டும்.

---

15.02.2012 அன்று சென்னை,
ஊனமாஞ்சேரியில் அமைந்துள்ள தமிழ்நாடு காவல்
உயர்பயிற்சியகத்தில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

# வியாபாரத் தந்திரம்



**ஒ**ரு சிற்றூரில் கோபாலன் என்பவர் மளிகைக் கடை நடத்தி வந்தார். அவர் தனது வியாபாரத்தை நேர்மையுடன் நடத்தி வந்தார். தன் கடையில் பொருட்களை வாங்க வருவோர் விலையைக் குறைத்துக் கேட்டால், அந்தப் பொருட்கள் என்ன விலைக்கு வாங்கப்பட்டன என்பதையும்; தனக்கு எவ்வளவு லாபம் கிடைக்கும் என்பதையும் அவர் தெரிவித்து விடுவார். வியாபார நுணுக்கம் தெரியாததால் கடையில் எதிர்பார்த்த லாபம் அவருக்குக் கிட்டவில்லை.

எனவே, பக்கத்து ஊரில் வியாபார நுணுக்கம் தெரிந்து அதிக லாபம் ஈட்டும் அம்பலம் என்பவரை அணுகி, வியாபார நுணுக்கங்களைத் தன் மகன் கண்ணனுக்குக் கற்றுத் தருமாறு கேட்டார் கோபாலன். அம்பலமும், அவனுக்கு வியாபார நுணுக்கங்களைக் கற்றுத் தருவதாகக் கூறினார். இதன்படி, தன் மகன் கண்ணனை அம்பலம் கடைக்கு அனுப்பி வைத்தார் கோபாலன்.

வியாபார ரகசியத்தைக் கற்றுக் கொள்ள வந்த கண்ணனிடம், “என்னுடைய ஒவ்வொரு செயலையும் உற்றுப் பார். எதையும் மற்றவர் முன் கேட்காதே. யாரும் இல்லாதபோது கேள்”, என்று அறிவுரை வழங்கினார் அம்பலம்.

சற்றுநேரத்தில் அம்பலத்தின் கடைக்கு ஒரு வாடிக்கையாளர் வந்தார். அவர் கண்ணனிடம், “உயர் ரக புளியின் மாதிரியைக் காட்டு” என்றார். உடனே கண்ணன், உயர்ரக புளியின் மாதிரியைக் காட்டினான். வாடிக்கையாளரின் முகம் மாறியது. “இதைவிட நல்ல புளி இருக்கிறதா? விலை அதிகமாக இருந்தாலும், பரவாயில்லை” என்று கேட்டார் வாடிக்கையாளர். அதற்குக் கண்ணன், “இது தான் மிகவும் உயர்ரக புளி. இதைவிட உயர் ரகம் வேறு இல்லை” என்றான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அம்பலம், கண்ணனிடம் “இவர் இந்த ஊரில் மிகப் பெரிய மனிதர். இவருக்கு எப்பொழுதும் மிக உயர்ந்த ரக பொருட்கள்தான் பிடிக்கும். விலையைப் பற்றி அவருக்குக் கவலை இல்லை” என்று கடிந்துகொண்டு, “அந்த எவர்சில்வர் டிரம்மில் உள்ள புளியை அவருக்கு எடுத்துக் காட்டு” என்று கூறினார்.

கண்ணன் குழப்பத்துடனே உள்ளே சென்று, எவர்சில்வர் டிரம்மில் இருந்த புளியை எடுத்துக் காட்டினான். இதைப் பார்த்ததும், அந்த வாடிக்கையாளரின் முகம் தாமரை போல் மலர்ந்தது. பின்னர், அவர் தனக்குத் தேவையான புளியை வாங்கிச் சென்றார்.

வாடிக்கையாளர் சென்றதும், கண்ணன் அம்பலத்திடம், "இரண்டு புளியும் ஒரே ரகம்; ஒரே விலை தான். வேறு, வேறு டிரம்களில் இருந்தனஅவ்வளவுதானே ?" என்று கேட்டான். அதற்கு அம்பலம், "நல்ல புளி என்பதை வாடிக்கையாளர் மனதில் நான் பதியவைத்தேன். இது தான் வியாபார தந்திரம்" என்று கூறினார்.

---

**13.04.2012** அன்று சென்னைப் பல்கலைக்கழக
நூற்றாண்டு விழாமண்டபத்தில் தமிழ்ப்புத்தாண்டு விழாவில்
மாண்புமிகு முதலமைச்சர் செல்வி**ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

# நாக்கு

**உ**டலில் எத்தனையோ உறுப்புகள் இருக்கின்றன. ஆனால் இந்த உறுப்புகளிலேயே மிகவும் தலைசிறந்தது நாக்கு. அதாவது சாமர்த்தியமாக, சாதுரியமாக, திறமையாகச் செயல்படுவதில் நாக்குக்கு இணை வேறு எதுவுமே இல்லை என்று என்னால் சொல்லமுடியும். நாக்கின் நிலைமையை நீங்கள் எண்ணிப் பாருங்கள். வாயின் நடுவிலே உள்ள நாக்கைச் சுற்றி 32 பற்கள் உள்ளன. எந்தமனிதப் பிறவியாக இருந்தாலும் 32 பற்கள் இருக்கும்.

இந்த 32 பற்களும் அந்த நாக்கைக் கடித்து, குதறி, கிழித்துத் தள்ளக் கூடிய கூர்மை வாய்ந்தவை. ஆனால் இந்த சாதுரியமான, சாமர்த்தியமான நாக்கு, ஆயுட்காலம் முழுவதும் அந்த 32 பற்களுக்கு இடையிலேயே இருந்து திறமையாகச் செயல்பட்டு வெற்றிகரமாகக் காலத்தை ஓட்டுகிறது. நீங்கள் போர் வீரர்களை எடுத்துக்கொண்டாலும்கூட, போர்க் காலங்களில்தான் அவர்கள் சண்டை போடுவார்கள், போரிடுவார்கள். மற்ற நேரங்களில் அவர்கள் சென்று ஓய்வு எடுத்துக் கொள்ளமுடியும். போர் இல்லாத நேரங்களில், ஒருநாட்டில் அமைதிநிலவும் நேரங்களில் அந்தப் போர் வீரர்களுக்கு ஓய்வும் கிடைக்கும். ஆனால் இந்தமனித நாக்கிற்கு மட்டும் அப்படிப்பட்ட ஒரு ஓய்வே கிடையாது, ஒரு relief என்பதே கிடையாது. அது பிறந்தது முதல்

இறக்கும் வரைஆயுட்காலம் முழுவதும் அந்த 32 பற்களுக்கு இடையிலேயேயிருந்து செயல்பட்டாகவேண்டும். ஆக, தினம் தினம் தப்பித்தோம், பிழைத்தோம் என்றநிலையில்வாழ்கின்ற நாக்குஎத்தனைஎத்தனைபணிகளைச்செய்கிறது ? கண்டிப்பாகப் பேசவேண்டிய நேரங்களில் கண்டிப்புடன் பேசுகிறது, கட்டளை இடவேண்டிய நேரங்களில் கட்டளையிடுகிறது, கனிவாகப் பேசவேண்டிய நேரத்தில் தேன்மழை போன்ற சொற்களைப் பொழிகிறது, சிலரை மிரட்ட வேண்டிய நேரத்தில் அதையும் செய்கிறது. சுவையான, சத்தான உணவை இந்த உடலுக்கு வழங்குகிறது. பலவிதமான கடமைகளை, காரியங்களை இந்த நாக்கு திறமையாக செயலாற்றுகிறது. இவ்வளவையும் இந்த எதிரிகளுக்கு நடுவிலேயே அது செய்கின்றது.

ஆனால், அது அப்படியே தப்பித்து, தப்பித்து வெற்றிகரமாக தனது பணியை முடிக்கிறது.

---

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் 24.4.2012 அன்று
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் காவல்துறை மற்றும்
தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கை
மீதானவிவாதத்தில் கலந்து கொண்டு
ஆற்றிய உரையிலிருந்து

# புத்தி வந்தது

**ஓ**ர் ஊரில் வேலை வெட்டி இல்லாமல் ஒருவன் இருந்தான். அவனுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். மனைவியும் வந்து சேர்ந்தாள்.

ஒருநாள் மனைவி, தனது கணவனைப் பார்த்து, ‘‘சும்மாவே உட்கார்ந்து கொண்டு இருக்கிறீர்களே ? சம்பாதிக்கிற வழியைப் பாருங்கள்’’ என்றாள்.



உடனே கணவன், “அது பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். ஒரு அருமையான திட்டம் எனது மனதில் உதித்துவிட்டது” என்று கூறினான்.

“என்னதிட்டம் ?” என்று ஆவலோடு வினவினாள், அவனது மனைவி.

“ஓர் ஆட்டுக்குட்டி வாங்கப் போகிறேன்” என்றான் கணவன். “சரி” என்றாள் மனைவி.

“அதற்கான பணத்தை நீதான் உன் அப்பாவிடம் கடனாக வாங்கித் தரவேண்டும். நான் மானஸ்தன். எனக்கு ஒன்றும் இனாமாக வேண்டாம். கடன் கொடுத்தால்போதும்” என்றான்.

இந்தக் கதை நடந்த காலத்தில் உங்கள்அன்புச் சகோதரியின் அரசு இல்லை. இருந்திருந்தால், அவர்களுக்கு விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 4 ஆடுகள் கிடைத்திருக்கும்.

“ஆட்டுக்குட்டியை வாங்கி என்னசெய்யப் போகிறீர்கள் ?” என்றாள் மனைவி.

அதற்குக் கணவன், “அந்தக் குட்டிவளரும். பிறகு நிறைய குட்டிகள் போடும்” என்றான்.

“பிறகு என்ன செய்யப் போகிறீர்கள் ?” என்று கேட்டாள் மனைவி.

“அதையெல்லாம் சந்தையிலே கொண்டுபோய் விற்றுவிட்டு, அந்தக் காசுக்கு ஒரு பசுமாடு வாங்குவேன்” என்றான் கணவன்.

“அது எதற்கு ?” என்று கேட்டாள் மனைவி.

“பசுமாடு நிறைய பால் கொடுக்கும். அதைக் கொண்டு போய்

பால் பண்ணையிலே கொடுத்தால் நிறைய காசு கிடைக்கும். பாலையும் விற்கலாம், நாமும் காபி சாப்பிடலாம்; உடல்நலம் இல்லாத எனது தந்தைக்குக் குடிக்கப் பால் கொடுக்கலாம்'' என்றான் கணவன்.

உடனே மனைவி, ``அடுத்த தெருவில் இருக்கும் எங்க அம்மா வீட்டிற்கும் கொஞ்சம் பால் கொடுத்தனுப்பலாம்'' என்றாள்.

உடனே, கணவனுக்குக் கோபம் வந்துவிட்டது. ``அது எப்படி ? உங்க அம்மா வீட்டுக்கு எதற்காகக் கொடுக்கணும் ? அதெல்லாம் முடியாது.'' என்றான்.

இந்த இடத்தில் சண்டை ஆரம்பமாகிவிட்டது. இரண்டு பேரும் சத்தம் போட ஆரம்பித்துவிட்டார்கள்.

கடுமையாகச் சண்டை நடப்பதை அறிந்து, பக்கத்து வீட்டுக்காரன் ஓடி வந்தான். இவர்கள் இருவரும் வாங்காத மாட்டிற்காக சண்டை போட்டுக் கொள்கிறார்கள் என்பது அவனுக்குத் தெரியும்.

இருப்பினும், சண்டை போட்டுக் கொண்டிருக்கும் கணவன் – மனைவியைப் பார்த்து, ``உன் மாடு என் தோட்டத்தில் மேய்ந்து பயிரை எல்லாம் நாசப்படுத்திவிட்டது. பத்தாயிரம் ரூபாய் அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. நீ நஷ்டஈடு கொடுக்கவேண்டும்.'' என்று கூறினான்.

இதைக் கேட்டு அரண்டுபோன கணவன், பக்கத்து வீட்டுக்காரனைப் பார்த்து, ``நான் இன்னும் மாடே வாங்கவில்லை. உனக்குத் தோட்டமே இல்லை. மாடு எப்படி உன் தோட்டத்தில் மேயும் ? என்ன உளர்றே ?'' என்று கேட்டான்.

உடனே பக்கத்து வீட்டுக்காரன், "நீ தான் உளறுகிறாய். மாடே வாங்காமல் எப்படி உன் மனைவி அவங்க அம்மா வீட்டுக்குப் பால் கொடுத்தனுப்ப முடியுமோ; அதேபோலத்தான் அந்த மாடு இல்லாத என் தோட்டத்திலும் மேய்ந்தது" என்றான்.

அப்போதுதான் கணவனுக்குப் புத்திவந்தது. அர்த்தமே இல்லாமல் சண்டை போட்டுக் கொண்டு இருக்கிறோமே, என்பதை உணர்ந்தான்.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 18.6.2012 அன்று
திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில்
அருகில் இந்து சமயஅறநிலையத்துறையின் சார்பில் நடைபெற்ற
1006 ஜோடி மணமக்கள் திருமண விழாவில் கலந்துகொண்டு
ஆற்றிய உரையிலிருந்து......

# உண்மையான மகிழ்ச்சி

**ஓ**ர் ஊரில் வசதி படைத்த பள்ளிச் சிறுமி ஒருத்தி தனது தந்தையுடன் விளையாட்டுப் பொருட்கள் விற்கும் கடைக்குச் சென்றாள். அங்கு தனக்குப் பிடித்த விளையாட்டுப் பொம்மைகளை அவள் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில், தனது அருகில் வசதி குறைந்த ஏழைச் சிறுமி



ஒருத்தி, விலை குறைந்த பொம்மைகளை, ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்து, தனது தந்தையை நோக்குவதையும்; அந்த பொம்மைக்குரிய பணம் தன்னிடம் இல்லை என அவளது தந்தை தலையாட்டுவதையும்; இதனால் அந்த ஏழைச் சிறுமியின் முகம் வாட்டம் அடைவதையும் கடைசியாக ஒரு சாதாரண பொம்மையை எடுத்துக் கொண்ட ஏழைச் சிறுமியின் முகத்தையும் கவனித்தாள் பணக்காரச் சிறுமி.

இதனைக் கண்டு மனம் நெகிழ்ந்த பணக்காரச் சிறுமி தனக்கு வேண்டிய விளையாட்டுப் பொருட்களை எடுத்துக் கொண்டதுடன் அந்த ஏழைச் சிறுமி ஏக்கத்துடன் பார்த்துத் திருப்பி வைத்துவிட்ட பொம்மைகளையும் எடுத்துக் கொண்டாள். பின்னர், பணம் செலுத்தும் இடத்தில் அதற்கான பணத்தைக் கொடுத்த பணக்காரச் சிறுமி, கடைக்காரரிடம் ஏதோ ரகசியமாகக் கூறினாள்.

ஒரு சாதாரண பொம்மைக்கான பணத்தை ஏழைச் சிறுமி கடைக்காரரிடம் செலுத்தியவுடன் கடைக்காரர் அந்தச் சிறுமியிடம், “இன்று 500ஆவது வாடிக்கையாளருக்கு, நாங்கள் பரிசு ஒன்றைத்தர முடிவு செய்திருக்கிறோம். நீதான் அந்த 500ஆவது வாடிக்கையாளர்” எனக் கூறி, பணக்காரச் சிறுமி விலை கொடுத்திருந்த பொம்மைகளை ஏழைச் சிறுமிக்கு வழங்கினார்.

இதில் ஏழைச் சிறுமிக்கு, ஏற்பட்ட சந்தோஷத்தைப் பார்த்து மன மகிழ்ச்சியுடன், மன நிறைவுடன் அந்த பணக்காரச்

சிறுமி கடையை விட்டுச் சென்று தனது காரில் ஏறிக் கொண்டாள். பணம் கொடுத்துத் தான் வாங்கிய விளையாட்டுப் பொருட்களினால் ஏற்பட்ட மகிழ்ச்சியைவிட, அதிக மகிழ்ச்சியை அந்த ஏழைச் சிறுமியின் சிரிப்பில் கண்டாள் பணக்காரச் சிறுமி. பிறருக்குக் கொடுத்து உதவுவது தான், நமக்கு உண்மையான மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

---

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் நீலகிரி மாவட்டத்தில்
25.07.2012 அன்று பாங்க் ஆப் இந்தியாவின்
கோடநாடு காட்சி முனை ஏ.டி.எம். மற்றும் புதுப்பிக்கப்பட்ட
ஈளாடா கிளை ஆகியவற்றை திறந்து வைத்து
ஆற்றிய உரையிலிருந்து

# வியாபாரி

ஒருத்தர், விமானம் ஓட்டக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று விருப்பப்பட்டார். அதன்படி பயிற்சி எடுத்துக் கொண்டார். பயிற்சி முடிந்தவுடன் முதல் நாள் தனியாக விமானம் ஓட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே, பறக்கும் போது ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் என்ன செய்வது என்று யோசித்து, அதற்கேற்ப ஒரு பாரசூட் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தார்.

அதனால் இவர் ஒரு கடைக்குப் போனார். "ஒரு நல்ல பாரசூட் கொடுங்க", என்று கடைக்காரரிடம் கேட்டார். கடைக்காரர் பாரசூட்டை அவரிடம் கொடுத்தார். அந்தப் பாரசூட்டை வாங்கி நன்றாகப் பார்த்தார். பின்னர் கடைக்காரரைப் பார்த்து, "ஐயா, நான் இதை வாங்கிக் கொண்டு போகிறேன். நல்லதாக இருக்கிறதா என்று ஒரு முறைக்கு இரு முறை பார்த்துத் தந்தால், நலமாக இருக்கும். ஒருக்கால் நான் மேலே இருந்து குதிக்கும் போது இந்தப் பாரசூட் வேலை செய்யவில்லை என்றால் பிரச்சினையாகி விடும் அல்லவா ?" என்று கூறினார்.

உடனே அந்தக் கடைக்காரர், அவரைப் பார்த்து, "சார், அதைப் பற்றி நீங்கள் கொஞ்சம் கூடக் கவலைப்படாதீர்கள். அப்படி நீங்கள் குதிக்கிற போது, இந்தப் பாரசூட், சரியாக



விரியவில்லை என்று சொன்னால் உடனே திருப்பி எடுத்துக் கொண்டு வாங்க நான் வேறு ஒன்றை மாற்றித் தருகிறேன்'' என்று அலட்டிக் கொள்ளாமல் சொன்னார்.

---

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

நீலகிரி மாவட்டத்தில் 25.07.2012 அன்று பாங்க் ஆப் இந்தியாவின்

கோடநாடு காட்சி முனை ஏ.டி.எம். மற்றும் புதுப்பிக்கப்பட்ட

ஈளாடா கிளை ஆகியவற்றை திறந்து வைத்து ஆற்றிய உரையிலிருந்து

# தமிழனின் தன்மானம்

**த**ன்மானம் பெரிது என்று வாழ்பவன் தான் தமிழன். அப்படிப்பட்ட ஒரு நிகழ்வை இந்தத் தருணத்தில் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

சர். பிட்டி தியாகராயர் என்ற ஒரு மிகப் பெரிய அரசியல் தலைவர், பதவிக்காக எதையும் ஏற்றுக் கொள்ளும் மனோபாவம்



இல்லாதவர்.இவர் சென்னை மாநகராட்சியின் மேயராக சில காலம் இருந்தார். அந்த சமயத்தில், வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வந்திருந்தார். இளவரசரை வரவேற்பதற்காக பிரம்மாண்டமான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அப்போதைய கவர்னரான லார்டு வெல்லிங்டன் சர் தியாகராயரைப் பார்த்து, " சென்னை மாநகரின் முதல் குடிமகன் என்ற முறையில் இளவரசரை முதலில் நீங்கள்தான் வரவேற்க வேண்டும்" என்று கூறினார்.

அதற்கு சர். தியாகராயரும் சம்மதம் தெரிவித்தார். பின்னர், கவர்னரிடமிருந்து வேறு ஒரு தகவல் வந்தது.

"இளவரசரைச் சந்திக்கும் போது நீங்கள் கோட், சூட் உடையில் தான் இளவரசரை வரவேற்க வேண்டும்" என்பது தான் அந்தத் தகவல்.

உடனே, சர்.பிட்டி தியாகராயர் அரசாங்கத்திற்கு ஒரு பதில் எழுதினார் .

அதில் "என்னுடைய வெள்ளை வேட்டி, வெள்ளைக் கோட்டு, வெள்ளைத் தலைப்பாகை இந்த ஆடைகளோடு என்னை இளவரசர் பார்க்க விரும்பினால் நான் அவரை உளமார வரவேற்கிறேன். இந்த ஆடையுடன் நான் அவரைப் பார்க்க முடியாது என்று நீங்கள் முடிவெடுத்தால், இளவரசரை வரவேற்கும் பாக்கியம் எனக்கு இல்லை என்று நினைத்து அமைதி பெறுவேன். இளவரசரை வரவேற்பதற்காக நான் என்னுடைய வழக்கமான ஆடைகளை மாற்றிக் கொள்வதற்கில்லை" என்று உறுதிபடத் தெரிவித்து இருந்தார்.

அப்புறம் என்ன நடந்தது தெரியுமா ?

அந்த ஆங்கிலேய அரசு பணிந்து வந்து, அவருடைய வழக்கமான உடையிலேயே இளவரசரை வரவேற்க அனுமதி அளித்தது.

சர். தியாகராயர் நடந்து கொண்ட விதம்தான் தமிழனின் தன்மானம். அதனால்தான் பிரிட்டிஷ் அரசாங்கம் அவருடைய கோரிக்கையை ஏற்றது.

---

மாண்புமிகு முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
13.09.2012 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற விழாவில்
ஆற்றிய உரையிலிருந்து

# இருண்ட உள்ளம்

ஒரு ஊரில் ஒரு பெரும் வியாபாரி இருந்தார். அந்த வியாபாரி சில காலம் வேறொரு சிறிய வியாபாரியுடன் இணக்கமாக இருந்து வியாபாரம் செய்து வந்தார். சில காலத்திற்குப் பின் அவர்களிடையே பிணக்கு ஏற்பட்டது. உடனே, அந்தப் பெரும் வியாபாரி, இந்த சிறிய வியாபாரி தவறு செய்ததாகவும்,



தன்னை ஏமாற்றியதாகவும், அவரிடம் பணிபுரிபவர்களைக் கொத்தடிமைகளாக நடத்துவதாகவும் கூறி அவர் மீது புகார் கூறினார்.

இந்தக் குற்றச்சாட்டினால் கவலையடைந்த அந்த சிறிய வியாபாரி, தனது நண்பன் மூலம் ஒரு பெரிய வழக்கறிஞரை அணுகினான். ஆனால், அந்த வழக்கறிஞர் தன்னால் இந்த வழக்கை ஏற்று நடத்த முடியாது என்று கூறிவிட்டார். இருப்பினும், அன்று மாலை அந்த சிறிய வியாபாரி வழக்கறிஞர் வீட்டிற்குச் சென்று காத்துக் கொண்டிருந்தார். வழக்கறிஞர் வந்தவுடன், தன் வழக்கிற்காக வாதாட வேண்டும் என்று அவரிடம் மீண்டும் மன்றாடினார் அந்த வியாபாரி. அந்த வியாபாரியின் மீது பரிதாபப்பட்டு, வழக்கினை ஏற்று நடத்த சம்மதம் தெரிவித்தார் அந்த வழக்கறிஞர். வழக்கு தொடர்பான ஆவணங்களை எடுத்து வருமாறு அந்த வியாபாரியிடம் தெரிவித்தார் வழக்கறிஞர்.

இதனையடுத்து,மறுநாள்வழக்குதொடர்பான ஆவணங்களை வழக்கறிஞரிடம் ஒப்படைத்தார் அந்த வியாபாரி. ஆவணங்களைப் படித்துப் பார்த்த வழக்கறிஞர், இந்த வழக்கினைத் தன்னால் நடத்த முடியாது என்றும், நீங்கள் வேறொரு வழக்கறிஞரைப் பார்த்து கொள்ளுங்கள் என்றும் கூறினார்.

ஆனால், அந்த வியாபாரி, உங்களைத்தான் நம்பி வந்துள்ளேன்; இந்த வழக்கினை நீங்கள் தான் வெற்றிகரமாக முடித்துத் தர வேண்டும் என்று வேண்டினான். வியாபாரியின் இந்த வேண்டுகோளினைக் கேட்ட வழக்கறிஞர், தனது பிற பணிகளை ரத்து செய்துவிட்டு வியாபாரியின் வழக்கை எடுத்துக்

கொள்ள சம்மதம் தெரிவித்தார். வெகு விரைவில் வழக்கு விசாரணைக்கு வந்தது. அந்த வழக்கறிஞரின் வாதத்தால், அந்த சிறிய வியாபாரி வழக்கிலிருந்து விடுபட்டார். ஆனால், பிறகு அந்த வழக்கறிஞரைச் சந்திக்கவும் இல்லை; நன்றியும் கூறவில்லை. அந்த வியாபாரியின் நண்பன் வழக்கறிஞரின் வாதத் திறமையால்தான் இந்த வழக்கு வெற்றி பெற்றது என்றார். அதற்கு அந்த வியாபாரி என் மேல் தொடுக்கப்பட்ட வழக்கு உண்மையிலேயே பலவீனமானது. இதில் வழக்கறிஞரின் பங்கு ஒன்றும் இல்லை. பணத்திற்காகத் தான் இந்த வழக்கறிஞர் இதர பணிகளை விட்டு விட்டு வாதாடினார் என்று அந்த வியாபாரி கூறினான்.

---

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
13.09.2012 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற விழாவில்
ஆற்றிய உரையிலிருந்து

# குறிக்கோள்

"**வா**ழ்க்கையில் இலட்சியம் கொண்டிருப்பவன் ஆயிரம் தவறுகள் செய்தால், இலட்சியம் இல்லாதவன் ஐம்பதாயிரம் தவறுகள் செய்வான்" என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

ஓர் ஊரில் ஓர் ஆசிரமம். அந்த ஆசிரமத்தைச் சுற்றி ஏராளமான செடி, கொடிகளும், மாமரங்களும் இருந்தன. அந்த



ஆசிரமத்தைக் கடந்து சென்றால் அங்கே ஒரு பள்ளிக்கூடம்.

தினமும் அந்த ஆசிரமத்தின் வழியாகத்தான் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வார்கள். காலையில் மாணவர்கள் அந்த வழியாகப் பள்ளிக்குச் செல்வதையும்; மாலையில் வீடு திரும்புவதையும் ஒரு பெரியவர் கவனித்துக் கொண்டிருந்தார்.

அந்தப் பெரியவருக்கு ஓர் ஆச்சரியம்!

மாணவர்கள் காலையில் அந்த வழியாகப் போகிற போது அங்கே இருக்கும் மாமரங்களைத் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. ஒழுங்காகப் போவார்கள்.

ஆனால், மாலையில் திரும்புகிற போது அப்படி இல்லை. அவர்களுடைய குணம் முற்றிலும் மாறிவிடும். ஆளுக்கொரு கல்லைக் கையில் எடுத்துக் கொள்வார்கள். மாம்பழங்களைக் குறி வைத்துக் கற்களை எறிவார்கள். பழங்கள் கீழே விழுந்ததும் அதை எடுத்துக் கொள்வார்கள். ஒரே ஆட்டமும், பாட்டமுமாக இருக்கும்.

காலையில் ஒழுங்காகப் பள்ளிக்குப் போகும் மாணவர்கள் மாலையில் மட்டும் ஏன் இப்படிக் குறும்பு செய்கிறார்கள் என்று யோசிக்க ஆரம்பித்தார் அந்தப் பெரியவர்.

ஒரு நாள் ஒரு மாணவனைக் கூப்பிட்டார்.

அந்த மாணவனிடம் “தம்பி, காலையில் ஒழுங்காக அமைதியாகப் போகிறீர்கள். மாலையில் மட்டும் இப்படிக் கல் எறிந்து குறும்பு செய்கிறீர்களே ? ஏன் ? என்று கேட்டார்” அந்தப் பெரியவர்.

அதற்கு அந்தச் சிறுவன், “காலையிலே நாங்கள் சரியான நேரத்திற்குப் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும். பாடங்களைப்

படிக்க வேண்டும். ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். இல்லையென்றால், ஆசிரியரிடம் திட்டு வாங்க வேண்டும், உதை வாங்க வேண்டும். ஆனால், மாலையில் அப்படி இல்லை. வீட்டுக்கு எப்பொழுது வேண்டும் என்றாலும் செல்லலாம். அதனால் தான் குறும்புகள் செய்கிறோம்'' என்றான்.

இதைக் கேட்ட பிறகு தான் அந்தப் பெரியவருக்கு ஓர் உண்மை தெரிய வந்தது. இந்த மாணவர்கள் காலையில் இந்த வழியாகப் போகிற போது, ஒரு குறிக்கோளுடன் செல்கிறார்கள். அதனால் எந்தக் குறும்பும் செய்வதில்லை. ஆனால், மாலையில் திரும்புகிற போது அந்தக் குறிக்கோள் இல்லாததன் காரணமாக அவர்கள் குறும்பு செய்கிறார்கள் என்பது புரிந்தது.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

**26.10.2012** அன்று காஞ்சிபுரம் மாவட்டம்,

மேலக்கோட்டையூரில் சீருடைப் பணியாளர்களுக்கான

''உங்கள் சொந்த இல்லம்'' திட்ட வீடுகளுக்கு

அடிக்கல் நாட்டி ஆற்றிய உரையிலிருந்து

# கடன்

“கல்யாணம் பண்ணிப் பார்! வீட்டைக் கட்டிப் பார்!” என்று சொல்வார்கள். அதாவது வீடு கட்டுவது என்பது சாதாரண காரியம் அல்ல.

சொந்தமாக ஒரு வீட்டைக் கட்டியே தீர வேண்டும் என்ற குறிக்கோளுடன் வீடு கட்டிக் கொண்டு இருந்தார் ஒரு பெரியவர்.

அந்தப் பெரியவரிடம் சென்று “வீடு கட்டும் வேலைகள் நன்றாக நடக்கிறதா ?” என்று கேட்டார் ஒரு விவசாயி.



அதற்கு அந்தப் பெரியவர், ‘‘ஏதோ கட்டிக் கொண்டிருக்கிறேன். ஆனால், ரொம்ப கஷ்டமாக இருக்கிறது’’ என்றார்.

உடனே அந்த விவசாயி, ‘‘அது தான் சொந்த வீடு கட்டிக்கிட்டு இருக்கீங்களே’’ என்றார்.

அதற்கு அந்தப் பெரியவர், ‘‘கடன் வாங்கித்தான் கட்டுகிறேன். முதலில் நிலம் வாங்க கடன் வாங்கினேன். அடுத்து, கொஞ்சம் கடன் வாங்கி அதில் அஸ்திவாரம் போட்டேன். அதற்குப் பிறகு கடன் வாங்கி இடுப்பளவு சுவர் எழுப்பினேன். அப்புறம் கொஞ்சம் கடன் வாங்கினேன். இப்போது கழுத்தளவுக்கு உயர்ந்துவிட்டது,’’ என்று சொல்லிக் கொண்டே போனார்.

உடனே அந்த விவசாயி, ‘‘இப்ப எந்தளவுக்கு உயர்ந்திருக்கிறது ?’’ என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பெரியவர், ‘‘தலைக்கு மேல் போய்விட்டது’’ என்றார்.

‘‘வீடா ?’’ என்று கேட்டார் அந்த விவசாயி.

‘‘இல்லை, கடன்’’ என்றார், அந்தப் பெரியவர்.

---

# தன்னம்பிக்கை

**ஏ**ழை மனிதர் ஒருவர் தெரு வழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார். தெருவில் ஒரு பழங்கால நாணயம் கிடந்தது. அதை எடுத்துப் பார்த்தார். அந்த நாணயத்தில் துளை இருந்தது. துளையிட்ட நாணயம் கிடைத்தால் அதிர்ஷ்டம் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. எனவே, சந்தோஷமாக அதை எடுத்து தன்னுடைய சட்டைப் பையிலே பத்திரமாக வைத்துக் கொண்டார். வீட்டிற்குச் சென்ற பின் அதனை ஒரு பாலிதின் கவரில் போட்டு, அதை ஒரு துணிக் கவரில் சீல் வைத்துப் பத்திரப்படுத்திக் கொண்டார். தனக்கு வந்த அதிர்ஷ்டத்தைத் தன் மனைவியிடமும் தெரிவித்தார். அதை எப்போதும் தனது சட்டைப் பையில் வைத்துக் கொண்டு அதைத் தொட்டு பார்த்துக் கொள்வார். ஆனால், அதனை வெளியில் எடுக்க மாட்டார்.

அந்த நாணயம் தனக்கு வாழ்வில் உயர்வைத் தரும் என்று நம்பி, தனது முழுத் திறனையும் பயன்படுத்தி உழைக்க ஆரம்பித்தார். பின்னர் வியாபாரம் செய்ய ஆரம்பித்து அதிலும் வெற்றி பெற்றார். அதன் பின்னர் பல வியாபார முயற்சிகளில் ஈடுபட்டு அனைத்திலும் வெற்றி பெற்றார். பணம், பதவி, புகழ் எல்லாம் அவரை வந்து சேர்ந்தது. அவரை எல்லோரும் பாராட்ட ஆரம்பித்தார்கள். அவர் எதைத் தொட்டாலும் வெற்றி என்ற நிலைமை. எல்லாம் அந்தத் துளையிட்ட காசோட மகிமை என்று நினைத்தார் அந்த மனிதர்.

இப்படியே பல ஆண்டுகள் கழிந்தன.

ஒரு நாள் அந்த நாணயத்தைக் கண்ணாலே பார்க்க வேண்டும் என்ற ஆசை அந்த மனிதருக்கு வந்தது.



அப்போது தன் மனைவியைக் கூப்பிட்டு, “ரொம்ப நாளைக்குப் பிறகு என்னுடைய அதிர்ஷ்ட நாணயத்தை இன்றைக்கு வெளியே எடுத்துப் பார்க்கப் போகிறேன்” என்று கூறினார் அந்த மனிதர்.

உடனே மனைவி, “இப்ப அதைப் பார்க்க வேண்டாமே” என்று மெதுவாகக் கூறினார்.

“இல்லை, இல்லை! பார்த்தே தீர வேண்டும்!” என்று சொல்லி சட்டைப் பையில் கையை விட்டு கவரைத் திறந்து, நாணயத்தை வெளியே எடுத்தார் அந்த மனிதர். அவருக்கு ஒரே ஆச்சரியம். அந்த நாணயத்தில் துளையே இல்லை. அப்படியே குழம்பிப் போய் நின்றார்.

அப்பொழுது அவரது மனைவி, ‘‘உங்க சட்டை பையில் காசு இருப்பது நினைவில்லாமல் நான் தான் ஒரு நாள் உங்க சட்டை தூசியாக இருக்கு என்று ஜன்னலுக்கு வெளியே உதறினேன். அது தெருவில் விழுந்துவிட்டது. எவ்வளவோ தேடிப் பார்த்தேன். கிடைக்கவில்லை. அது இல்லை என்பது உங்களுக்குத் தெரிந்தால் வருத்தப்படுவீர்கள் என்பதற்காக வேறு ஒரு நாணயத்தை அதே போன்று கவரில் போட்டு சட்டைப் பையில் போட்டு வைத்தேன்’’ என்று கூறினாள்.

‘‘இது எப்ப நடந்தது ?’’ என்று கேட்டார் அந்த மனிதர்.

‘‘உங்களுக்குக் காசு கிடைத்த மறு நாளே இது நடந்தது’’ என்றாள் மனைவி.

இதைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

அந்த மனிதருக்கு அதிர்ஷ்டத்தைக் கொடுத்தது அந்த நாணயம் இல்லை. அவருடைய தன்னம்பிக்கை, உழைப்பு, விடாமுயற்சி. வாழ்க்கையிலே முன்னேற நினைக்கிறவர்களுக்கு தன்னம்பிக்கை மிகவும் முக்கியம். இந்தத் தன்னம்பிக்கையை மாணவ மாணவியருக்கு இளம் பருவத்திலேயே ஏற்படுத்தினால் அவர்களால் சாதிக்க முடியாதது ஏதுமில்லை.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

**13.12.2012** அன்று சென்னை, நந்தனம்,

ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வியியல் கல்லூரித் திடலில்

நடைபெற்ற ஆசிரியர்களுக்கான பணி நியமன ஆணை

மற்றும் மாணவ மாணவியர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும்

விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரையிலிருந்து......

# வெப்ப விதி

இரு நண்பர்கள் ஓர் அறையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அப்போது பால், காபி டிக்காஷன், சர்க்கரை ஆகியவற்றைத் தனித்தனியாகக் கொண்டு வந்து வைத்தார் பணியாளர். பால் கொதிநிலை சூட்டிலும், டிக்காஷன் அந்த அறையின் வெப்ப நிலையிலும் இருந்தது. அந்த சமயத்தில், அந்த நண்பர்களில் ஒருவருக்கு அவரது அலுவலக உயரதிகாரி கைபேசியில் தொடர்பு கொண்டு சில விவரங்களைக் கேட்டார்.



அந்த விவரங்களைத் தன்னிடம் உள்ள மடிக்கணினி மூலம் தேடி அந்த உயர் அதிகாரிக்கு உடனடியாக அனுப்ப வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக காபியை அருந்துவதில் தாமதம் ஏற்படும் சூழ்நிலை உருவானது. இந்தச் சூழ்நிலையில், பாலுடன் டிகாஷனைக் கலந்து வைத்தால் காபி சூடாக இருக்குமா ? அல்லது காபியையும், டிகாஷனையும் தனித்தனியே குடுவையில் வைத்திருந்தால் சூடாக இருக்குமா ? என்ற கேள்வியை மாணவர்களிடம் ஆசிரியர் கேட்டார். இதற்கு இரண்டு விதமான பதில்களும் மாணவர்களிடம் இருந்து வந்தன. ஆனால், காரணத்தை அவர்களால் விளக்க இயலவில்லை.

இதன் பின்னர், பால் அறையின் வெப்பநிலையை விட அதிக சூடாகவும், டிக்காஷன் அறையின் வெப்ப நிலையிலும் இருப்பதால், காபி சூடாக இருக்க வேண்டுமென்றால் பாலையும் டிக்காஷனையும் கலந்து காபியாக வைப்பது தான் சிறந்தது என்று ஆசிரியர் எடுத்துக் கூறி, நியூட்டனின் வெப்ப விதியை விளக்கினார்.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

**13.12.2012** அன்று சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வியியல் கல்லூரித் திடலில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான பணி நியமண ஆணை மற்றும் மாணவ, மாணவியருக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை

# உழைப்பின் பெருமை

**ஓ**ர் ஊரில் மிகப் பெரிய பணக்காரர் ஒருவர் வசித்து வந்தார். நாட்டிலேயே, தான் ஒருவர் மட்டுமே சுகபோகத்தை ஏராளமாக அனுபவிப்பதாக அந்தப் பணக்காரருக்கு நினைப்பு.

ஒரு நாள் அந்தப் பணக்காரரைத் தேடி ஒரு துறவி வந்தார். அந்தத் துறவியை அந்தப் பணக்காரர் வணங்கி உபசரித்தார்.



பின்னர் அந்தத் துறவியைப் பார்த்து, “உலகம் முழுவதும் சுற்றிய அனுபவம் உங்களுக்கு இருக்கிறது. என்னைவிட சுகத்தை அனுபவிக்கிறவர்களைத் தாங்கள் பார்த்து இருக்கிறீர்களா ?” என்று கேட்டார் அந்தப் பணக்காரர்.

இலேசாகப் புன்னகைத்த துறவி, “உன்னைவிட சுகமாக வாழ்கிறவரை வேறு எங்கும் தேட வேண்டாம். அவர் உங்கள் நாட்டிலேயே இருக்கிறார்” என்று அந்தப் பணக்காரரைப் பார்த்துக் கூறினார்.

“என் நாட்டிலா ? எங்கே ?” என்று கேட்டார் அந்தப் பணக்காரர்.

“வாருங்கள் நேரிலேயே அவரை நான் காட்டுகிறேன்”, என்றார் துறவி.

பின்னர், அந்தப் பணக்காரரை வயல்வெளிக்கு அழைத்துச் சென்றார். அப்போது கடுமையான கோடை வெயில் சுட்டெரித்துக் கொண்டிருந்தது.

அப்போது, அந்த வெய்யில் பற்றிய கவலையே இல்லாமல், வியர்வைக்கு அஞ்சாது, அறுபது வயது மதிக்கத்தக்க பெரியவர் ஓர் இளைஞனைப் போல் உழவுப் பணியை மேற்கொண்டு இருந்தார்.

அந்தப் பெரியவரைச் சுட்டிக்காட்டி, “உன்னை விட சுகம் அனுபவிக்கும் சுகபோகி”, என்று பணக்காரரிடத்தில் கூறினார் அந்தத் துறவி.

“இந்தக் கிழவன் என்னைவிட சுகபோகியா ? கேலி வேண்டாம்” என்றார், அந்தப் பணக்காரர் துறவியைப் பார்த்து.

துறவி அந்தப் பணக்காரரைப் பார்த்து, மீண்டும் புன்னகைத்தார்.

“செல்வந்தரே, இந்தத் தள்ளாத வயதிலும் அவர் உழைப்பை பாருங்கள். கடுமையான உழைப்பு. வெயிலுக்கு அஞ்சாமல் உழைத்துக் கொண்டு இருக்கிறார். இந்த உழைப்பிற்குப் பின்னே அவருக்கு நன்றாகப் பசி எடுக்கும். கூழோ, கஞ்சியோ, எதுவானாலும், அவருக்கு அமிர்தம்தான். மீண்டும் பகல் முழுவதும் உழைப்பார். அந்த உழைப்பின் களைப்பில் இரவில் நிம்மதியாக உறங்குவார். சுகபோகம் என்பது, வெயிலையும், பனியையும், புயலையும், மழையையும் ஆனந்தமாய் எதிர்கொள்ளக் கூடியது. அதை எதிர்கொள்ள, அவர் எப்போதும் தயார். உழைப்புக்குப் பின் வரும் உறக்கம்தான் சொர்க்கம். உழைக்காமல் வரும் எதுவும் சுகபோகமாகாது. இப்போது கூறுங்கள் நீங்கள் சுகபோகியா ? அல்லது அந்த உழைப்பாளி சுகபோகியா ?” என்று பணக்காரரைப் பார்த்து கேட்டார் அந்தப் பெரியவர்.

உடனே அந்தப் பணக்காரர், அந்தத் துறவியைப் பார்த்து வணங்கினார். “என்னை மன்னித்து விடுங்கள், நான் உழைக்கத் தயாராகிவிட்டேன்” என்று கூறினார்.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
**4.1.2013** அன்று நீலகிரி மாவட்டம், குந்தா வட்டம்,
எடக்காடு மட்டத்தில் நடைபெற்ற குந்தா தொழிற் கூட்டுறவுத்
தேயிலைத் தொழிற்சாலையின் பொன் விழாவில்
கலந்து கொண்டு ஆற்றிய உரை

# அறிவும் திறமையும்

**வி**யாபாரத்தில் புது யுக்தியுடன் தன்னம்பிக்கையும் சேர்ந்தால் வெற்றி நிச்சயம். ஓர் ஊரில் தனியாருக்குச் சொந்தமான வழிபாட்டுத் தலத்தில் மணி அடிக்கும் பணியை ஒருவர் செய்து கொண்டிருந்தார். அந்த வழிபாட்டுத் தலத்தை நிருவகிப்பவர்கள் கூட்டம் ஒரு நாள் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், வழிபாட்டுத் தலத்தில் பணிபுரிபவர்கள் அனைவரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. படிக்காதவர்கள் யாராவது பணிபுரிந்தால், அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டது. இதனையடுத்து, மணி அடிக்கும் பணியை மேற்கொண்டிருந்தவர் உட்பட படிக்காதவர்கள் அனைவரையும் ஆறு மாத காலத்திற்குள் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளுமாறு நிருவாகம் அறிவுறுத்தியது. இருப்பினும், மணி அடிக்கும் பணியை மேற்கொண்டிருந்தவரால், எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ள இயலவில்லை. இதனையடுத்து, நிருவாகம் அந்தப் பணியாளரை வேலையை விட்டு அகற்றியது. அந்தக் கவலையுடன் வீட்டிற்குப் புறப்பட்டவர், தலைவலி காரணமாக, “டீ” சாப்பிட நினைத்தார். வழியில் “டீ” விற்கும் கடை



எதுவும் இல்லை. உடனே அவரது சிந்தனையில் இந்த இடத்தில் சைக்கிளில் “டீ” விற்கும் நடமாடும் டீக்கடை ஒன்றைத் துவக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. மறுநாளே அதனைச் செய்தார்.

இதனையடுத்து, அந்த நபர் தின்பண்டங்கள் விற்கும் கடையை அதே பகுதியில் துவக்கினார். வியாபாரம் பெருகியது. வியாபாரத்தின் மூலம் சம்பாதித்த பணத்தைச் சேமிக்கும்

வகையில் வங்கிக் கணக்கு ஒன்றைத் துவக்கினார். வங்கியில் பணம் நிறைய சேர்ந்தது. இந்த நபரின் வங்கிக் கணக்கில் நிறைய பணம் இருப்பதை அறிந்த வங்கி மேலாளர், அந்த நபரை அழைத்து சேமிப்பு வங்கியில் உள்ள பணத்தை எடுத்து நிரந்தர வைப்புத் தொகைக் கணக்கில் போட்டால் வட்டி அதிகமாக வரும் என்று கூறினார். அதற்கு அந்த நபர் உடனே சம்மதித்தார். அதற்கான படிவத்தை வங்கி மேலாளரே பூர்த்தி செய்து கையொப்பம் இடுமாறு அந்த நபரிடம் கேட்டார். அதற்கு அந்த நபர், எனக்கு கையெழுத்திடத் தெரியாது, நான் ஒரு கைநாட்டுப் பேர்வழி என்றார். உடனே வங்கி மேலாளர், படிக்காமலேயே இவ்வளவு பணம் சம்பாதிக்கிறாயே ? படித்திருந்தால் நீ என்ன வேலை புரிந்திருப்பாய் ? என்று அந்த நபரிடம் வினவினார். அதற்கு அந்த நபர், படித்திருந்தால் வழிபாட்டுத் தலத்தில் மணி அடித்துக் கொண்டிருப்பேன் என்றார்.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

**4.1.2013** அன்று நீலகிரி மாவட்டம், குந்தா வட்டம்,
எடக்காடு மட்டத்தில் நடைபெற்ற குந்தா தொழிற் கூட்டுறவுத்
தேயிலைத் தொழிற்சாலையின் பொன் விழாவில்
கலந்து கொண்டு ஆற்றிய உரையிலிருந்து

# RôÂu U¾èhTm

**தி**ருமணமான பெண் ஒருத்தி தன் தாயாரைத் தேடி வந்தாள். அவளுடைய முகம் வருத்தமுற்றிருந்தது. கண்கள் கலங்கியிருந்தன.

தாயார் தன் மகளைப் பார்த்து, “என்ன விஷயம் ?” என்று விசாரித்தார்.

மகள் தன்னுடைய கஷ்டங்களை எல்லாம் ஒவ்வொன்றாக தாயாரிடம் சொன்னாள். “இவற்றிலிருந்து எப்படி விடுபடப் போகிறேன் என்று தெரியவில்லை” என்று கூறி தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள் மகள்.

இவற்றை எல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்ட தாயார், தன் மகளைச் சமையலறைக்கு அழைத்துச் சென்றார். மூன்று பாத்திரங்களில் தண்ணீரை ஊற்றி, எரியும் அடுப்பிலே அதையெல்லாம் எடுத்து வைத்தார். சிறிது நேரத்தில் தண்ணீர் கொதிக்க ஆரம்பித்தது. ஒரு பாத்திரத்திலே கேரட்டை எடுத்துப் போட்டார். மற்றொரு பாத்திரத்தில் முட்டையை போட்டார். இன்னொரு பாத்திரத்தில் கொஞ்சம் காப்பித்தூளைப் போட்டார்.

அந்தப் பெண்ணுக்கு எதுவும் புரியவில்லை. இருந்தாலும் அமைதியாகக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில், அந்தப் பாத்திரங்களைக் கீழே இறக்கி வைத்தார் தாயார். கேரட்டையும், முட்டையையும் எடுத்து வெளியே வைத்தார். காபியையும் ஒரு கோப்பையிலே ஊற்றினார்.

“மகளே இதெல்லாம் என்ன என்று தெரிகிறதா ?” என்று கேட்டார் தாயார்.

அதற்கு ‘‘அது கேரட், அடுத்தது முட்டை, இது காப்பி’’ என்று கூறினாள் மகள்.

‘‘சரி, கேரட்டைத் தொட்டுப் பார் எப்படியிருக்கு ?’’ என்று கேட்டார் தாயார். தொட்டுப் பார்த்து, ‘‘ரொம்ப மென்மையாக இருக்கு’’ என்று கூறினாள் மகள்.

‘‘முட்டையைத் தொட்டுப் பார்த்து எப்படியிருக்கு என்று சொல்’’ என்று கூறினார் தாயார்.

‘‘கொஞ்சம் கடினமாக இருக்கிறது’’ என்று சொன்னாள் மகள்.

அடுத்தபடியாக ‘‘காப்பியை எடுத்து குடி’’ என்றார் தாயார். காபியைக் குடித்துவிட்டு, ‘‘ரொம்ப சுவையாக இருக்கிறது’’ என்று கூறினாள் மகள்.



“எதற்கு இந்த வேடிக்கை ?” என்று தாயிடம் வினவினாள் மகள்.

அதற்கு பதில் அளித்த தாய், “மகளே கொஞ்ச நேரத்திற்கு முன்பு இந்த மூன்று பொருள்களையும் ஒரே மாதிரி தண்ணீரில் தான் கொதிக்க வைத்தோம். ஒரே நேரத்தில் கீழே இறக்கி வைத்தோம். ஆனால், ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கிறது.

“இந்த கேரட் ஆரம்பத்திலே எவ்வளவு கடினமாக இருந்தது ? ஆனால் தண்ணீரில் கொதிக்க வைத்தவுடன் தன்னுடைய இயல்பிற்கு நேர்மாறாக மென்மையானதாக மாறிவிட்டது”.

“இந்த முட்டைக்குள்ளே திரவ நிலையிலே இருந்த கரு கொதிக்க வைத்ததும் கடினமாக ஆகிவிட்டது”.

“காப்பியைப் பார். அது அந்த தண்ணீரையே சுவை மிக்க பானமாக மாற்றிவிட்டது”.

“மகளே, வாழ்க்கையில் கஷ்டங்கள் என்பது இப்படி கொதிக்க வைக்கிற மாதிரி தான். இதை நாம் எந்த ரூபத்தில் சந்திக்கப் போகிறோம் என்பதில் தான் விஷயமே இருக்கிறது.” என்று கூறினார் தாய்.

உடனே மகள் முகத்தில் தெளிவு பிறந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டாள். கவலை மறந்து போய்விட்டது. பறந்து போய்விட்டது. முகத்தில் தெளிவு பிறந்தது.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

தேனி மாவட்டம், லோயர் கேம்ப்பில்

**15.01.2013** அன்று நடைபெற்ற

கர்னல் ஜான் பென்னி குயிக் நினைவு மண்டபம்

திறப்பு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து

# துறவறம்

இளமைப் பருவத்தில் நரேந்திரனாக இருக்கும் போதே, துறவறம் மேற்கொள்ள வேண்டும் என்ற அவா சுவாமி விவேகானந்தரிடம் இருந்தது. தனக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், தனது தாயாரிடம், தனது துறவு விருப்பத்தைத் தெரிவிப்பார் சுவாமி விவேகானந்தர்.

ஒரு முறை தன் தாயாரிடம் துறவறம் மேற்கொள்ள விவேகானந்தர் அனுமதி கேட்ட போது, ‘‘சமையலறைக்குப் போய் அங்கிருந்து கத்தியை எடுத்து வா’’ என்றார் அவரது அன்னை. விவேகானந்தரும் கத்தியைக் கொண்டு வந்து கொடுத்தார். உடனே, ‘‘கொஞ்ச நாட்கள் கழியட்டும். பின்பு நீ துறவறம் மேற்கொள்ளலாம்’’ என்று தெரிவித்தார் விவேகானந்தரின் அன்னை. எப்போதெல்லாம் தன்னுடைய துறவு விருப்பத்தை சுவாமி விவேகானந்தர் தன் தாயிடம் தெரிவித்தாலும், இதையே தான் அவருடைய தாயார் சொல்லி வந்தார். துறவுக்கும், கத்திக்கும் என்ன தொடர்பு என்று விவேகானந்தருக்குப் புரியவில்லை.

ஒரு முறை இவ்வாறு சுவாமி விவேகானந்தர் கத்தியைக் கொண்டு வந்து கொடுத்ததும், ‘‘இனி நீ துறவு மேற்கொள்ளலாம்’’ என்று கூறினார் சுவாமி விவேகானந்தரின் அன்னை.

உடனே சுவாமி விவேகானந்தர், ‘‘கத்திக்கும், துறவுக்கும் உள்ள தொடர்பு என்ன ?’’ என்று தன் அன்னையிடம் வினவினார்.

விவேகானந்தரின் அன்னை ‘‘முன்பு ஒவ்வொரு முறை நான் கத்தியைக் கொண்டு வா என்று சொன்ன போதும், பாதுகாப்பான கைப்பிடியை நீ பிடித்துக் கொண்டு, ஆபத்தான கூர்மைப்

பகுதியை என் பக்கம் நீட்டுவாய். ஆபத்து பிறருக்கு, பாதுகாப்பு உனக்கு என்கிற சுயநல உணர்ச்சியின் வெளிப்பாடு அது. ஆனால் இப்போது ஆபத்தான கூர்மைப் பகுதியை நீ பிடித்துக் கொண்டு, பாதுகாப்பான கைப்பிடியை என் பக்கம் நீட்டினாய். அதாவது, பிறரைப் பாதுகாக்க வேண்டும் என்ற தியாக உணர்வு உன்னிடம் ஏற்பட்டுவிட்டது. அதனால்தான், துறவறம் மேற்கொள்ள நான் சம்மதித்தேன்'' என்று கூறினார்.

## மன உறுதி

**ஒ**ரு சமயம் சுவாமி விவேகானந்தர் லண்டன் மாநகருக்குச் சென்றிருந்தார். அங்கு இயற்கை எழில் மிகுந்த அவரது நண்பரின் பண்ணை வீட்டில் தங்கியிருந்தார். அங்கே நிறைய மாடுகள் வளர்க்கப்பட்டன.

ஒரு நாள் மாலை பண்ணை மைதானத்தில் விவேகானந்தர் நடந்து சென்று கொண்டிருந்தார். அவருடன் அவரது நண்பரும், நண்பரின் மனைவியும் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது, சற்றும் எதிர்பாராத விதமாக ஒரு மாடு அவர்களை நோக்கி சீறிப் பாய்ந்து வந்தது. அந்த மாட்டின் சீற்றத்தைக் கண்டு நடுங்கிப் போன நண்பரின் மனைவி அப்படியே மயங்கி விழுந்துவிட்டார். மனைவியைத் தூக்க நண்பர் முயன்றார். அப்போது மாடு அவர்களை நெருங்கி விட்டது. நண்பருக்கு கை, கால் ஓடவில்லை.

இன்னும் சில நொடிகள் அங்கிருந்தால் மாட்டின் கொம்புகளுக்கு இரையாக நேரிடும் என்று நினைத்த நண்பர், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓட்டம் பிடித்தார். ஆனால், சுவாமி விவேகானந்தரோ அந்த இடத்திலேயே நின்றுவிட்டார்.

சீறி வந்த மாடு சுவாமி விவேகானந்தரையும், கீழே விழுந்து கிடந்த நண்பரின் மனைவியையும் விட்டுவிட்டு ஓடிக் கொண்டிருந்த நண்பரைத் துரத்தியது.

மாடு தன்னைத் துரத்துகிறது என்பதை அறிந்த நண்பர் இன்னும் வேகமாக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடினார். மாடும் விடாமல் நண்பரைத் துரத்தியது.

என்ன செய்வது என்பதறியாமல் திகைத்த நண்பர், சட்டென்று ஒரு கட்டடத்திற்குள் புகுந்து தப்பினார். பின்னர், பண்ணை ஊழியர்கள் ஓடி வந்து மாட்டைப் பிடித்துக் கட்டிப் போட்டனர்.

விவேகானந்தர் அதன் பிறகே அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

அப்போது அவரது நண்பரும் அங்கு வந்து சேர்ந்தார். நண்பருக்கோ ஒரே திகைப்பு. அந்த சமயத்தில், நண்பரின் மனைவிக்கும் மயக்கம் தெளிந்தது.

“ஆபத்தான நேரத்திலும் துளி கூட பயமே இல்லாமல் எப்படி உங்களால் உறுதியாக நிற்க முடிந்தது?” என்று சுவாமி விவேகானந்தரைப் பார்த்து கேட்டார் நண்பர்.

அதைக் கேட்டு புன்னகை புரிந்த சுவாமி விவேகானந்தர், “நான் எதையும் வித்தியாசமாகச் செய்யவில்லை. வருவது வரட்டும் சமாளிப்போம் என்ற மன உறுதியுடன் நின்றுவிட்டேன். ஓடுபவரைக் கண்டால் துரத்திச் செல்வது மிருகங்களுக்கு உரிய குணம். அதனால்தான் மாடு, என்னை விட்டுவிட்டு ஓடிக் கொண்டிருக்கும் உங்களைத் துரத்தியது” என்று கூறினார்.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

**27–2–2013** அன்று, சென்னை விவேகானந்தர் இல்லத்தில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் **150**ஆவது பிறந்த ஆண்டு விழாவினை துவக்கிவைத்து ஆற்றிய பேருரையிலிருந்து...

# கொடை வள்ளல்

**வா**ரி வழங்குவதிலே கர்ணனுக்கு நிகர் யாருமில்லை என்பார்கள். இதன் காரணமாக யாருக்கும் இல்லாத புகழ் கர்ணனுக்கு இருந்தது.

கர்ணனின் புகழ் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே சென்றது. ஒரு நாள் துரியோதனனின் அமைச்சர், துரியோதனனிடம், "கர்ணன் ஒரு சிறிய நாட்டைத்தான் ஆள்கிறார். அந்த நாட்டைக் கொடுத்ததும் நீங்கள் தான். ஆனால் கர்ணனின் புகழ் தான் ஓங்கி இருக்கிறது – இது சரி தானா ?" என்று குதர்க்கமாக கேள்வி கேட்டார்.

துரியோதனனுக்கு, அமைச்சர் கூறுவது சரி என்று தோன்றியது. துரியோதனன் உடனே அமைச்சரைப் பார்த்து, "நானும் கர்ணன் மாதிரி புகழ் பெற ஏதாவது ஒரு யோசனையை சொல்" என்று கேட்டார்.

"மகா பிரபுவே தாங்களும் கர்ணனைப் போல் கொடை கொடுக்கத் துவங்கிவிடுங்கள். பின்னர் தங்களுக்கு 'கொடை வள்ளல்' என்ற பெயர் கிடைக்கும்", என்றார் அமைச்சர்.

துரியோதனும் "சரி, அப்படியே செய்கிறேன்" என்றார்.

உடனே அமைச்சர், ‘‘அருமையான யோசனை சொன்ன எனக்கு ஏதாவது பரிசு தரக் கூடாதா ?’’ என்று கேட்டார். அதற்கு துரியோதனன், ‘‘அதற்குத் தான் சம்பளம் தருகிறேனே’’ என்று கூறினார்.

மறு நாள், ‘‘துரியோதன மகாராசாவும் கொடை கொடுப்பார்’’, என்று அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பைக் கேள்விப்பட்டவுடன், பகவான் கிருஷ்ணர் தள்ளாத முதியவர் வேடத்தில், துரியோதனனிடம் வந்து, ‘‘அய்யா, எனக்கு ஒரு பொருள், தானமாக வேண்டும்’’, என்று கேட்டார்.

உடனே துரியோதனன், ‘‘என்ன வேண்டும் ? கேளுங்கள் தருகிறேன்’’ என்று கூறினார்.

அதற்கு அந்த முதியவர், ‘‘இன்னும் ஒரு மாதம் கழித்து இதே நாளில் வந்து நான் விரும்பும் பொருளைப் பெற்றுக் கொள்கிறேன்’’ என்று கூறினார்.

பின்னர் பகவான் கிருஷ்ணர், வருண பகவானை அழைத்து, ‘‘இன்னும் ஒரு மாதத்திற்கு தொடர்ந்து மழை பெய்ய வேண்டும்’’ என்று அறிவுறுத்தினார். ஒரு மாதத்திற்கு தொடர்ந்து அடைமழை பெய்தது.

மீண்டும் கிருஷ்ணர், முதியவர் வேடத்தில் துரியோதனனைப் பார்த்து, ‘‘நான் உங்களை முன்பே சந்தித்து எனக்குக் கொடையாக ஒரு பொருளைத் தர வேண்டும் என்று கேட்டிருந்தேன். தாங்களும், தருவதாக சொன்னீர்கள். நினைவு இருக்கிறதா ?’’ என்று கேட்டார்.

அதற்கு துரியோதனன், “நினைவு இருக்கிறது. தங்களுக்கு என்ன வேண்டும் ? கேளுங்கள்” என்று கேட்டார்.

கிருஷ்ணர், “கொடை வள்ளலே என் மகளின் திருமணத்திற்காக எனக்கு ஒரு வண்டி நிறைய காய்ந்த விறகு வேண்டும்” என்று கேட்டார்.

இதற்கு துரியோதனன், “ஒரு மாதமாக மழை பெய்து கொண்டே இருக்கிறது. நாங்களே விறகு இல்லாமல் அல்லல்பட்டுக் கொண்டு இருக்கிறோம். விறகு மட்டும் கேட்காதீர். வேறு ஏதாவது வேண்டும் என்றால் கேளுங்கள்,” என்று சினத்துடன் கூறினார்.

இதற்கு பதிலளித்த கிருஷ்ணர், “தாங்கள் எனக்கு கொடுத்த வாக்கு என்னாவது ?” என்று கேட்டார். அதற்கு துரியோதனன், “வாக்காவது, போக்காவது” என்று கூறினார்.

முதியவர் வேடத்தில் கிருஷ்ணர் அங்கிருந்து புறப்பட்டு கர்ண மகாராசாவின் அரண்மனைக்கு சென்றார்.

முதியவரைப் பார்த்த கர்ணன், முதியவருக்கு உடுத்திக் கொள்ள மாற்று உடையும்; துவட்டிக் கொள்ள துண்டும் அளிக்குமாறு உத்தரவிட்டார். முதியவரும் உலர்ந்த ஆடைகளை உடுத்திக் கொண்டார். அவருக்கு சூடான பாலும் கொடுக்கப்பட்டது.

சற்று இளைப்பாறிய முதியவர், “அய்யா, என் மகளின் திருமணத்தை முன்னிட்டு எனக்கு ஒரு வண்டி நிறைய காய்ந்த விறகு வேண்டும். அதை கொடையாக கேட்கவே நான் இங்கு வந்துள்ளேன்.” என்றார்.

உடனே கர்ணன், ‘‘நம் நாட்டில் உள்ள பாழடைந்த அரண்மனையில் நிறைய தூண்களும் உத்திரங்களும் உள்ளன. அவை மழையில் நனையாமல் காய்ந்த நிலையில் உள்ளன. அவற்றை வண்டியில் ஏற்றி, அவை நனையாமல் இருக்க, அவற்றின் மேல் ஓலைகளை கூரை போல் வேய்ந்து, முதியவரின் ஊருக்கு அனுப்பி வையுங்கள்’’ என்று அரண்மனை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

கர்ண மகாராசாவின் உத்தரவுப்படி விறகினைப் பெற்றுக் கொண்ட முதியவர், துரியோதனன் மாளிகை வழியாக சென்றார்.

‘‘பெரியவரே காய்ந்த விறகு கிடைத்து விட்டதா ?’’ என்று வினவினார் அமைச்சர். அதற்கு, ‘‘கொடை வள்ளல் கர்ண மகாராசா தான் கொடுத்தார்’’ என்று கூறினார், அந்த முதியவர்.

கொடை கொடுக்க செல்வம் மட்டும் இருந்தால் போதாது. கொடை உள்ளமும், கூர்த்த அறிவும் வேண்டும் என்னும் உண்மை துரியோதனனுடைய அமைச்சருக்கு புரிந்தது.

---

(காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில்
வெளியிடச் செய்து சாதனை படைத்த
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களுக்கு
காவேரி பாசன விவசாயிகள் சார்பில்
**09.03.2013** அன்று தஞ்சாவூரில் நடத்தப்பட்ட
நன்றி தெரிவிக்கும் விழாவில் கலந்து கொண்டு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...)

# பூனையின் பல்!



ஒரு முறை "உலகம் நல்லதா? கெட்டதா?" என்ற கேள்வியை தன் குருவிடம் கேட்டான் ஒரு சிஷ்யன்.

உடனே, "பூனையின் பல் நல்லதா? கெட்டதா?" என்று திருப்பிக் கேட்டார் குரு.

சிஷ்யன் குழம்பினார்.

கேள்விக்குப் பதில், கேள்வி தான் என்பது ஞானிகள் கையாளும் முறை.

சிஷ்யன் சிந்திக்க ஆரம்பித்தான்.

பின்னர் குரு விளக்கினார்.

பூனைக் குட்டியிடம் போய், தாய்ப் பூனையின் பல் நல்லதா ? கெட்டதா ? என்று கேட்டால், தாய் பூனையின் பல், கருணையின் இருப்பிடம் என்று சொல்லும்.

ஏனென்றால், பூனைக் குட்டி தனது தாயை முற்றிலும் நம்பியிருக்கிறது. பல சமயங்களில், தாய் பூனை, தன் குட்டியை பல்லால் கவ்விக் கொண்டு போய் பாதுகாப்பான இடத்தில் வைக்கிறது. அதற்குத் தேவையான உணவினை அளிக்கிறது. எனவே, பூனைக் குட்டிக்குப் பூனையின் பல், கருணையின் இருப்பிடமாக விளங்குகிறது.

அதே பூனையின் பல்லைப் பற்றி ஒரு எலியிடம் கேட்டால் அது என்ன சொல்லும் தெரியுமா? கடவுள், பூனைக்கு குத்தூசியைப் போன்ற பற்களைப் படைத்திருக்கிறாரே? என்ன கொடுமை? என்று கவலையோடு சொல்லும்.

அது போல, உலகம் நல்லதா, கெட்டதா என்பதும் உலகத்தைக் காண்பவரின் தன்மையைப் பொறுத்தது என்று கூறினார் குரு. சிஷ்யன் சிந்திக்கத் தொடங்கினான்.

இது பகவான் ராமகிருஷ்ணர் சொல்லிய விளக்கம்.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

**16.05.2013** அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாடு அரசின் ஈராண்டு சாதனைகளைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தமைக்கு நன்றி தெரிவித்து ஆற்றிய ஏற்புரையிலிருந்து...

# மகானின் சமாதி



ஒரு பெரிய நினைவு மண்டபம் முன்பு தந்தையும் மகனும் நின்று கொண்டிருந்தார்கள். அந்த வழியாக சென்றவர்கள் அனைவரும் "அது என்ன மண்டபம் ?" என்று விசாரித்தார்கள். "இந்த இடத்தில் ஒரு பெரிய மகான் சமாதி ஆகியிருக்கார். அதை நினைவு மண்டபமாக கட்டி இருக்கிறோம். இந்த இடத்தில்

உட்கார்ந்தாலே மன நிம்மதி கிடைக்கும்'' என்று சொன்னார்கள். அங்கு ஒரு உண்டியலையும் வைத்தார்கள். இதை உண்மை என்று நம்பி அந்த வழியாக செல்பவர்கள் அங்கு சிறிது நேரம் உட்கார்ந்து விட்டு அந்த உண்டியலில் காசையும் போட்டார்கள். பணம் நிறைய சேர்ந்தது. தந்தைக்கும், மகனுக்கும் தகராறு வந்தது.

தந்தை மகனைப் பார்த்து, ''நாம் சண்டை போட்டால் மற்றவர்கள் நம்மை தவறாக நினைப்பார்கள். எனவே, நான் உனக்கு ஒரு கழுதையையும், பணத்தையும் தருகிறேன். இதை வைத்து நீ தனியாக பிழைத்துக் கொள்'' என்றார்.

மகனும் அதற்கு சம்மதம் தெரிவித்து, கழுதையை அழைத்துக் கொண்டு அடுத்த ஊருக்கு சென்றான். வழியிலேயே அந்தக் கழுதை இறந்து விட்டது. உடனே மகனுக்கு ஒரு யோசனை பிறந்தது. அந்தக் கழுதையை சாலை ஓரத்தில் புதைத்தான். கையிலே இருந்த பணத்தை வைத்து அந்த இடத்தில் ஒரு சிறிய மண்டபம் கட்டினான். அந்த வழியாக செல்பவர்களிடம் இது ஒரு பெரிய மகானின் சமாதி என்று வழக்கம் போல கூறினான். கூட்டம் சேர ஆரம்பித்தது. உண்டியலில் பணமும் சேர்ந்தது. தந்தையை விட மகன் பெரிய ஆளாகி விட்டான்.

மகனின் வளர்ச்சியை கேள்விப்பட்ட தந்தை, ஒரு நாள் மகனைப் பார்க்கச் சென்றார். மகனைப் பார்த்து, ''எப்படி இவ்வளவு பணம் சம்பாதித்தாய்?'' என்று வினவினார். அதற்கு மகன், ''எல்லாம் உங்க ஆசீர்வாதம்'' என்று கூறினான்.

'அது எப்படி?' என்று கேட்டார் தந்தை.

அதற்கு மகன், ''நீங்க கொடுத்த கழுதை இறந்து விட்டது. அதை இங்கு புதைத்து, நீங்க கொடுத்த பணத்தை வைத்து மண்டபம் கட்டினேன். இது ஒரு பெரிய மகானின் சமாதி என்று

அனைவரிடமும் கூறினேன். ஒரு உண்டியலையும் வைத்தேன். மக்களும் அதை உண்மை என்று நம்பி காசை கொட்ட ஆரம்பித்தார்கள். நான் பணக்காரனாகி விட்டேன்'' என்று தந்தையிடம் கூறினான்.

உடனே தந்தை, ''இப்ப தான்டா நீ என் பிள்ளை'' என்று மகனிடம் சொல்லி மகிழ்ச்சி அடைந்தார்.

''ஏன் இப்படி சொல்கிறீர்கள்?'' என்று மகன் தந்தையிடம் வினவினான்.

அதற்குத் தந்தை, ''நீ இப்ப கழுதைக் குட்டியை புதைத்து மண்டபம் கட்டியிருக்கே. நம்ம ஊரில் நாம் கட்டி இருக்கிறோமே அந்த மண்டபம் அது இந்தக் கழுதைக் குட்டியோட தாயை புதைத்த இடம். அது ஒரு மகானின் சமாதி என்று அப்பகுதி மக்களிடம் பொய் சொல்லி தான் காசு சம்பாதித்து கொண்டு இருக்கிறேன்'' என்று மகனிடம் கூறினார்.

---

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், 03.06.2013 அன்று
திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில்
நடைபெற்ற அரசு விழாவில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்
நாட்டியும், முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும் மற்றும்
அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கியும்
ஆற்றிய விழாப் பேருரையிலிருந்து...

# துணிச்சல்



ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் நாள்தோறும் அதிகாலையில் மாறு வேடத்தில் சென்று யாராவது ஒருவரின் வீட்டுக் கதவைத் தட்டி அந்த வீட்டின் உரிமையாளருக்கு பரிசுப் பொருள் வழங்குவது வழக்கம்.

ஒரு நாள் விவசாயி ஒருவரின் வீட்டுக் கதவைத் தட்டினார் ராஜா. தூக்கத்தில் விவசாயி கதவைத் திறந்தவுடன் அவருக்கு

கை நிறைய பொற்காசுகளை வழங்கினார் ராஜா. இந்த பொற்காசுகளை வழங்கிவிட்டு ராஜா வெளியே வந்தவுடன் மாடு ஒன்று, அவரை முட்டி கீழே தள்ளிவிட்டது. இதனால் ராஜாவுக்கு தலையில் காயம் ஏற்பட்டது. இதைப் பார்த்ததும் ராஜாவின் காவலாளிகள் ராஜாவை அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர்.

இந்தத் தகவலை அமைச்சருக்கு தெரிவித்த காவலாளிகள் ராஜா இந்த நிலைமைக்கு ஆளாக்கப்பட்டதற்கு காரணம் அந்த விவசாயி தான் என்றும், அந்த விவசாயியை ராஜா பார்த்ததால் தான் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றும் எடுத்துக் கூறினர். அமைச்சரும் அந்த விவசாயியை வரவழைத்து மன்னர் முன் நிறுத்தினார்.

மன்னர் அந்த விவசாயிக்கு மரண தண்டனை விதித்து உத்தரவிட்டார்.

தனக்கு மரண தண்டனை என்று கேள்விபட்டதும் அந்த மனிதர் சிரித்தார்.

உடனே மன்னர் "இன்று மாலை, உனக்கு மரண தண்டனை. நீ இப்படிச் சிரிக்கிறாயே ?" என்று அந்த மனிதரைப் பார்த்து வினவினார்.

அதற்கு அந்த மனிதர் நிதானமாக பதில் கூறினார். "நீங்கள் என்னை பார்த்ததால் உங்களுக்கு தலையில் அடிபட்டுவிட்டது. அப்படிப்பட்ட சனியன் பிடித்த முகம் எனக்கு. என்னை பார்த்ததால் இந்த அளவோடு போய்விட்டது. ஆனால், நான் இன்றைக்கு முதல் தடவையாக உங்கள் முகத்திலே முழித்தேன். அதன் பலன் என்ன ? என் உயிரே போகப் போகிறது. இது தான்

மன்னராகிய உங்களின் முக இலட்சணம்!” என்று கூறினான் அந்த மனிதன்.

இதைக் கேட்ட ராஜாவின் முகம் மாறியது. அந்த மனிதருக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்து செய்து உத்தரவிட்டார். ராஜாவையே எதிர்த்துக் கேட்கக் கூடிய துணிச்சல் அந்த மனிதருக்கு இருந்ததால் அவர் உயிர் பிழைத்தது.

துணிச்சலுடன் ஈடுபாடும் சேர்ந்துவிட்டால் உங்களுக்கு வெற்றி நிச்சயம்.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்,
23.08.2013 அன்று இந்திய குடியரசுத் தலைவரின் பதக்கங்கள் மற்றும் தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய விழாப் பேருரையிலிருந்து...

# முழு ஈடுபாடு



**ஓ**ர் ஊரில் ஒரு ஞானி இருந்தார். அவரைத் தேடி சில பேர் சென்றார்கள்.

“என்ன சுவாமி ? எப்படி இருக்கிறீர்கள் ?” என்று கேட்டனர்.

அதற்கு அந்த ஞானி “நான் ஒரு சாதாரண வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறேன்” என்றார்.

“உங்கள் கொள்கை என்ன ?” என்று ஞானியிடம் கேட்டனர்.

“தியானம் செய்வது, பசி எடுத்தால் சாப்பிடுவது. தூக்கம் வந்தால் தூங்குவது. இது தான் என் கொள்கை” என்றார் ஞானி.

இதைக் கேட்டவுடன் அந்த நபர்களுக்கு ஆச்சரியம். “என்ன சுவாமி இப்படி சொல்கிறீர்கள் ? உங்கள் செயலில் எந்தத் தனித்தன்மையும் இருப்பதாகத் தெரியவில்லையே ?” என்று கேட்டனர்.

“ஆமாம்” என்றார் அந்த ஞானி.

“என்னங்க இது ? பசித்தால் சாப்பிடுவது, தூக்கம் வந்தால் தூங்குவது என்பது எல்லோரும் செய்வது தானே ?” என்று அந்த நபர்கள் கேட்டனர்.

இதைக் கேட்டதும் ஞானி சிரித்தார்.

“நீங்கள் சாப்பிடும் போது, உங்கள் மனது சாப்பாட்டில் இருக்காது. நடந்ததையும் நடக்கப் போவதையும் நினைத்துக் கொண்டு சாப்பிடுவீர்கள். உங்கள் மனம் அலைபாயும். நான் அப்படி இல்லை. தியானம் செய்யும் போது எனது மனம் தியானத்தில் தான் இருக்கும். சாப்பிடும் போது எனது சிந்தனை சாப்பாட்டில் தான் இருக்கும். அதே போல் தூங்க வேண்டும் என்றால் தூங்குவேன். எதைச் செய்கிறேனோ நான் அதுவாகி விடுவேன். அது தான் என் இயல்பு. இது தான் எனக்கும் மற்றவர்களுக்கும் இருக்கிற வேறுபாடு” என்று கூறினார் ஞானி.

இதிலிருக்கும் நீதி என்னவென்றால் செய்யும் தொழிலில் நாம் ஒன்றிப்போய் விடும் போது அந்தத் தொழில் முழுமை பெறுகிறது. அந்தத் தொழிலில் உள்ள சுமை சுமையற்றதாகி அதுவே இனிமையானதாகி விடுகிறது.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்,
**23.08.2013** அன்று இந்திய குடியரசுத் தலைவரின்
பதக்கங்கள் மற்றும் தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள்
வழங்கும் விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய விழாப்
பேருரையிலிருந்து...

# வீழ்வது எதனால்?



ஓர் ஊரில் ஒரு மனிதர் இருந்தார். அவர் நிறைய பாவங்களைச் செய்ததால், நரகப் படுகுழி என்கிற கிணற்றில் விழுந்து விட்டார். அந்த கிணற்றில், ஏற்கெனவே பாவம் செய்தவர்கள் விழுந்து

கிடந்தார்கள். உள்ளே ஏகப்பட்ட சத்தம். இப்பொழுது விழுந்த அந்த மனிதரின் சத்தம் கொஞ்சம் அதிகமாக இருந்தது.

அந்தக் கிணற்றுக்கு பக்கத்தில் ஒரு மகான் இருந்தார். இந்த மனிதர் போடுகின்ற சத்தம் அதிகமாகக் கேட்டதும், கிணற்றை எட்டிப் பார்த்தார் அந்த மகான்.

மகானை பார்த்தவுடன், அந்த மனிதர், “சுவாமி! என்னைக் காப்பாற்றுங்கள்” என்று கத்தினார்.

அந்த மனிதரைப் பார்த்ததும், மனித சமுதாயத்திற்கு அந்த மனிதர், என்னென்ன கெடுதல் செய்திருக்கிறார் என்ற விவரம் மகானின் கண் முன்னே தெரிந்தது. இருந்தாலும், அந்த மனிதரைக் காப்பாற்ற ஏதாவது வழி உண்டா என்று யோசித்தார். ஏதாவது ஒரு நல்ல காரியத்தை அந்த மனிதர், தனது வாழ் நாளில் செய்திருக்கிறாரா என்று பார்த்தார்.

ஒரு சமயம், அந்த மனிதர் தன் காலடியில் மிதிபட இருந்த சிலந்தியை, தன்னை அறியாமல், மிதிக்காமல் தாண்டி போயிருந்தது தெரிய வந்தது. இந்தச் செயலுக்காக, அந்த மனிதரைக் கரையேற்ற முடியுமா என்று சிந்தித்தார். உடனடியாக, அவர் கையில் சிலந்தி ஒன்று வந்து நின்றது. அதனிடமிருந்து, நூலிழை வெளிவர ஆரம்பித்தது. அந்த நூல் இழை, கிணற்றின் ஆழம் வரைக்கும் நீண்டு கொண்டே போயிற்று.

உடனே அந்த மகான், கிணற்றில் இருந்த மனிதரைப் பார்த்து, “இந்த நூலைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறி வா” என்றார்.

இதற்கு அந்த மனிதர், “சிலந்தி நூல், என்னைத் தாங்குமா ?” என்று கேட்டார்.

“எல்லாம் தாங்கும். அதைப் பிடித்து வா” என்றார் மகான்.

சந்தேகத்துடனேயே அந்த நூலிழையைப் பிடித்து இழுத்துப்

பார்த்தார் அந்த மனிதர். நூலிழை வலுவாக இருந்தது.

எனவே, அதைப் பிடித்துக் கொண்டு மெதுவாக ஏறி வர ஆரம்பித்தார். பாதி தூரம் வந்தவுடன், அந்த மனிதரின் காலுக்கு கீழே கொஞ்சம் சத்தம் கேட்டது. கீழே குனிந்து பார்த்தார் அந்த மனிதர். வேறு சிலரும், அந்த நூலிழையைப் பிடித்துக் கொண்டு மேலே வந்து கொண்டிருந்தார்கள்.

உடனே அந்த மனிதருக்கு கோபம் வந்தது. தன் இடுப்பில் இருந்த கத்தியை எடுத்து, தன் காலுக்கு கீழே உள்ள நூலிழையை வெட்டிவிட்டார். இனிமேல், தான் மட்டும் மேலே ஏறிவிடலாம் என்று நினைத்தார் அந்த மனிதர்.

ஆனால் நடந்தது என்ன தெரியுமா?

மொத்த நூலிழையும் அறுந்து விழுந்தது. அந்த மனிதரும் பொத்தென்று கீழே விழுந்துவிட்டார். மறுபடியும் கத்த ஆரம்பித்தார். ஏற்கெனவே தன்னை அறியாமல், அந்த மனிதர் செய்த ஒரு நற்செயல், அந்த நூலிழைக்கு உறுதியைக் கொடுத்தது. இப்போது அவர் செய்த பாவம் அந்த நூலிழையை வலுவிழக்கச் செய்துவிட்டது.

அடுத்தவர்களும் வாழ வேண்டும் என்ற எண்ணம் அந்த மனிதருக்கு இருந்திருந்தால், அந்த மனிதர் கரையேறியிருப்பார். ஆனால், அவர் அதைச் செய்யவில்லை. எனவே அதல பாதாளத்தில் வீழ்ந்து விட்டார் அந்த மனிதர்.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் 21.09.2013 அன்று சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் தமிழ்நாடு அரசும், தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையும் இணைந்து நடத்திய இந்திய திரைப்பட நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து

# உள்ளத்தில் கடவுள்



**மு**ன்னொரு காலத்தில் மன்னர் ஒருவர் ஆட்சி புரிந்து வந்தார்.

ஒரு நாள் அவர் மனதில், “கடவுள் இருக்கும் இடத்திற்கும், நமக்கும் எவ்வளவு தூரம் இருக்கும்?” என்ற வினா எழுந்தது. உடனே அரச சபையை கூட்டி அனைவரிடமும் இதற்கான விடையை வினவினார் மன்னர். யாருக்கும் இதற்கான விடை தெரியவில்லை.

இதற்கான விடையைத் தெரிந்து கொள்ள ஊருக்கு வெளியிலிருந்து ஒரு முனிவர் வரவழைக்கப்பட்டார்.

அந்த முனிவரிடம், “கடவுள் எவ்வளவு தூரத்தில் இருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா?” என்று வினவினார் மன்னர்.

அதற்கு அந்த முனிவர், "கடவுள் கூப்பிடுகிற தூரத்தில் தான் இருக்கிறார்" என்று பதில் அளித்தார்.

"அப்படியானால், கடவுளை அழைத்தால் உடனே வந்து விடுவார் அல்லவா?" என்று கேட்டார் மன்னர்.

அதற்கு அந்த முனிவர், "எந்த இடத்தில் கடவுள் இருப்பதாக நீ நினைக்கிறாயோ அதைப் பொறுத்தது" என்றார்.

"புரியும்படி கூறுங்கள்" என்று அந்த மன்னர் கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதில் அளித்த முனிவர், "துரியோதனன் சபையில் திரௌபதி அவமானப்படுத்தப்பட்ட போது, "வைகுண்ட வாசா! காப்பாற்று" என்று கிருஷ்ணரை அழைத்தாள் திரௌபதி. ஆனால் கிருஷ்ணர் வரவில்லை. "துவராகை நாயகனே!" என்னை காப்பாற்று என்று அழைத்தாள் திரௌபதி. அப்போதும் கிருஷ்ணன் வரவில்லை. "இதயத்தில் இருப்பவனே!" என்று கடைசியாக அழைத்தாள் திரௌபதி. உடனே பகவான் கிருஷ்ணர் தோன்றி திரௌபதியின் மானத்தைக் காத்தார். கடவுள் எவ்வளவு தொலைவில் இருக்கிறார் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ, அந்த நினைப்பிற்கு தகுந்தவாறு உடனே வந்து கடவுள் அருள் புரிவார். எந்த இடத்தில் இருந்தாலும் உங்களின் குரல் கடவுளுக்கு கேட்கும். உள்ளத்தில் கடவுள் இருப்பதாக நினைத்து அழைத்தால் உடனே வந்து அருள் பாலிப்பார்" என மன்னருக்கு விளக்கம் அளித்தார் அந்த முனிவர்.

---

# சிறந்த மனிதர்



மன்னரிடம் பரிசு கேட்டு இரு புலவர்கள் சேர்ந்து வந்தனர். மன்னர் இருவரையும் தனித் தனியாக அழைத்துப் பேசினார்.

முதல் புலவரிடம், "உங்களோடு வந்திருக்கும் புலவர் எப்படிப்பட்டவர்? என்று கேட்டார் மன்னர். அதற்கு முதல் புலவர், "அவர் ஒரு மக்கு. எருமை" என்று கூறினார். இதைக் கேட்ட மன்னர், "நன்றி புலவரே, நாளை காலை அரசவைக்கு வாருங்கள்" என்று கூறினார்.

பின்னர் இரண்டாவது புலவரை அழைத்து, "உங்களோடு வந்திருக்கும் புலவர் எப்படிப்பட்டவர்?" என்று மன்னர் கேட்டார். அதற்கு இரண்டாவது புலவர், "அவர் ஒரு மடையர், கழுதை" என்றார்.

இதைக் கேட்ட மன்னர், ‘‘நன்றி புலவரே. நாளை காலை அரச சபைக்கு வாருங்கள்’’ என்று கூறி இருவரையும் அனுப்பி வைத்தார்.

மறுநாள் சபை கூடியது. இரு புலவர்களும் வந்து காத்திருந்தனர்.

‘‘புலவர்களே, உங்களில் ஒருவரை மற்றவர் எருமை என்றும், கழுதை என்றும் நீங்கள் சொன்னீர்கள். எருமைக்கு பரிசு கொடுத்தால் கழுதைக்கு கோபம் வரும். கழுதைக்குப் பரிசு கொடுத்தால் எருமைக்கு கோபம் வரும். நானோ மனிதர்களில் சிறந்த புலவர்களுக்குப் பரிசு தருபவன். இங்கே எருமைக்கும், கழுதைக்கும் வேலையில்லை’’ என்று கூறினார் மன்னர்.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், **30.06.2014** அன்று
திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில்
நடைபெற்ற அரசு விழாவில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்
நாட்டியும், முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும் மற்றும்
அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கியும்
ஆற்றிய விழாப் பேருரையிலிருந்து...

# சில நேரம் அலை!
# சில நேரம் கரை!



ஒரு குருவும், அவரது சீடர்களும் கடலோரம் அலைகள் கரையில் மோதிச் சிதறும் காட்சியினை பார்த்துக் கொண்டு நின்றிருந்தார்கள்.

ஒரு சீடனைப் பார்த்து, ''உனக்கு என்ன தெரிகிறது ?'' என்று கேட்டார் குரு.

அதற்கு அந்தச் சீடன், ''திரும்பத் திரும்ப வந்து மோதும் அலைகளின் விடாமுயற்சி தெரிகிறது'' என்றான்.

இதே கேள்வியை மற்றொரு சீடனிடம் கேட்டார் குரு.

அதற்கு அந்தச் சீடன், "துன்பங்கள் தொடர்ந்து வந்தாலும் கரையைப் போல் உறுதியாக நின்றால் துன்பங்கள் சிதறிப் போகும்" என்றான்.

இவற்றை கேட்ட குரு "சில நேரங்களில் அலைகளாய் இரு; சில நேரங்களில் கரையாய் இரு" என்று சொன்னார்.

இந்த கதையில் வருவது போல், தமிழகத்தின் உரிமைகளை நிலைநாட்டுவதில், எனது தலைமையிலான அரசு அலைகளாயும், கரையாயும் இருந்து செயல்பட்டதால் தான் இன்று நாம் இந்த விழாவை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டத்தை முதற்கட்டமாக
142 அடியாக உயர்த்தி சாதனை படைத்தமைக்காக முல்லை பெரியாறு
பாசன விவசாயிகள் சார்பில் 22.08.2014 அன்று
மதுரையில் நடத்தப்பட்ட நன்றி தெரிவிக்கும் விழாவில்
கலந்து கொண்டு ஆற்றிய ஏற்புரை.

# மனவலிமை



ஒரு மன்னர் யானை மீது நாட்டை சுற்றி வலம் வருவதை வாடிக்கையாக வைத்திருந்தார்.

ஒவ்வொரு முறையும் மன்னர் ஒரு குறிப்பிட்ட கிராமத்திற்கு போகும் போதும், ஓர் இளைஞன் யானையின் வாலைப் பிடித்து இழுப்பதும், யானை மேலே நடக்க முடியாமல் நின்று விடுவதும் தொடர்ந்து நடந்து வந்தது.

அந்த இளைஞன் குறித்து மன்னர் விசாரித்த போது, அந்த இளைஞன் சிறு சிறு வேலைகளை செய்து, கிடைப்பதை உண்டு கவலை ஏதுமின்றி இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

பலம் வாய்ந்த யானையை, ஒரு சாதாரண இளைஞன் எப்படி இழுத்து நிறுத்துகிறான் என்று மன்னர் அமைச்சரிடம் வினவினார்.

அதற்கு அமைச்சர், இதற்கு காரணம் அவனது மன வலிமை என்றார்.

அவனது மன வலிமையை எப்படி மாற்றுவது என மன்னர் ஆலோசனை நடத்தினார்.

அப்போது அமைச்சர், "தினமும் அவனுக்கு ஒரு தங்கக் காசு சம்பளம் கொடுங்கள். மாலையில் அருகில் உள்ள திருக்கோயிலில் விளக்கு ஏற்றுவது உன் பணி என்றும், அதற்கான சம்பளமே இந்த தங்கக் காசு என்றும் சொல்லுங்கள்" என்று கூறினார்.

அந்த இளைஞனுக்கு அவ்வாறே விளக்கு ஏற்றும் பணி வழங்கப்பட்டது. தினமும் தங்கக் காசு சம்பளம் பெற்றவுடன், எவ்வளவு தங்கக் காசுகள் தன்னிடம் சேர்ந்து இருக்கின்றன என்றும், 100 காசுகள் சேர்க்க இன்னும் எத்தனை நாட்கள் விளக்கு ஏற்ற வேண்டும் என்றும் கணக்கிட்டுக் கொண்டிருந்தான்.

ஒரு மாதம் கழித்து அவ்வழியாக மன்னர் யானை மீது சென்றார். அப்போதும் அந்த இளைஞன் யானை வாலைப் பிடித்து இழுத்தான். ஆனால் யானையை நிறுத்த முடியவில்லை. வாலைப் பிடித்தபடியே யானையின் இழுப்பில் பின்னாலேயே போய்க் கொண்டிருந்தான்.

இது எவ்வாறு நடந்தது என்று மன்னர் வினவினார். அதற்கு அமைச்சர், "காசைச் சேர்க்க ஆரம்பித்த உடன் அவனது கவனம் சிதறிவிட்டது. அவனுடைய மனம் பணத்தின் பக்கம் போய்விட்டது. எனவே, அவனது பலம் போய்விட்டது" என்றார்.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டத்தை முதற்கட்டமாக 142 அடியாக உயர்த்தி சாதனை படைத்தமைக்காக முல்லை பெரியாறு பாசன விவசாயிகள் சார்பில் 22.08.2014 அன்று மதுரையில் நடத்தப்பட்ட நன்றி தெரிவிக்கும் விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய ஏற்புரை.

# ஏழை கேட்ட வரம்



ஒரு ஏழையின் சிரிப்பைக் காண விரும்பிய கடவுள், அந்த ஏழையின் முன் தோன்றி, "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

அதற்கு, “பணம், செல்வம், தங்கம், வைரம்” என்று ஆசையோடு கூறினான் அந்த ஏழை.

உடனே, கடவுள் தனது வலது கை சுட்டு விரலை நீட்டினார். அங்கிருந்த பீரோ தங்கமாக மாறியது.

ஆனால் ஏழை எதுவும் பேசாமல் நின்று கொண்டு இருந்தான். கடவுள் மறுபடியும் விரலை நீட்ட, அங்கிருந்த மேஜை தங்கமானது.

அப்போதும் அந்த ஏழைக்கு திருப்தி ஏற்படவில்லை.

உடனே, கடவுள் அந்த அறையில் இருந்த அத்தனைப் பொருட்களையும் வேக வேகமாக தங்கமாக்கினார்.

அப்போதும் அந்த ஏழை சிரிக்கவில்லை.

சோர்ந்து போன கடவுள், “இன்னும் உனக்கு என்ன தான் வரம் வேண்டும் **?**” என்று கேட்டார்.

அதற்கு அந்த ஏழை, “எனக்கு அந்த விரல் வேண்டும்” என்றான்.

அந்த ஏழையின் பேச்சைக் கேட்டதும், கடவுள் மயங்கி விழுந்துவிட்டார்.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டத்தை முதற்கட்டமாக
142 அடியாக உயர்த்தி சாதனை படைத்தமைக்காக முல்லை பெரியாறு
பாசன விவசாயிகள் சார்பில் 22.08.2014 அன்று
மதுரையில் நடத்தப்பட்ட நன்றி தெரிவிக்கும் விழாவில் கலந்து
கொண்டு ஆற்றிய ஏற்புரை.